# கந்தபுராணத் திரட்டு

## உற்பத்தி காண்டம்

## (பாட்டும் பயனும்)


தொகுத்தவர்

ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

தலைமைத் தமிழ் விரிவுரையாளர்

சென்னைப் பல்கலைக்கழகம்



அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் : : சென்னை

விலை ரூபா] [1-4-0

# முகவுரை

தமிழ்நாடு தோன்றுதொட்டு முருகனை வழிபடுகின்றது. அப்பெருமானை மெய்யன்பர்கள் அழியாத அழகுவாய்ந்த குழந்தையாகக் கண்டார்கள்; வேற்படை தாங்கிய வீரனாகக் கண்டார்கள்; அரந்தை கெடுத்து வரந்தரும் ஆறுமுகனைக் கண்டார்கள்; ஆறுபடை வீடுகளில் வழிபட்டு அவர் அருளைப் பெற்றார்கள்; அசுரர்புரிந்த தீமையும் அமரர் இயற்றிய அறமும் முருகன் தோற்றத்திற்குக் காரணம் என்பர். முருகவேள் அசுரர் குலத்தை வேரறுத்து அமரர் குலத்தை வாழ்வித்த கதையை ஒரு வீரகாவியமாகப் பாடி அருளினார் கச்சியப்பர். கந்தபுராணம் என்னும் பெயரால் அவர் இயற்றிய பெருங்காப்பியம் ஆறு காண்டங்களை உடையது; பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டது. முன்னாளில் அப்பாடல்களை முற்றும் ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் முருகன் அருளைப்பெற்ற பெரியோர் பலர். ஆயினும் இக்கால நிலைக்கு ஏற்ப அக்காவியத்தில் உள்ள ஆயிரம் பாடல்களைத் தொகுத்துக் 'கந்தபுராணத் திரட்டு' என்னும் பெயரால் வெளியிடுதல் நன்று என்று எளியேன் உள்ளத்தில் தோன்றிற்று. முதற் காண்டமாகிய 'உற்பத்தி காண்டத்தில் ஆயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று பாட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் முந்நூற்று ஐம்பத்திரண்டு பாடல்களை இந்நூலில் தொகுத்து உரையும் தந்துள்ளேன். சிவநேயச் செல்வர்கள் ஆறுமுகன் அருளை வேட்டு மெய்யரும்பி, விதிர் விதிர்த்து, நோன்பியற்றும் கந்தசஷ்டி விழாவில் வெளியிடப்படும் "உற்பத்தி காண்டத் திரட்டில்" உள்ள குற்றங்களைந்து அருங்கனிகளை அன்புடன் கற்று, ஆசிகூறுமாறு அறிஞரை வேண்டுகின்றேன்.

சென்னை :
22—10—44.

**ரா. பி. சேதுப் பிள்ளை.**

உ

முருகன் துணை

# கந்தபுராணத் திரட்டு

## 1. உற்பத்தி காண்டம்

### பாட்டும் பயனும்

#### தெய்வ வணக்கம்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

#### திருக்கைலாச மலையின் பெருமை

பாசம் நீக்கித்தன் பாற்படும் நல்லருள்
ஈசன் நல்கும் இயல்பென எய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியம் குன்றமே.

---

1. அடைக்கலமாக வந்தடைந்த அடியாரது பந்தம் ஒழித்துத் தம்பாலமைந்த திருவருளைத் தரும் ஈசன் தன்மை போல், தன்னைச் சேர்ந்தாரது மேனியின் நிறத்தை மாற்றி மெய்யொளி வீசும் தகைமை வாய்ந்தது வெள்ளி மாமலை.

புரந்த ரன் முதல் ஆகிய புங்கவர்
வரம்பில் மாதவர் மாசறு காட்சியர்
நிரந்த பூத கணவர் நிரந்தரம்
பரிந்து போற்றிப் பயில்வதம் மால்வரை. 2

## உமையம்மை இமையம் சேர்தல்

கற்பனை முதலிய கடந்த கண்ணுதல்
தற்பர, நின்னை இகழ் தக்கன் தன்னிடை
பற்பகல் வளர்ந்து, அவன் பயந்த மாதெனச்
சொற்படு நாமமும் சுமந்து ளேன் யான். 3

ஆங்கதோர் பெயரையும் அவன்கண் எய்தியே
ஓங்கிநான் வளர்ந்த இவ்வுடலம் தன்னையும்
தாங்கினன், மேலவை தரித்தற்கு அஞ்சினேன்
நீங்குவன் அவ்வகை பணித்தி நீஎன்றாள். 4

நற்றிறமே இது, நங்கை சிந்தனை
முற்றிய வேண்டுமேல் மொழிதும், மேருவின்

---

2. இந்திரன் முதலிய தேவர்களும, எண்ணிறந்த முனிவர்களும், தூய அறிவரும், பெரும் பூத கணங்களும் எப்பொழுதும் அன்புடன் போற்றி வாழுமிடம் அம்மலை.

(இத்தகைய மலையில் சிவபெருமானோடு வீற்றிருந் தருளிய உமையம்மை அந்நாயகனை நோக்கி)

3. "கற்பனையும், காரணமும், காரியமும் கடந்த கண்ணுதற் பெருமானே! தன் நிகரில்லாத் தலைவனே! நின்னை இகழ்ந்த தக்கன் என்பவன் மனையில் நெடுங்காலம் வளர்ந் தேன்; அவன் பெற்ற புதல்வியென்றும் பேசப்பட்டேன்.

4 அங்ஙனம் பெற்ற பெயரையும் அவன் உணவை உண்டு ஓங்கி வளர்ந்த இவ்வுடலையும் இன்றளவும் தாங்கி நின்றேன். இனி அத்தீயவன் வழியாக வந்த நாமமும் உருவமும தரித்தற்கு அஞ்சுகின்றேன். அவற்றைவிட்டு ஒழிப்பேன். ஆணை தரல்வேண்டும" என்று உமையம்மை வேண்டினாள்.

5. "நங்கையே! நீ சொன்னது நன்று; உன்கருத்து முற்றுப்பெறவேண்டுமாயின் ஒன்று கூறுகின்றேம், கேள்.

சுற்றம தாகிய இமையத் தொல்வரைக்
கொற்றவன் புரிவனால் கொடிய மாதவம். 5

ஏதவன் பெறத்தவம் இயற்றும் என்றியேல்
மாதுனை மகண்மையா மரபிற் போற்றியே
காதலோடு எமக்கருள் கருதத தாகுமால்
ஆதலின் குழவியாய் அவன்கண் எய்துநீ. 6

அணங்கு நீ நோற்றுழி அகிலத் துள்ளதோர்
கணங்களும் தலைவரும் கணிப்பில் தேவரும்
இணங்கினர் சூழ்தர எய்தி நின்னையாம்
மணம்புரிந்தே கொடு வருதும் ஈண்டெனா. 7

அல்லலும் உவகையும் அன்பும் எம்பிரான்
எல்லையில் அருளுமாய் ஈண்டி முன்செல
மெல்லியல் உமையவள் வெள்ளி வெற்பொரீஇ
வல்லையின் இமையமால் வரையிற் போயினாள். 8

---

மேருமலையோடு உறவுபூண்ட இமயமலையின் அரசன் கடுந்தவம் புரிகின்றான்.

6. 'எதற்காகத் தவம் செய்கின்றான்' என்றால், மாதே! உன்னை மகளாக முறைமையோடு எடுத்து வளர்த்து, பின்பு காதலோடு எமக்குக் கடிமணம் செய்துகொடுத்தலே அவன் கருத்தாகும். ஆதலால் நீ குழந்தை வடிவம் எய்தி அம்மன்னனை அடைவாயாக.

7. அவன் மலையில நீ வளர்ந்து தவஞ்செய்யும் காலத்து, உலகில் உள்ள சிவ கணங்களும், தலைவரும், எண்ணிறந்த தேவரும் சூழ்ந்து வர நாம் அங்குப் போந்து நின்னை மணம் செய்து இக்கயிலைமலைக்கு அழைத்து வருவோம்'' என்றார் சிவபெருமான்.

8. பெருமானைப் பிரிய நேர்ந்ததே என்ற துன்பமும், தக்கன் வழியாக வந்த சிறுமை தீர்ந்தது என்ற இன்பமும், ஈசன்பாலுள்ள அன்பும், மன்னுயிர்கள்பால் வைத்த பெருங் கருணையும் முன்னே செல்ல, மென்மை வாய்ந்த உமையம்மை வெள்ளிமாமலையை விட்டு விரைவில் இமயமாமலைக்கு எழுந்தருளினாள்.

நீலுறு மழைமுகில் நிலவும் மின்னொடு
மேலுற விளங்கிய இமைய வெற்பது
மாலவன் திருவொடு மருவிக் கண்துயில்
பாலுறு பன்னகப் பாயல் போன்றதே. 9

அன்னதோர் தடத்திடை அசல மன்னவன்
மன்னிய கௌரிதன் மகண்மை யாகவும்
தன்னிகரிலா அரன் தனக்கு நல்கவும்
முன்னுற அருந்தவம் முயன்று வைகினான். 10

மெய்த்தவம் இயற்றிய வெற்பன் காணிய
அத்தடம் மலருமோர் அரவிந் தத்தின் மேல்
மைத்ததோர் குழவியின் படிவத் துற்றனள்
எத்திறத் துயிரையும் ஈன்ற தொன்மையாள். 11

ஆங்கவள் கண்டு வெற்பன்
அடியனேன் பொருட்டால் அம்மை
நீங்கினள் போலும் முக்கண்
நிருமலன் தன்னை என்னா

---

9. நீலமேகம் மின்னலோடு விளங்கும் நெடிய முடியை உடைய இமையமலை, மாயவன் திருமகளோடு பொருந்தி உறங்கும் பாற்கடலின் அனந்த சயனத்தை ஒத்தது.

10. அத்தகைய மலையில் அமைந்தது ஒரு தடாகம். அங்கு மலையரசன், உமையம்மையை மகளாக அடையவும், அம்மங்கையை இணையற்ற ஈசனுக்கு மணம் செய்து கொடுக்கவும் கருதி முன்னமே அருந்தவம் புரிந்து கொண்டிருந்தான்.

11. அங்ஙனம் மெய்த்தவம் இயற்றிய மலையரசன் கண்ணெதிரே, தடாகத்தில் மலர்ந்த தாமரை மலரின்மேல், எல்லா வுயிரையும் ஈன்ற உமையாள், ஒரு பசுங் குழந்தை வடிவத்திலே தோன்றினாள்.

12. அவ்வடிவத்தைக் கண்ட அரசன் "அடியேன் பொருட்டு என் அம்மை ஆண்டவனை விட்டு நீங்கினாளே" என்று ஏங்கினான்; இத்தவத்தை ஏன் செய்தேன் என்று

ஏங்கினன் தனது நோன்புக்கு
இரங்கினன் இவைகள் ஈசன்
ஓங்குபேர் அருளே என்று
உவகையம் கடலுட் பட்டான். 12

பங்கயத் தவிசில் வைகும்
பாரபரை தனைத் தறுது
செங்கையின் எடுத்து வல்லே
சென்னிமேல் தாங்கி ஏகித்
துங்கநல் இமையத் தண்ணல்
தொன்முறை இருக்கை புக்கு
மங்கல மேனை என்னும்
மனைவிகைக் கொடுத்தான் மாதோ. 13

மன்னுயிர் புவனம் ஏனை
மற்றுள பொருளுக் கெல்லாம்
அன்னையாய் உதவி, நாளும்
அவற்றினை வளர்த்து நிற்பாள்
தன்னையும் வளர்ப்பார் உண்டோ
வளர்ந்தது சமுக்கே அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை
காட்டினள் போலும் அன்றே. 14

---

இரங்கினான்; எனினும் இவையெல்லாம் ஈசன் திருவருள் எனத் தெளிந்து ஆனந்தக் கடலுள் மூழ்கினான்.

13. தாமரை ஆசனத்தில் அமர்ந்த குழந்தையைத் தன் செங்கையால் எடுத்தான்; தலையின்மீது தாங்கினான்; விரைந்து சென்றான்; மாளிகையை அடைந்தான்; மேனை என்னும் மனைவியின் கையில் கொடுத்தான்.

14. மன்னுயிரையும், மாநிலத்தையும் மற்றும் உள்ள பொருள் அனைத்தையும் ஈன்று வளர்க்கும் அன்னையாகிய உமையாளையும் வளர்ப்பார் உண்டோ? மலையரசனும் அவன் மனையாளும் அவளை வளர்த்தார் என்பது பொருளற்ற பேச்சே. அவர் மனையிலே வளர்ந்து அம்மை தன் அருளின் தன்மையைக் காட்டிப் போந்தாள் போலும்!

## உமையம்மை தவம் புரிதல்

இந்தவாறு இனையர் பாலாய்
எம்பெரு மாட்டி வைகி
ஐந்துயாண்டு அகன்ற பின்றை
அயன்முதல் தேவர் யார்க்கும்
தந்தையார் அருளை உன்னித்
தவம் இனிப் புரிவன் என்னாச்
சிந்தியா இமையத் தோங்கற்
செம்மலுக்கு உரைக்க லுற்றாள். 15

அன்னைகேள், எம்மின் நீங்கி
அருந்தவம் ஆற்றற் கொத்த
தின்னதோர் பருவம் அன்றால்
யாண்டும்ஓர் ஐந்தே சென்ற
நின்னுடல் பொறாதால், ஈண்டுஇந்
நிலைமையைத் தவிர்தி என்னக்
கன்னிகை நகைத்துக் கேண்மோ
இஃதெனக் கழறல் உற்றாள். 16

ஈசனே காப்பன் அல்லால்
யாரையும் பிறரால் தம்மால்

---

15. இவ்வாறு அவர்களிடம் வளர்ந்த உமையம்மை ஐந்து வயது கழிந்தவுடன், பிரமன் முதலாய தேவர்களுக்கும் பிதாவாகிய சிவபெருமானது திருவருளைச் சிந்தித்துத் தவம் செய்யக் கருதினாள்; தன் உள்ளக் கருத்தை மலையரசனிடம் உணர்த்தினாள்.

16. அன்னையின் கருத்தறிந்த அரசன், "அம்மா! கேள். எம்மை விட்டு நீங்கி நீ அருந்தவம் புரிதற்கு இது பருவமன்று. வயது ஐந்துதான் ஆயிற்று. தவத்தின் கடுமையை நின் திருமேனி தாங்காது. ஆதலால் இப்போது இக்கருத்தை விட்டுவிடு" என்று வேண்டினான். அது கேட்ட உமையவள் நகைத்து,

17. "காக்கின்றவன் ஈசன் ஒருவனே. அவனன்றி யாரும் தம்மாலும் பிறராலும் குற்றமறக் காத்துக்கொள்ள

ஆசறப் போற்றல் ஆகாது
அதுதுணி வாகும் ஈண்டுப்
பேசிய திறனும் அன்னேன்
பேரருள் மருதி என்ன
நேசமோடு இயைந்திட்டு அன்னை
நினைந்த நோன்பியற்று கென்றான். 17

மன்னனும் இயைந்து பின்னர்
மால்வரை ஒருசார் தன்னில்
அன்ன மென்னடை யினாளுக்கு
அருந்தவச் சாலை ஆற்றித்
தன்னுறு கிளைஞர் தம்பால்
தவத்தினால் வந்த பான்மைக்
கன்னியர் பலரைக் கூவிக்
கௌரிபால் ஆகச் செய்தான். 18

நீலுறு மணிதோய் மேனி
நிமலைஅங்கு இமையத் துச்சி
மேலுறும் அரசன் தேவி
விடையினால் மடவார் பல்லோர்
பாலுறு பணியிற் சூழப்
பரமனை உன்னி அந்தச்
சாலையை அடைந்து மிக்க
தவத்தினை இழைக்கல் உற்றாள். 19

---

இயலாது. இது நிச்சயம். இப்பொழுது நான் சொல்லிய செய்கையும் அப்பெருமானுடைய பேரருளே யாகும். ஆதலால் தடை சொல்ல வேண்டாம்" என்று கூறினாள். அரசனும் அன்புடன் இசைந்தான்.

18. இமையமலையின் ஒரு பக்கத்தில் அரியதோர் தவச் சாலை அமைத்தான்; தன் உறவினர் தவம் செய்து அரிதிற் பெற்ற கன்னியர் பலரை அழைத்து உமையவளுக்குத் துணையாக அனுப்பினான்.

19. நீலமணியின் நிறம் பொருந்திய உமையவள், மன்னன் தேவியிடம் விடைபெற்று, பணிப்பெண்கள் பலர்

### ஈசன் ஞான குருவாய் இருத்தல்

மண்ணவர் அமரர் யாரை
வணங்கினும் அவைகள் எல்லாம்
நண்ணிய பரமன் தாளில்
நாற்பெருந் தவத்தி னோரும்
தண்ணளி நெறியிற் பல்கால்
தாழ்ந்தனர் எழுந்து நின்று
பண்ணிசை மறைகள் தம்மால்
துதித்துஇவை பகர்தல் உற்றார். 20

இருட்பெருங் கடலுள் யாமத்து
எறிமருத் திடைப் பட்டாங்கு
பொருட் பெருங் கடலாம் வேதம்
புடைதொறும் அலைப்ப இந்நாள்
அருட்பெருங் கடலே எய்த்தேம்
அமைந்திலது உணர்வு, யாங்கள்
மருட்பெருங் கடலின் நீங்கும்
வண்ணம்ஒன்று அருள்தி என்றார். 21

---

சூழ்ந்துவர, பரம்பொருளாகிய ஈசனை மனத்தில் அமைத்து, அச்சாலையிற் போந்து அருந்தவம் புரியலுற்றான்.

20. மன்னுயிர்கள் எத்தேவரை வணங்கினாலும் அவ் வணக்கம் எலாம் சென்று சேரும் சிவபெருமான் திருவடியில், பெருந்தவச் செல்வராகிய சனகாதி முனிவர் நால்வரும் அன்பு நெறியில் பன்முறை பணிந்து எழுந்து நின்று, பண்ணோடு வேதகீதம் பாடித் துதித்து விண்ணப்பம் செய்யலுற்றார்.

21. "அருட் பெருங்கடலே! அகன்ற கருங்கடலின் நடுவே, நள்ளிரவில் சுழல காற்றில் அகப்பட்டாற் போன்று அடியேம், பொருட் பெருங்கடலாகிய வேதத்தின் சாகைகளால் மலைப்புற்று, அஞ்ஞான இருளில் அகப்பட்டு அறிவு தளர்ந்தோம். மயக்கமாய பெருங்கடலினின்றும் கரையேறும் முறையைத் திருவருள் புரிதல்வேண்டும்" என்றார்கள்.

நவையறு தவங்கள் ஆற்றி
நல்லருள் படைத்த தொல்லோர்
இவை புகன்றிடலும் அன்பர்க்கு
எளிவரும் கருணை வள்ளல்
அவர்முகம் தெரிந்து நுங்கள்
அறிவமைந்து அடங்கு மாறு
தவலரும் சிறப்பின் நன்னூல்
சாற்றுதும் இருத்திர் என்றான். 22

நந்தி முற் கடையைப் போற்ற
ஞான நாயகனும் அண்ணல்
முந்துறை சனகன் ஆதி
முனிவரர் தொழுது கேட்ப
அந்தரில் ஆகமத்தின்
அரும்பதம் மூன்றும் கூறப்
புந்திய தொடுங்கும் ஞான
போதகம் போதி என்றார். 23

---

22. குற்றமற்ற நற்றவம் புரிந்து; செம்மையான அருளைப் பெற்ற நால்வரும் இவ்வாறு சொல்லவும் அன்பர்க்கு எளியனாகிய கருணை வள்ளல் அம்முனிவர் முகம் நோக்கி, 'உங்கள் அறிவு ஒருமைப்பட்டு, அடங்கும் வண்ணம் அழிவற்ற பெருமை வாய்ந்த ஞானநூலை உணர்த்துகின்றோம்; அமர்க' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

23. (ஆணைப்படி) நந்திதேவர் தலைவாயிலைக் காவல் செய்திருந்தார். மெய்ஞ்ஞான முதல்வராகிய ஈசன் முன்னே சனகன் முதலிய முனிவர்கள் தொழுது அமைந்தார்கள். அவர்களுக்கு முடிவற்ற சிவாகமத்தின் பாதங்களாய சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் சிவபெருமான் எடுத்தோதினார். அவற்றை உணர்ந்த முனிவர்கள் 'மேலையத்திற்குரிய ஞான பாதத்தையும் போதித்தல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தனர்.

என்னலும் நகைத்து யாதும்
எதிர்மொழி புரிந்தான் அல்லன்
பன்னுவ தன்றால் மற்றிப்
பரிசினால் இருத்தல் கண்டீர்
அந்நெறி யாகும் என்றே
அனையவர்க்கு உணர்த்து மாற்றால்
உன்னரும் பரத்தின் மேலோன்
ஒருசெயல் புரிதல் உற்றான். 24

இருவரும் உணரா அண்ணல்
ஏனவெள் எயிறு யாமை
சிரம்நிரை அநந்த கோடி
திளைத்திடும் உரத்தில் சீர்கொள்
கரதலம் ஒன்று சேர்த்தி
மோன முத்திரையைக் காட்டி
ஒருகணம் செயல் ஒன்றின்றி
யோகு செய்வாரின் உற்றான். 25

இனையதோர் தன்மை காட்டி
எம்பிரான் உணர்த்தக் கண்டு
சனகனே முதலா உள்ளோர்
தவலரும் ஞான போதம்

---

24. அம்மொழி கேட்ட ஈசன் புன்னகை கொண்டார். மறுமொழியொன்றும் உரைத்தாரல்லர், "ஞான நெறி சொல்லிக் காட்டும் தன்மைத்தன்று. இவ்வண்ணம் இருத்தலே அதன் முறைமை" என்று உணர்த்துமாறு ஒன்று செய்யத் தொடங்கினார்.

25. அடி முடி தேடிய திருமாலும் பிரமனும் அறிதற்கு அரியவராகிய பெருமான் பன்றிக்கோடும ஆமை ஓடும், மண்டை மாலையும் கோடி கோடியாகப் பொருந்திய திருமார்பில் ஒரு கரத்தை வைத்து, ஞான முத்திரையைக் காட்டி, ஒரு கணப்பொழுது, யாதொரு செயலும் இன்றி யோகியரைப்போல் காட்சியளித்தார்.

26. ஞானத்தின் தன்மையை இவ்வாறு உணர்த்தக் கண்ட முனிவர்கள், "மெய்யறிவு என்பது நூல்களின்

பனுவலின் அளவன்று என்னும்
பான்மையைத் தெரிந்து முக்கண்
புனிதன தருளால் தத்தம்
புந்தியின் ஒடுக்கம் பெற்றார். 26

ஆரணன் தனது மைந்தர்க்கு
அரும்பெறல் ஞான போதம்
ஓரிறை காட்டும் முன்னர்
உலகெலாம் ஒருப்பா டொன்றி
ஈருடல் மயங்கும் ஆர்வம்
இன்றியே இருந்த, யார்க்கும்
காரணன் சிவனே என்கை
கழறவும் வேண்டற் பாற்றே. 27

மண்ணகத்து உயிர்கள் முற்றும்
மாதிரத்து உயிர்கள் முற்றும்
விண்ணகத்து உயிர்கள் முற்றும்
வேற்றகத்து உயிர்கள் முற்றும்
பெண்ணகத்து ஆண்மை கூடும்
சிறுநலம் பிழைத்த, ஞானக்
கண்ணகத்து இறைவற் கண்டு
கடைநின்ற காட்சியார் போல். 28

---

அளவிற்றன்று' என்னும் உண்மையை உணர்ந்தார்கள். ஈசன் அருளால் மன ஒடுக்கம் பெற்றார்கள்.

27. இங்ஙனம் பிரமாவின் புத்திரர் ஆகிய சனகாதி முனிவர்க்கு மெய்ஞ்ஞான போதம் கணப்பொழுது காட்டும் முன்னரே, உலகமெல்லாம் ஒருமைப்பாடு உற்றது; காம இச்சை அற்றது. எனவே யார்க்கும் மூலகாரணமாய் உள்ள முழுமுதற் பொருள் சிவ பெருமானே என்று சொல்லவும் வேண்டுமோ ?

28. ஞானக் கண்ணால் ஈசனைக்கண்டு உணரும் மெய்ஞ்ஞானியர் போன்று மண்ணகத்தில உள்ள உயிர்களும, எட்டுத் திக்கிலும் உள்ள உயிர்களும், விண்ணகத்தில் உள்ள உயிர்களும், இன்னும் பாதலம் முதலிய ஏனைய உலகத்துள்ள உயிர்களும் சிற்றின்ப உணர்ச்சி அற்றிருந்தன.

### இந்திரன் கவலை கூர்தல்

மாசறு காட்சி கொண்ட
    மாதவர்க்கு அருளி எங்கோன்
தேசுறு கயிலை உற்றான்
    உமையவள் இமையம் சேர்ந்தாள்
ஆசறு குமரன் அன்னார்க்கு
    அடைவது எத் தன்மை என்று
வாசவன் இருந்து நாடி
    மனமிசைக் கவலை கூர்ந்தான். 29

### திருமால் கூற்று

ஆவிகள் அனைத்தும் ஆகி
    அருவமாய் உருவமாகி
மூவகை இயற்கைத் தான
    மூல காரணம தாகும்
தேவர்கள் தேவன் யோகின்
    செயல்முறை காட்டும் என்னில்
ஏவர்கள் காமம் கன்றித்
    தொன்மைபோல் இருக்கும் நீரார். 30

---

29. மாசற்ற காட்சியுடைய மாதவ முனிவர்க்கு மெய்யறிவு வழங்கிக்கொண்டு, ஈசன் அழகிய கயிலை மலையில் அமர்ந்தான். உமையவள் இமயமலையைச் சேர்ந்தாள். இந்நிலையில் மாசற்ற மைந்தனை அன்னார் எங்ஙனம் அடைதல் கூடும்? என்று சிந்தித்து இந்திரன் மனத்திற் சஞ்சலம் உற்றான்.

(ஒன்றும் தோன்றாமையால் பிரமதேவனைத் துணைக்கொண்டு திருமாலிடம் போந்து தன் குறையை முறையிட்டான். அப்பொழுது திருமால் கூறலுற்றார்.)

30. "எல்லா உயிர்களும் தாமே யாகியும், அருவமாகியும் உருவமாகியும் மூவகை இயல்பினையுடைய மூல காரணமாயுள்ள தேவதேவன் யோகத்தின் முறைமையைக் காட்டுவாராகில், முன்போல் காம இச்சையை யாவரே கொள்வார் ?

ஊழ்வினை நெறியால் முன்னம்
ஒருபெரு வேள்வி யாற்றித்
தாழ்வினை அடைந்த தக்கன்
தன்புடை இருந்தோர் தம்பால்
சூழ்வினை எச்சம் முற்றும்
அருத்தியே தொலைத்துத் தொல்லை
வாழ்வினை அருள நாதன்
மனத்திடை நினைத்தான் அன்றே. 31

முனிவருக்கு உணர்வு காட்டும்
மோனத்தை முதல்வன் நீங்கிப்
பனிவரை அணங்கை மேவில்
படைப்பயன் முற்றும், அன்னார்க்கு
இனியொரு குமரன் தோன்றில்
சூர்கிளை எனைத்தும் பொன்றும்
துனியுறும் உலகம் எல்லாம்
தொன்மைபோல் உய்யும் மாதோ. 32

அத்திறம் முற்று மாறு ஒன்று
அறைகுவன் அகிலம் தன்னில்

---

31. ஊழ்வினையால் ஓர் யாகம் செய்து இழிவடைந்த தக்கனுடன் இருந்த தேவர்கள் தீவினைக்கு ஆளாயினர். அவ்வினையின் பயனை ஊட்டித் தொலைத்து முன்போல் இன்ப வாழ்க்கையைக் கொடுக்க நம் பெருமான் திருவுளங்கொண்டுள்ளார்.

32. பிரமனே! முழுமுதற் பொருளாகிய ஈசன் முனிவருக்கு ஞானபோதம உணர்த்தும் மௌன நிலையை விட்டு, பர்வத மன்னன் புதல்வியாகிய பார்வதியைத் திருமணம் புரிந்தால், நின் படைப்புத் தொழில் நிறைவேறும். அன்னார்க்கு ஒரு குமரன் தோன்றினால், சூரன் குலம் முற்றும் அழியும். துன்பமுற்ற உலகம் எல்லாம் தொன்மைபோல் வாழ்ந்திருக்கும்.

33. அது நிறைவேறுதற்கு ஓர் உபாயம் கூறுகின்றேன் கேள். இம் மாநிலத்தில் உள்ள யாவரும் மயங்

எத்திறத் தரும்மால் கொள்ள
எய்திடும் காமன் தன்னை
உய்த்திடின் முனிவர் தங்கட்கு
உணர்வுசெய் மோனம் நீங்கிச்
சத்தியை மணந்து சேயைத்
தந்திடும் எந்தை என்றான். 33

### மன்மதனைப் பிரமன் வேண்டுதல்

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவநின் வாளிகள் தூவி
அங்குறை மோனம் அகற்றினை இன்னே
எங்கள் பொருட்டினில் ஏகுதி என்றான். 34

சீர்பெற் றிடுசெந் திருவைத் திருமால்
மார்பில் குடியாய் உறவைத் திலனோ
கார்பெற்ற விழிக்கலை மங்கையை உன்
ஏர் பெற்றிடு நாவில் இருத் திலனோ. 35

---

கும்படி மலர்க்கணை தொடுக்கும் மன்மதனைக் கயிலையங் கிரிக்கு அனுப்பினால், ஈசன் மௌனம் நீங்கி, சத்தியாகிய உமையை மணந்து ஒரு மைந்தனைத் தந்தருள்வார்” என்றான்.

34 (அப்படியே பிரமதேவன் மன்மதனை அழைத்து) ‘ஐயனே! கங்கையைச் சடையிலே அணிந்த சிவபெருமான், மௌன நிலையை நீக்கி, மலை மகளாகிய பார்வதியைத் திருமணம் செய்யுமாறு நினது பூங்கணைகளைத் தூவுவாயாக; எங்கள் பொருட்டு இப்பொழுதே செல்க’ என்று பணித்தான்.

35. (அது கேட்டு மன்மதன் சிவ நாமத்தை உச்சரித்து செவிகளைப்பொத்திக்கொண்டு,) “பிரமனே! சிறப்பு வாய்ந்த திருமகளைத திருமாலுடைய மார்பில் நான் நிலையாக வைத்தேன் அன்றோ நின்னுடைய அழகிய நாவில் கலைமகளை அமைத்தேன் அன்றோ?

மறை தேரும் வசிட்டன் மரீசி மிகக்
குறிதா முனி அத்திரி கோதமன் நல்
அறிவால் உயர் காசிபன் ஆதியராம்
துறவோர் தமதாற்றல் தொலைத் திலனோ. 36

கையும் நகையும் கதிரார் விழியும்
மெய்யும் தழலாம் விமலன் தனை, யான்
எய்யும்படி சென்றிடின் இவ்வுயிர் கொண்டு
உய்யும் திறமும் உளதோ உரையாய். 37

அன்ன பரிசே எனினும் அடைந்தோர்தம்
இன்னல் அகற்றும் இறையருளால் இக்கருமம்
உன்னின் முடியும் ஒழிந்தோரால் முற்றுவதோ
முன்னின் இதற்கு முதற் காரணம் நீ காண். 38

எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே
அல்லாதிலை ஓர் அணுவும் அசையாது எவையும்
நில்லா தருள் இன்றேல் நீ இன்று அவன் பாலில்
செல்லாய் உனது செயலும் அவன் செய்கையதே. 39

---

36. இன்னும் வேதங்களை யறிந்த வசிட்டன், மரீசி, குறுமுனியாகிய அகத்தியன், அத்திரி, கௌதமன், காசிபன் ஆகிய முனிவரது தவத்தின் வலிமையை நான் தொலைத்தேன் அன்றோ?

37. ஆயினும் கையிலே தீ; குறு நகையிலே கனல்; நெற்றிக் கண்ணிலே நெருப்பு; திருமேனியும் தழல் - இத்தகைய ஈசன்மீது அம்பெய்யச் சென்றால் அடியேன் உய்யுமாறுண்டோ''? என்றான்.

38. (இங்ஙனம் மறுத்துரைத்த மன்மதனை நோக்கி) "மாரனே! நீ சொல்லியதெல்லாம் உண்மையே! ஆயினும் தம்மை அடைந்தவரது துன்பத்தைத் துடைக்கும் ஈசன் அருளால் இக்காரியம் உன்னாலே முடியும். இது மற்றையோரால் ஆகாது. இதற்கு முதற் காரணம் நீயே!

39. எல்லார் செயலும் ஈசன் செயலே. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அவன் அருளின்றி எப்பொருளும் நில்லாது. உன் செயலும் அவன் செயலே. ஆதலால் இன்றே செல்க..

ஈங்கிதுவும் அன்றி
எவரேனும் தம்மடங்காத்
தீங்கு பெறின் உதவி
செய்யென்று இரந்திடலும்
ஆங்கொருவன் செய்யாது
அதுமறுத்துத் தன்உயிரைத்
தாங்கல் உலக
நடை தனக்குத் தக்கதுவோ. 40

என்னானும் ஓர்உதவி
யாரொருவன் யார்க்கெனினும்
தன்னால் முடிவதெனில்
தானே முடித்தல்தலை
சொன்னால் முடித்தல்
இடையாகும், சொல்லுகினும்
பன்னாள் மறுத்துப்
புரிதல் கடைப் பான்மையதே. 41

சூரந் தனில் வலிசேர்
சூரபன்மன் ஏவலின்யாம்
ஆரும் துயர்கொண்டு
அழுங்கினோம் அன்னதினித்

---

40. அன்றியும், தாங்க முடியாத துன்பத்தை அடைந்தோர் தமக்கு உதவி செய்யுமாறு இரந்து வேண்டினால், அதனைச் செய்யாது மறுத்து உயிர் வாழ்ந்திருத்தல் உயர்ந்தோர்க் குரிய தன்மையாகுமோ ?

41. யாதேனும் ஓர் உதவியை யார்க்கேனும் தன்னால் இயன்றவரை அவர் கேளாமல் தானே செய்தல் தலையாயவர் தன்மை. அவர் கேட்டபின் செய்தல் இடையாயவர் தன்மை. கேட்டும் முன்னே மறுத்துப் பின்னே செய்தல கடையாயவர் தன்மையாகும்.

42. நாம எல்லோரும் வலிமை சான்ற சூரபதுமனது கடும்பணியால் துன்புற்று வருந்துகின்றோம். அத்துன்பம் நீங்கும்வண்ணம ஈசனிடம் ஒரு புதல்வனைப் பெற

தீரும் படிக்குச்
சிவன்ஒரு சேயைத் தருவான்
ஓர்ஐம் படை செலுத்த
உன்னையாம் வேண்டினமே. 42

**மன்மதன் இசைந்து கயிலைக்குச் செல்லுதல்**

எண்டகு குணத்தின்மேலாம்
இறையவன் இருந்த வண்ணம்
கண்டலும் வெருவி ஆவி
காண்கிலன், அவனை என்கைக்
கொண்டதோர் கணைகள் வாகை
கொள்ளுமோ இனைய பான்மை
அண்டரும் அயனும் யாரும்
அறிகிலர் போலும் அன்றே. 43

ஏமுற உலகம் எல்லாம்
ஈறுசெய் முதல்வன் தன்னைப்
பூமலர் கொண்டு யானே
பொருகின்றேன் நகை ஈதன்றோ

---

விரும்பி, உன் ஐமபடையின உதவியை வேண்டினோம்" என்று பிரமதேவன் உரைத்தான்.

(அவ்வுரையை மறுக்கமுடியாமல் மன்மதன் கரும்பு வில்லேந்தி மனையாளாகிய ரதியோடு கயிலை மலைக்குச் சென்றான்.)

43. அங்கு எட்டுச் சிறந்த குணங்கள் வாய்ந்த ஈசன் இருந்த வண்ணம் கண்டான். "ஐயோ! இவனைக் கண்டபோதே உள்ளம் கலங்குகின்றது. என் ஆவி அகத்ததோ புறத்ததோ அறியேன். என் மெல்லிய கணைகள் இப்பெருமானை வெல்லுமோ? அமரரும் பிரமனும் இவர் நிலை அறியார்போலும்!

44. ஊழிக் காலத்தில் உலகமெல்லாம் கலங்கச் சங்காரம் செய்யும் சிவபெருமானைப் பூமலர் கொண்டு நான் போர் செய்வேனும்! இது சிரிக்கத்தக்க செயல் அன்றோ?

ஆம் இது விதியின் செய்கை
அதனையார் கடக்க வல்லார்
தாமரை முதல்வற் கேனும்
தள்ளரும் தகைய தன்றே. 44

எறிதரு கணிச்சிச் செங்கை
ஈசன்மேல் இலக்கம் நாடும்
குறியினர் போல நின்ற
கொடுந்தொழில் மாரன், துஞ்சும்
நெறியினர்க்கு அச்சம் உண்டோ
நினைத்தது முடிப்பன் என்று
நறுமலர் வாளி ஐந்தும்
நாதன மேற் செல்ல விட்டான். 45

விட்ட வெம் பகழி ஐந்தும்
வியத்தகு விமலன் மீது
பட்டலும் சிறிதே வேளைப்
பார்த்தனன், பார்த்த லோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக்
கண்ணது கடிதே காமற்
சுட்டது, கயிலை முற்றும்
சூழ்புகை பரவிற் றன்றே. 46

---

ஆயினும் விதியின் செய்கை இது. யாவரே விதியைக் கடக்க வல்லார்? படைக்கின்ற பிரமதேவனும் அதன் வலிமைத் தடுக்க வல்லனோ? என்று எண்ணினன்.

45. செங்கையில் மழு வேந்திய சிவபெருமான்மீது குறி வைப்பான்போல் நின்றான் கொடுந்தொழில புரியும் மன்மதன். "அழியத் துணிந்தவர்க்கு அச்சம் உண்டோ? நினைத்தது முடிப்பேன்" என்று கூறி, ஐந்து மலரம்புகளையும் ஐயன்மீது எய்தான்.

46. மன்மதன் விட்ட மலர்ப்பாணம் ஈசன் மேனியிற் பட்டது. அப்போது சிறிது கண் விழித்துப் பார்த்தார் ஈசன். அவர் நெற்றிக் கண்ணினின்று எழுந்த நெருப்பு, காம வேடனைச் சுட்டது. கயிலை மலை எங்கும் நெடும்புகை சூழ்ந்து நிறைந்தது.

கண்ணழல் சுடுத லோடும்
காமவேள் யாக்கை முற்றும்
சுண்ணம தாகி வீழத்
துஞ்சினன் போய பின்னை
அண்ணலம் பகவன் தொல்லை
அமைதியின் இருந்தான், எல்லாம்
எண்ணிநின்று இயற்றும் எங்கோற்கு
இனையதோ அரிது மாதோ. 47

## ரதி புலம்பல்

செம்பதுமை திருக்குமரா தமியேனுக்கு
ஆருயிரே, திருமால் மைந்தா
சம்பரனுக் கொருபகைவா கன்னல்வரிச்
சிலைபிடித்த தடக்கை வீரா
அம்பவளக் குன்றனைய சிவன்விழியால்
வெந்துடலம் அழிவுற் றாயே
உம்பர்கள்தம் விழியெல்லாம் உறங்கிற்றோ
அயனாரும் உவப்புற் றாரோ. 48

முன்னாளில் புரமூன்றும் அட்டவன்மேல்
பொரப்போதல் முறையோ என்று

47. கண் அழலால் எரிந்த காமன் அங்கமெல்லாம் நீறாகி மண்ணில் விழுந்தான்; இறந்தொழிந்தான். ஈசன் முன்போல் அமைதியுற்றான். எப்பொருளையும் நினைந்து செய்யவல்ல எம்பெருமானுக்கு இச்செயல் அரிதாகுமோ?

48. (காமன் எரிந்து விழக்கண்ட ரதிதேவி கலங்கிப் புலம்பலுற்றாள்.) "திருமகள் மகனே! ஏழையேன் இன்னுயிரே! திருமால் மைந்தா! சம்பரனைப் பகைத்து வென்ற சதுரா! கரும்புவில் லேந்திய பெருந்தோள் வீரா! செம்பவளக் குன்றனைய சிவன் விழியால் வெந்து உடலம் அழிவுற்றாயே! இன்று விண்ணவர் கண் அடைந்ததா? பிரமதேவன் மனம் மகிழ்ந்ததா?

49. சிரித்து முப்புரங்களையும் எரித்த சிவன்மீது போர்செய்யப் போதல முறையோ என்று முன்னமே

சொன்னாலும் கேட்டிலையே அமரர்பணி
  புரிவதுவே துணிந்திட் டாயே
உன்ஆகம் பொடியாகிப் போயினதே
  இதுகண்டும் உய்வார் உண்டோ
என்ஆவி யாகியநீ இறந்தபின்னும்
  யான்தனியே இருப்ப தேயோ. 49

என்னபவம் செய்தேனோ என்போல்வார்
  தமக்கென்ன இடர்செய் தேனோ
முன்னையுள விதிப்பயனை அறிவேனோ
  இப்படியே முடிந்த தையோ
கன்னல்வரிச் சிலைபிடித்த காவலனே
  தமியேனைக் காத்தி டாயோ
வன்னிவிழி யாவுடைய பெருமானை
  நோவதற்கு வழக்கொன் றுண்டோ. 50

பொன்செய்தார் முடிகாணேன் அழகொழுகும்
  திருமுகத்துப் பொலிவு காணேன்
மின்செய்பூண் அணிகுலவும் புயங்காணேன்
  அகன்மார்பின் மேன்மை காணேன்

---

சொன்னேனே! அதைச் செவியில் ஏற்றாய் அல்லையே! வானவர் பணியை மேற்கொண்டாயே! நின் உடலம் பொடியாகிப் போயிற்றே! இக்கொடுமையைப் பார்த்தும் பிழைப்பார் உண்டோ? என்னுயிராகிய நீ இறந்த பின்னர் யான் தனியே இருத்தல் தகுதியோ?

50. நான் என்ன பாவம் செய்தேனோ? என் போன்ற பெண்களுக்கு என்ன துன்பம் செய்தேனோ? ஊழ்வினைப் பயனை யான் அறிவேனோ? அந்தோ! விதியே! இவ்வாறு வந்து முடிந்ததே! கரும்பு வில்லுடைய காவலனே! யாரும் துணையற்ற என்னைக் காத்திட வாராயோ? நெற்றிக் கண்ணுடைய பெருமானை நோவதற்கு நீதியுண்டோ?

51. பொன் மாலை அணிந்த முடி எங்கே? அழகு ஒழுகும் திருமுகத்தின் பொலிவு எங்கே? அணி திகழும் தோள் எங்கே? அகன்ற மார்பெங்கே? ஐங்கணை தான்

கொன்செய்பூங் கணைகாணேன், சிலைகாணேன்
ஆடல்புரி கோலம் காணேன்
என்செய்வேன் என்கணவா என்னை ஒழித்து
எவ்விடத்தே இருக்கின்றாயே. 51

அந்நாளில் அழற்கடவுள் கரியாக
வானவரோடு அயன்மால் காணப்
பொன்னாரும் மங்கலநாண் பூட்டிஎனை
மணஞ்செய்து போந்த காலை
எந்நாளும் இனிஉன்னைப் பிரியலம் என்றே
வாய்மை இசைத்தாய், வேனில்
மன்னவோ மன்னவோ எனைத் தனியே
விட்டேகல் வழக்கோ சொல்லாய். 52

போஎன்று வரவிட்ட தேவரெலாம்
பொடியாகிப் போன உன்னை
வாஎன்று கடிதெழுப்ப மாட்டாரோ
நின்தாதை வலியன் என்பார்
ஓஎன்று நான்இங்கே அரற்றிடவும்
வந்திலனால் உறங்கினாயோ
வேவென்று நின்சிரத்தில் விதித்திருந்தால்
அவரையெலாம் வெறுக்க லாமோ. 53

---

எங்கே? நின் வில்லெங்கே! விளையாட்டெங்கே? என் செய்வேன்! என் கணவா? என்னை விட்டு எங்கே சென்றாய்?

52. அந்நாளில் வானவரும், அயன் மாலும் காண, அங்கித் தேவன் சாட்சியாக என்னை மணந்தாய்! இனி எந் நாளும் உன்னைப் பிரியேன் என்று வாக்களித்தாய்! வசந்த மன்னனே! மனத்திற்கு இசைந்த மன்னனே! எனைத் தனியேவிட்டுச் செல்லுதல் முறையோ சொல்வாய்.

53. சிவனிடம் போ என்று அனுப்பிய தேவர் எல்லாம் பொடியாகிய உன்னை வா என்று விரைந்து எழுப்ப மாட்டாரோ? நின் தந்தையாகிய திருமால் வலியவர் என்று பேர் படைத்தவராயிற்றே! ஐயோ என்று நான் இங்கு புலம்பி அழவும் அவர் வரக் காணேனே!

தண்பனிநீர்ச் சிவிறிகொண்டு விளையாடி
மலர்கொய்து தண்கா நண்ணி
எண்படும்பூம் பள்ளியிசைச் சிறுதென்றல்
கவரிகளாய் இனிது செல்ல
வெண்பளித நறுஞ்சாந்தச் சேறுடி
இருவருமாய் விழைந்து கூடிக்
கண்படை கொண்டு அமர்வாழ்வும் பொய்யாகிக்
கனவுகண்ட கதையா யிற்றே. 54

மருகென்றே அவமதித்த தக்கனார்
வேள்விசெற்ற வள்ளல் தன்னைப்
பொருகென்றே தேவரெலாம் விடுத்தாரே
அவராலே பொடிபட் டாயே
எரிகின்றேன் உனைப்போல ஆருத
பெருந்துயரால் யானும் அங்கே
வருகின்றேன் வருகின்றேன் என்உயிரே
எனப்புலம்பி வருந்து கின்றாள். 55

---

உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாரோ? அந்தோ! நெருப்பினுல் நீருவாய் என்று நின் தலையில் விதித்திருந்தால் அவரை யெல்லாம் வெறுக்கலாமோ?

54. பனிநீரைச் சிவிறியால் வீசி விளையாடி, பூங்காவம் போந்து மலர் கொய்து, நறுங் கலவையில் தோய்ந்து, இனிய மஞ்சத்தில் இளந்தென்றல வீசக் கண்ணுறங்கும் நம் வாழ்வெல்லாம் பொய்யாகிக் கனவுகண்ட கதையாயிற்றே!

55. பெருமை யுணராது மருமகன்தானே என்று அவமதித்த தக்கன் செய்த வேள்வியைத் தகர்த்த வள்ளலாகிய ஈசன்மீது வானவர் உன்னைப் போர்செய்ய ஏவினரே! அவராலே பொடி பட்டாயே! என் உயிர்க்குயிரே! ஆருத பெருந்துயரால் அடியேனும எரிகின்றேன். உன்னை நோக்கி வருகின்றேன், வருகின்றேன்" என்று புலம்பி வருந்தினாள்.

## அயன் முதலாய வானவர் துயரம்

மையு லாவரு கறைமிடற்
றிறையவன் மருங்காக
எய்யும் மாரனை விடுத்தனம்
அவனையும் இறச்செய்தான்
பொய்யில் தன்னிலை தவிர்ந்திலன்
தொன்மையே போலுற்ருன்
ஐயகோ இனிச் செய்வதென்
ஓவென அயர்கின்ருர். 56

நஞ்ச ருந்தியும் நதியினைச்
சூடியும் நடு நெற்றித்
துஞ்சும் வெங்கனல் பரித்தும் வெவ்
வலியரைத் தொலைத்திட்டும்
அஞ்சல் என்று முன் காத்தனை
இன்று எமக் கருளாயேல்
தஞ்சம் ஆருளர் தாதையர்
அல்லது தனயர்க்கே. 57

---

56. இதைக்கண்ட பிரமன் முதலாய தேவர்கள் "நீல கண்டனை ஈசனிடம் காமதேவனை அனுப்பினேம். அவனையும் சுட்டெரித்தான். மெய்யாகிய மௌன நிலையைத் தவிர்ந்தானில்லை. முன் போலவே அமர்ந்துள்ளான். அந்தோ! இனி என் செய்வோம்" என்று அயர்ந்தார்கள்.

57. (பின்பு திருக்கயிலாச நகரின் கோபுர வாயிலில் எல்லோரும் கூடித் துதிக்கலுற்ருர்.) "எம்பெருமானே! அடியவர்களாகிய எங்களுக்கு அபயம் அளித்து ஆலகாலம் என்னும் நஞ்சை அள்ளி உண்டாய். விண்ணுக்கடங்காமல் வந்த கங்கையைச் சடைமுடியிலே சூடினுய். எரித்து நீருக்கவல்ல நெருப்பினை நெற்றிக் கண்ணிலே தாங்கினுய். கொடிய பகைவரைக் கொன்று ஒழித்தாய். இவ்வாறு காத்தருளிய நீ இன்று கைவிட்டால் யாரைத் தஞ்சம் அடைவோம். மைந்தர்க்குத் தந்தையரைத் தவிர வேறு தஞ்சம் உண்டோ?

கோளில் அன்பர்கள் இழுக்கிய
புரியினும் குணனுக் கொண்டு
ஆளும் எம்பிரான் நின்னடி
அரணம் என் றடைந்தேங்கள்
நாளும் வெந்திறல் சூரபன்
மாவினல் நலிவெய்தி
மாளுகின்றதோ, சிறிதும் எம்
உறுதுயர் மதியாயோ. 58

கங்கை வேணியாய் அம்மையை
மணந்துளமைக் கடிகொள்ளத்
திங்கள் வெண்குடை மதனனை
விடுத்தனம் தெளிவில்லேம்
அங்கவன் புரம் பொடித்தனை
முன்புபோல் அமர்ந்துற்ருய்
இங்கு யாம்தளர்கின்றதே
இனிச்சிறி திரங்காயோ. 59

சிவன் அபயம் அளித்தல்

புங்கவர் யாவரும் பொருமல் கொள்ளலீர்
உங்கள்தம் பொருட்டில்அவ் ஓங்கல் வைகிய

---

58. மாசற்ற மெய்யடியார்கள் குற்றம் செய்யினும் குணமெனக்கொண்டு ஆளும் பெருமானே! நின் சேவடியே சரணம் என்றடைந்தோம். நாள் தோறும் சூரன் கொடுமையால் நலிவுற்று நாங்கள் இறப்பதோ? எமது துயரத்தைச் சிறிதேனும் திருவுள்ளத்திற் கொள்ளாயோ?

59. கங்காதரனே! நீ உமாதேவியை மணந்து எங்களைக் காத்தருளும் வண்ணம் மதியீனர்களாகிய நாங்கள் மதிக் குடையுடைய மன்மதனை அனுப்பினேம். அவன் மேனியை எரித்து நீறுக்கினாய். முன்போல் ஞானமோனத்தில் அமர்ந்தாய். நினது அடியாராகிய நாங்கள் இங்ஙனம் தளர்தல் ஆகுமோ? இனியேனும சிறிது இரங்காயோ?" என்று ஓலமிட்டார்கள்.

60. அப்பொழுது சிவபெருமான் கருணைகூர்ந்து "வானவர்களே! வருந்தாதீர்கள். உமக்காக இமயமலையில்

மங்கையை மணந்துநும் வருத்தம் நீக்குதும்
இங்கினி யாவரும் ஏகு கென்றனன். 60

### ரதி முறையீடு

அன்னார் விடைகொண் டேகியபின்
அதுகண்டு இரதி எம்பெருமான்
முன்னால் இறைஞ்சிப் போற்றிசெய்து
முறையோ முறையோ இறையோனே
பொன்னார் கமலத்து அயன்முதலோர்
புணர்ப்பால் எங்கோன் போந்திங்கே
உன்னால் முடிந்தான் அவன்பிழையை
உளங் கொளாமல் அருள்என்றாள். 61

### ஈசன் தந்த வரம்

இனைய கூறினள் இரதி வேண்டிடுதலும்
இணைதீர்ந்த
புனிதன் நல்லருள் எய்தியே மங்கை நீ
புலம்பாய்கேள்
வனை கருங்குழல் கௌரியை மேவியாம்
வரைபோதில்
உனது கேள்வனை அளிக்குதும் போதிஎன்று
உரைசெய்தான். 62

---

உள்ள மங்கையை மணந்து உமது துன்பத்தை ஒழிக்கின்றோம். இனி நீங்கள் செல்லலாம் என்று சொல்லி அனுப்பினார்.

61. அவர்கள் விடை பெற்றுப்போன பின்னர், ரதி தேவி தருணம் பார்த்துப் பெருமான் முன்னே போந்து, வணங்கித் துதித்து "ஆண்டவனே! இறைவனே! இது முறையோ! முறையோ! பிரமன் முதலிய தேவர்கள் செய்த சூழ்ச்சியால் என் கணவன் இங்கே வந்து அழிவுற்றான். அவன் செய்த குற்றத்தைப் பொறுத்து அருள் புரிதல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள்.

62. இங்ஙனம் வேண்டிய ரதியை நோக்கி ஈசன், அருள் கூர்ந்து "மாதே! நீ புலம்பாதே! பார்வதியை நாம்

## முனிவர்கள் விடை பெறுதல்

நன்னல மைந்தர்காள் ஞான போதகம்
சொன்னடை யன்று, அது துயரம் நீங்கியே
இந்நிலை மோனமோடு இருந்து, நந்தமை
உன்னுதலே என உணர ஓதினான். 63

அந்தநல் வேலையில் ஆற்றும் நோன்பினோர்
சிந்தைகொள் அன்பொடு சிவன்பொற் றாள்முறை
வந்தனை செய்துநம் மருட்கை நீங்கியே
உய்ந்தனம் யாமென உரைத்துப் போற்றினார். 64

## சிவபெருமான் விருத்த வேதியனாக உமையிடம் சென்று உரையாடல்

செறிதுவர் உடையாளன்
சிகையினன் அணிநீற்றின்
குறியினன், ஒளிர்நூலன்
குண்டிகை அசைகையன்
உறைபணி கதிர்போற்றும்
ஓலையன் உயர்கோலன்
மறைபயில் முதியோர்போல்
வடிவிது கொடுபோனான். 65

---

சென்று திருமணம் செய்யும்பொழுது உன் கணவனை தருவோம். செல்க'' என்று விடை கொடுத்தனுப்பினார்.

63. அப்பால் எதிரே இருந்த சனகாதி முனிவரை நோக்கி "நற்றவ மைந்தர்களே! ஞானபோதம் சொற்களில் அடங்குவதன்று. துயரம் நீங்கி இவ்வண்ணம் மௌன நிலையில் இருந்து நம்மைச் சிந்தித்தலே ஆகும்'' என்று உள்ளங் கொள்ள உணர்த்தினார்.

64. அப்போது அருந்தவமுனிவர் நால்வரும் சிவபெருமான் சேவடிகளைச் சிந்தையாரத்தொழுது 'மயக்கம் தெளிந்தோம். கடைத்தேறினோம்' என்று போற்றிச் சென்றார்கள்.

65. (பின்பு, பார்வதியம்மையாருடைய அன்பையும் காதலையும் எல்லோரும் அறியக்காட்டத் திருவுளங்

தளர் நடை முதியீர்இத்
  தடவரை யிடை சேரல்
எளிதல அடிகேள் வந்து
  எய்திய தென்ன என்ன
வளமலை யரசன்தன்
  மகள்புரி தவம்நாடற்கு
உளமுடன் இவண் வந்தேன்
  உவகையின் உடன்என்றான். 66

அப்பொழுது உமைதன்னை
  ஆதர வொடுபாராச்
செப்புதல் அரிதாம்உன்
  திருநலன் அழிவெய்த
மெய்ப்படு தசையொல்க
  மிகுதவம் முயல்கின்றாய்
எப்பொருள் விழைவுற்றாய்
  எண்ணிய துரைஎன்றான். 67

---

கொண்டார் ஈசன்.) செக்கச் சிவந்த காவியுடை உடுத்தார்; சிகையை முடித்தார்; வெண்ணீறு அணிந்தார். பூணூல் தரித்தார்; கமண்டலத்தைக் கையில் எடுத்தார்; ஓலைக் குடையைப் பிடித்தார்; நெடுங்கழியை ஊன்றினார்; வேதம் ஓதும் விருத்தர் போன்ற வடிவம் கொண்டு சென்றார்.

66. (மலையரசன் மகள் தவம்புரியும் சாலையை அடைந்தபொழுது, அங்கு வாயில் காத்து நின்ற மாதர்கள் அவரைப் பார்த்து) "தளர்ந்த நடையுடைய பெரியவரே! இம்மலையிடை வருதல் எளிதல்லவே? இங்கு நீர் வந்த காரணம் என்ன" என்று வினவினார். அதுகேட்ட விருத்த வேதியர் "இம்மலையரசன் புதல்வி செய்யும் தவத்தை அறிய விரும்பி இஙகு மன மகிழ்ந்து வந்தோம்" என்றார்.

67. (அங்நிலையில் வேதியர் வருகையை உமையாளிடம் அறிவித்து, அவரைப் பணிப் பெண்கள் தவச்சாலையி னுள்ளே போக விட்டார்கள்.) அங்கு நின்ற நங்கையை விருப்புடன் பார்த்தார் வேதியர். "சொல்லுதற்கரிய பேரழகு அழியவும், அங்கமெல்லாம் வற்றி ஒடுங்கவும், நீ

## தோழி கூற்று

மன்னு யிர்க்குஉயி ராகிய
கண்ணு தல் மணஞ்செய்து
தன்னி டத்தினில் இருத்தினன்
கொள்வதே தான்உன்னிக்
கன்னி மெய்த்தவ மியற்றினள்
என்று காதலிகூற
முன்ன வர்க்கு முன் னானவன்
நகைத்திவை மொழிகின்றான். 68

புவிய ளித்தருள் முதல்வரும்
நாடரும் புனிதன்தான்
இவள் தவத்தினுக்கு எய்துமோ
எய்தினும் இனியாளை
அவன் விருப்பொடு வரையுமோ
உமையவள் அறியாமே
தவம் இயற்றினள் எளியனோ
சங்கரன் தனக்கம்மா. 69

முடிவி லாதுறை பகவன் என்
வேட்கையை முடியாது
விடுவன் என்னினும் தவத்தினை
விடுவனோ மிக இன்னம்

---

அருந்தவம் செய்கின்றாயே! எப்பொருளை விரும்பி இத் தவம் செய்கின்றாய்" என வினவினார்.

68. "ஐயனே! மன்னுயிர்க்கு உயிராகிய ஈசனை மணாளனகப் பெற்று, அவன் பாகத்தில் இருக்கக் கருதியே இக்கன்னி மெய்த்தவம் இயற்றுகின்றாள்" என்று மங்கையின் தோழி மறுமொழி கூறினாள். அது கேட்ட முதியவர் நகைத்து,

69. "உலகத்தை யெல்லாம் படைக்கும் பிரமனும், காக்கும் மாயவனும் தேடுதற்கரிய தேவதேவன் இவள் செய்யும் தவத்திற்காக வருவானோ? வந்தாலும் இவளை விரும்பி மணம் புரிவானோ? அறியாமல் உமையவள் தவம் புரிகின்றாள். சங்கரன் எளிதில் அருள்வானோ" என்றார்.

கடிய நோன்பினை அளப்பில
செய்துயிர் கழிப்பேனால்
நெடிது மூத்தலின் மயங்கினை
பித்தனோ நீ என்றாள். 70

ஆடை தோல், விடை யேறுவது
அணிகலம் அரவு என்பு
கேடில் வெண்டலை மாலிகை
கேழலின் மருப்பின்ன
ஓடு கொள்கலம் ஊண்பலி
வெய்ய நஞ்சு, உலப்புற்றோர்
காடதே நடம் புரியிடம்
கண்ணுதற் கடவுட்கே. 71

அன்னை தாதைகேள் வடிவொடு
குணங்களில் அனையானுக்கு
இன்ன வாகிய பலவளன்
உண்டுஅவை எவையுந்தான்

---

70. அம்மொழி கேட்ட உமையவள் சீற்றங்கொண்டு "என்றும் உள்ள எம்பெருமான் என் விருப்பத்தை நிறைவேற்றா விட்டாலும் நான் தவத்தினை விடுவேனோ? இத்தவம் போதாதாயின் இன்னும் கொடிய நோன்புகளை மேற்கொள்வேன்; உயிரையும் விடுவேன். நீ மிக முதுமையுற்றாய். ஆதலால் மயக்கம் கொண்டாய். அன்றிப் பித்துக் கொண்டு பேசுகின்றாயோ" என்றாள்.

71. (உமையவள் சீற்றத்தை உணராதவன்போல வேதியன் மேலும் பேசலுற்றான். "மாதே! அச்சிவபிரான் தன்மையை நீ அறிந்திலை போலும்;) அவன் உடுப்பது தோலாடை; ஏறுவது வெள்ளேறு; அணிவது அரவும், பிறவும். கையில் எடுத்தும் திருவோடு கபாலம். உண்பது நஞ்சு. நடம்புரியும் இடம் சுடுகாடு.

72. அவனுக்குத் தாயில்லை; தந்தையில்லை. சுற்றத்தார் யாரும் இல்லை. வடிவும் இல்லை; குணமும் இல்லை. முன்னே சொல்லிய தோலாடை போன்ற செல்வங்களே அவனிடம் பல வுண்டு. அவற்றைப் பெற விரும்பித்தான்

நின்ன வாகவோ தவம்புரிந்து
எய்த்தனை நெடுந்தொல்சீர்
மன்னன் மாமகட்கு இயைவதே
இத்துணை வழக்கென்றான். 72

கேட்டியால் அந்த ணாள
கேடிலா எம்பிரான் தன்
மாட்டொரு சிறிதும் அன்பு
மனத்திடை நிகழ்ந்த தில்லை
காட்டுறு புள்ளின் சூழல்
கவருவான் புதல்மேற் கொண்ட
வேட்டுவன் இயல்போல் மேலோன்
வேடம் நீ கொண்ட தன்மை. 73

நேச மிலாது தக்கன்
நிமலனை இழித்து நின்போல்
பேசிய திறனும் அன்னான்
பெற்றதும் கேட்டி லாயோ
ஈசனை இங்ஙன் என்முன்
இகழ்ந்தனை இந்நாள் காறும்
ஆசறு மறைகள் ஏதும்
ஆய்ந்திலை போலும் அன்றே. 74

---

தவம்செய்து மெலிகின்றாயோ? பழமையும் பெருமையும் வாய்ந்த மலையரசன் திருமகளாய்த் தோன்றிய உனக்கு இதுதகுமோ?'' என்று பேசினார்.

73. (அந்நிலையில் 'சிவ சிவ' என்று செவிகளைப் பொத்திக்கொண்டு) ''வேதியா! கேள். அந்தமில்லாத எம்பிரானிடத்து உனக்கு அன்பு இறையளவும் இல்லை. காட்டிலுள்ள புதரிலே மறைந்து நின்று பறவை பிடிக்கும் வேட்டுவனைப்போல், நீ சிவவேடம் கொண்டாய்.

74. உன்னைப்போல் நேசமில்லாது ஈசனை இகழ்ந்து பேசிய தக்கன் அடைந்த பயனை நீ அறியாயோ? என் முன்னே நின்று அப்பெருமானை ஏளனம் செய்தாய். இத்தனை வயது சென்றும் இன்னும் மாசற்ற மறைகளில்

அறத்தினைப் புரிவாள் இவ்வாறு
அறைதலும் அணங்கே, ஈங்குன்
திறத்தினில் ஆர்வம் செய்து
சென்றனன் செயல் கேளாது
புறத்திடைப் போதி என்றி
புரைவதோ புகுந்த பான்மை
மறைச்சடங் கியற்றி நின்னை
வரைந்திடற் காகும் என்றான். 75

வஞ்சக முதல்வன் சொற்ற
வாசகம் இறைவி கேளா
அஞ்செவி பொத்தி ஆற்றாது
அழுங்கிமெய் பதைப்ப விம்மி
எஞ்சலில் முதியோன் போகான்
ஏகுவன் யானே என்னாப்
பஞ்சடி சேப்ப ஆண்டோர்
பாங்கரிற் படர்தல் உற்றாள். 76

---

ஒன்றும் நீ அறிந்திலைபோலும். 'இங்கே நீ நிற்றல் ஆகாது'' என்று உமையம்மை பணித்தாள்.

75. அறப்பெருஞ் செல்வி இங்ஙனம் பேசியவுடன் "அணங்கே! உன்னிடம் ஆசையுற்று இங்கு வந்தடைந்தேன். நான் வந்த காரியத்தைக் கேளாமல் 'வெளியே போ' என்று உரைக்கலாமோ? அது பொருந்துமோ? இங்கே நான் வந்தது உன்னை வேதமுறையில் மணம் செய்வதற்கே ஆகும்" என்றார் வேதியர்.

76. வஞ்சகத்தில் முதன்மை பெற்ற வேதியர் பேசிய வாசகத்தைக் கேட்ட பொழுது உமையவள் இரு செவிகளையும் இறுகப் பொத்தினாள்; பொறுக்க முடியாத வருத்தமுற்றாள்; அங்கமெல்லாம் நடுங்கி விம்மினாள். "போ என்றாலும் இக்கிழவன் போக மாட்டான். நானே இவ்விடத்தைவிட்டு அகல்வேன்" என்று பஞ்சுபோன்ற திருவடிகள் சிவக்க நடந்து அப்பாற் சென்றாள்.

படர்ந்தனள் போத லோடும்
பனிபடும் இமையம் வைகும்
மடந்தைதன் இயற்கை நோக்கி
வரம்பிலா அருள் மீதூர
அடைந்ததொல் பனவக் கோலம்
அகன்றுமால் விடை மேற் கொண்டு
தொடர்ந்து பல் கணங்கள் போற்றத்
தோன்றினன் தொலைவி லாதோன். 77

தொலைவறு பகவன் வான்மீத்
தோன்றலும் துளங்கி நாணி
மலைமகள் கண்டு பல்கால்
வணங்கி அஞ்சலியாற் போற்றி
அலகிலா உணர்வால் எட்டா
ஆதிநின் மாயை தேறேன்
புலனிலாச் சிறியேன் நின்னை
இகழ்ந்தவா பொறுத்தி என்றாள். 78

நற்றவ மடந்தை கேண்மோ
நம்மிடத்து அன்பால் நீமுன்
சொற்றன யாவும் ஈண்டே
துதித்தன போலக் கொண்டாம்

---

77. அவ்வாறு நடந்த மலைமகளின் மனப் பான்மையை நோக்கினார் சிவபெருமான்; அளவிறந்த கருணை கொண்டார்; விருத்த வேதியக் கோலத்தை விட்டார்; சிவகணங்கள் சூழ்ந்து போற்றச் சிறந்த விடையின்மேல் எழுந்தருளிக் காட்சி யளித்தார்.

78. மெய்ப் பொருளாகிய நாயகனை மேலே கண்டாள் மலைமகள்; நாணத்தால் மேனி நடுங்கினாள்; கீழே விழுந்து வணங்கினாள்; கை யெடுத்துப் போற்றினாள். "அறிவினால் அறியவொண்ணா ஆதி பகவனே! நின் மாயா விலாசம் அறியாது சிறியேன் பேசிய சிறு மொழிகளைப் பொறுத்தருளல் வேண்டும்" என்றாள்.

79. "நற்றவம் புரிந்த மாதே! கேள்! நம்பால் வைத்த அன்பினால், நீ முன் பேசிய மொழிகளை யெல்லாம்,

குற்றமுண் டாயின் அன்றே
பொறுப்பது கொடிய நோன்பால்
மற்றினி வருந்தல் நாளை
மணஞ்செய வருதும் என்றான். 79

## மணம் பேசுதல்

பொருள்தரு மலைக்கொடி புரியும் நோன்புகண்டு
அருள்தனை நல்கிய ஆதி நாயகன்
தெருள்தரு கயிலையில் சேர்வுற்று ஏழ்வகை
இருடிகள் தங்களை இதயத் துன்னினான். 80

எந்தைஎம் பெருமநீ எம்மை வம்மென
முந்துறு கருணையின் முன்னிற்று ஆதலின்
உய்ந்தனம் அடியரேம், உடைய தீப்பவம்
சிந்தினம் இனியொரு தீதுண் டாகுமோ. 81

---

இப்பொழுது உரைத்த துதிமொழி போலவே ஏற்றுக் கொண்டோம். குற்றமிருந்தால் அன்றோ பொறுத்தல் வேண்டும்? கொடிய தவத்தைச் செய்து இனி நீ வருந்தாதே. நாளையே நின்னை மணம்புரிய வருவோம்" என்று அருளினார் ஈசன்.

80. இங்ஙனம் செல்வமெல்லாம் தரும் மலையிற் பூங்கொடி போன்ற உமையவள் தவத்தினைக் கண்டு திருவருள் புரிந்த ஈசன், மெய்ஞ்ஞானம் பயக்கும் கயிலையங்கிரியை அடைந்து சப்த ரிஷிகள் எனப்படும் எழுவகை முனிவரையும் மனத்திலே நினைத்தார்.

81. அம்முனிவர்கள் விரைந்து கயிலை மலையை அடைந்து "எம் தந்தையாகிய ஆண்டவனே! நின் கருணையால் எம்மை நினைந்து, இங்கு வரப் பெற்றோம். ஆதலால் அடியேங்கள் பிழைத்தோம். கொடிய தீவினையும் தீர்ந்தோம்; இனி எமக்கு ஒரு தீங்கும் உண்டோ?" என்று தொழுது நின்றார்கள்.

அமலன்அம் முனிவர் மாற்றம்
கேட்டலும் அவரை நோக்கி
இமயமேல் இறைவன் தன்பால்
ஏகியே எமக்குஇவ் வைகல்
உமைதனை வதுவை நீரால்
உதவுவான் வினவி வல்லே
நமதுமுன் வம்மின் என்று
நன்றருள் புரிந்தான் அன்றே. 82

படியறு நுந்தாள் ஈண்டுப்
படுதலால் இமையம் மேருத்
தடவரை யதனில் தூய்தாய்த்
தலைமையும் பெற்ற தன்றே
நெடியஎன் பவமும் இன்னே
நீங்கின நீவிர் எல்லாம்
அடியனேன் தன்பால் வந்த
நிமித்தமென் அறையும் என்றான். 83

அங்கது வினவும் எல்லை
அருந்தவர் அகிலம் ஈன்ற
மங்கையை வதுவை செய்வான்
மன்னுயிர்க்கு உயிராய் நின்ற

---

82. ஈசன் அவரை நோக்கி, "இமயமலை யரசனிடம் நீங்கள் சென்று இன்றே உமையவளை எமக்குத் தாரை வார்த்துத் தரும்படிகேட்டு விரைவில் இங்கு வரல்வேண்டும்" என்றார்.

83. அப்பணிதலை மேற்கொண்ட சப்த முனிவரும் மலையரசன் மாளிகைக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்டஅரசன் மனமகிழ்ந்து "ஐயரே! உமது திருவடிகள் தோயப்பெற்ற இவ்விமையமலை, மாமேரு மலையினும் புனிதமாய் முதன்மை யுற்றது. பலநாள் நான் செய்த பாவமும் இன்றே நீங்கிற்று. நீங்கள் அடியேன் பால் வந்த காரியம் யாது? சொல்லவேண்டும்" என்றான்.

84. அது கேட்ட அருந்தவ முனிவர் "உலக மாதா வாகிய உமாதேவியைத் திருமணம் புரியக் கருதி, மன்

சங்கரன் நினைந்துஉன் னோடு
சாற்றுதற்கு எம்மை உய்த்தான்
இங்கிதுஎம் வரலா றென்ன
இசைவுகொண்டு இறைவன் சொல்வான். 84

துன்னிய உயிர்கள் யாவும்
தொல்லுல கனைத்தும் ஈன்ற
கன்னிகை உமையாள் தன்னைக்
கடிமண முறையின் நல்கி
என்னையும் அடிமை யாக
ஈகுவன் இறைவற்கு என்ன
மன்னவன் அயலே நின்ற
மனைவி ஈதுரைக்க லுற்றாள். 85

மலர்அயன் முதல்வன் தன்ஓர்
மடந்தையை மணத்தின் நல்க
அலைபுனல் சடிலத் தண்ணல்
அவன்தலை கொண்டான் என்பர்
நிலைமையங் கதனை உன்னி
நெஞ்சகம் அஞ்சும் எங்கள்
குலமகள் தனை அவற்குக்
கொடுத்திடல் எவனோ என்றாள். 86

---

னுயிர்க்கெல்லாம் உயிராக விளங்கும் சிவபெருமான், எம்மை உன்னிடம் அனுப்பினார். இதுவே யாங்கள் வந்த காரியம்" என்றுரைத்தார்கள். மன்னனும் மனமிசைந்து,

85. "எல்லா உயிர்களையும், உலகங்களையும் ஈன்ற உமையாளை ஈசனார்க்கு மணம் செய்து கொடுத்து, என்னையும் அடிமையாகத் தருவேன்" என்றான். அப்பொழுது அவனருகே நின்ற மனையாள், சிறிது வாடிய முகத்தோடு,

86. "ஐயன்மீர்! பிரமதேவனது புதல்வனாகிய தக்கன் தனது ஒப்பற்ற திருமகளை ஈசனுக்கு மணமசெய்து கொடுத்தான் என்றும், அங்ஙனம் கொடுத்த தக்கன் தலையை அப்பெருமான் தகர்த்தெறிந்தான் என்று சொல்லினார்களே. அந்நிலைமையை நினைத்தால் என் நெஞ்சம்

என்றலும் அவளை நோக்கி
எழுமுனி வோரும் சொல்வார்
ஒன்றும்நீ இரங்கல் வாழி
ஒப்பிலா முதல்வன் செய்கை
நன்றுதேர்ந் திலையால் தக்கன்
நலத்தகும் அவியை மாற்றி
அன்றுதன் இகழ்த லாலே
அவன்தலை முடிவு செய்தான். 87

வரைமிசை அரசாள்வோன்
மணவினை இசைவெல்லாம்
உரைசெய, அருள்செய்தே
உம்பரின் முனிகாணீர்
புரிதரு செயலாற்றப்
போகுதிர் எனவோடும்
அரனடி தொழுதேத்தி
அவர்பதம் அணுகுற்றார். 88

---

அஞ்சுகின்றதே! எமது குலமகளை அவர்க்குக் கொடுப்பது எப்படி" என்று கூறினாள்.

87. இவ்வாறு அஞ்சி வினவிய மலையரசியின் மனத்தைத் தெளிவிக்கக் கருதிய முனிவர்கள் "மாதே', நீ, சிறிதும் வருந்தவேண்டாம். தன்னிகரில்லாத் தலைவன் செய்கையை நீ நன்றாக உணரவில்லை. தக்கன் தவறு செய்தான். அவன் ஆக்கிய வேள்வியில் ஆதிமுதல்வனாகிய சிவனுக்கு அவிர்ப்பாகம் கொடுக்க மறுத்தான். அப்பெருமானை இகழ்ந்தும் பேசினான். அதனால் ஈசன் அவன் தலையை அறுத்திட்டார்."

88. (என்று கூறியபொழுது அரசியும் கவலை தீர்ந்து திருமணம் செய்து கொடுக்க இசைந்தாள்.) மலையரசன் திருமணத்திற்கு இசைந்த செய்தியை முனிவர்கள் ஈசனிடம் போந்து விண்ணப்பம் செய்தார்கள். பெருமான் எழுவர்க்கும் திருவருள் புரிந்து விடை கொடுத்தார். அவரது சேவடி தொழுது அன்னார் தம் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

### அரசன் தேவ தச்சனைப் பணித்தல்

என்னையாள் கண்ணுதல்
இறைவற்கு யான்பெறும்
அன்னையாம் உமைதனை
அளிப்பன் இவ்வரைக்
கன்னிமா நகர்எலாம்
கவின் சிறந்திடப்
பொன்னின் நாடாமெனப்
புனைதி யால்என்றான். 89

சீதரன் அயன்முதல் தேவர் மாத்தொகை
மாதவ முனிவரார் மடந்தை மாரொடு
காதலின் உமைமணம் காண வந்திடத்
தூதரை எங்கணும் தூண்டினரோ. 90

### மணமகளைக் கோலம் செய்தல்

பங்கய மிசைவரு பாவையே முதல்
நங்கையர் யாவரும் நற்ற வத்தினால்
அங்கம்நொந்து உறைதரும் அம்மை தாழ்தொழா
மங்கல வதுவையின் வனப்புச் செய்தனர். 91

---

89. மலையரசன் உடனே தேவ தச்சனை அழைத்து "என்னை யாளுடைய சிவபெருமானுக்கு, யான் பெற்ற உலக மாதாவாகிய உமையவளைத் திருமணம் செய்து கொடுக்கப் போகின்றேன். ஆதலால் இம்மாநகர் முழுவதும் அழகுற இலங்கும் வண்ணம் பொன்னுலகத்தைப் போன்று அலங்கரிப்பாயாக" எனப் பணித்தான்.

90. பின்னர், திருமால் பிரமன் முதலிய தேவ குலங்களும், மாதவ முனிவர்களும் அவர்தம் பன்னியரும் அன்புடன் உமையவள் திருமணத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று எங்கும் தூதரை அனுப்பினான்.

91. செந்தாமரையில் வாழும் திருமகள் முதலிய மாதர் அனைவரும், தாம் செய்த நற்றவத்தின் பயனாக, நெடுங்காலம் நோன்பியற்றி அங்கமெலாம் நொந்த உமையம்மையைத் தொழுது மங்கலமாகிய மணக்கோலம் செய்தார்கள்.

நெறிதரு தவத்துரு நீக்கிக் காமருக்கு
உறையுள தாகிய உமைதன் மெய்யினைக்
குறைதவிர் நிலைமையிற் கோலம் செய்தனர்
இறைவனை வழிபடும் இயல்பி னோர்என. 92

### ஈசன் திருமணத்திற்கு எழுந்தருளல்

ஈங்கிது காலை தன்னில்
இமகிரி புரக்கும் மன்னன்
பாங்குறு தமர்க ளோடும்
பரிவொடும் சென்று வெள்ளி
ஓங்கலின் நந்தி உய்ப்ப
உயிர்க் குயிரான அண்ணல்
பூங்கழல் வணங்கி நின்றுங்கு
இனையன புகலல் உற்றான். 93

ஆதியின் உலகம் எல்லாம்
அளித்திடும் அன்னை தன்னைக்
காதலின் வதுவை செய்யக்
கருதினை, கணித நூலோர்
ஓதுபங் குனியின் திங்கள்
உத்தரம் இன்றே யாகும்
ஈதுநன் முகூர்த்தம் எந்தாய்
இமையமேல் வருதி என்றான். 94

---

92. இறைவனை வழிபடும அன்பர்போல ஆர்வத்தோடு உமையம்மையின் தவக்கோலத்தைக் களைந்தார்கள்; அழகெலாம் ஒருங்கே வாய்ந்த மங்கையின் மேனியைக் குறையற்ற முறையிற் கோலம் செய்தார்கள்.

93. இவ்வண்ணம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் மலையரசன் நெருங்கிய சுற்றத்தோடும் நிறைந்த அன்போடும் திருக்கயிலாச மலையை அடைந்தான். நந்தி தேவரது ஆணைபெற்று, உயிர்க் குயிராகிய சிவபெருமான் சேவடி வணங்கி நின்று,

94. 'எம்பெருமானே! ஆதியில் அகில உலகமும் ஈன்றருளிய அன்னையைக் காதலோடு மணம்புரியத் திருவுளம் கொண்டீர்! சோதிட நூலோர் குறித்த நல் முகூர்த்தம்

அந்த வேலையில் கயிலையில்
எம்பிரான் அருளால்
நந்தி தேவரை விளித்து நம்
மணச்செயல் நாட
முந்து சீருடை உருத்திர
கணங்கள்மால் முதலோர்
இந்தி ராதியர் யாரையும்
தருதிஎன்று இசைத்தான். 95
நீண்ட சீர்உருத் திரர்தமை
நிறைந்தபல் கணத்தை
ஈண்டு தேவரை முனிவரை
வீற்றுவீற் றிசையா
ஆண்டு தன்விரற் சுட்டியே
ஆதி நாயகற்குக்
காண்டல் செய்துநின்று ஏத்தினன்
வேத்திரக் கரத்தோன். 96
அன்ன காலையில் நான்முகன்
எம்பிரான் அணிவான்

---

பங்குனி உத்தரமாகும். அந்நாளே இந்நாள். ஆதலால் இமயமலைக்கு எழுந்தருளல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தான். ஈசன் அதற்கு இசைந்தருளினர். மலையரசன் விடை பெற்றுச் சென்றான்.

95. உடனே பெருமான் நந்தி தேவரைக் கருணையோடு அழைத்தார். "நம் திருமணத்தைக் காண்பதற்குச் சிறந்த உருத்திர கணங்கள், திருமால் முதலாயினோர், இந்திராதியர்கள் எல்லோரையும் வரவழைப்பாயாக' எனப் பணித்தார்.

96. (ஆணைப்படியே எல்லோரையும் நந்திதேவர் வரவழைத்து,) உருத்திரர்கள், சிவகணங்கள், தேவர்கள் வர்கள் இவர்களைத் தனித் தனியாக வகுத்துத் தன் கைவிரலாற் சுட்டி, ஈசனிடம் காட்டிப் பிரம்பேந்தி நின்றார் நந்திதேவர்.

97. அப்பொழுது பிரமதேவன், எம்பெருமான் அணிந்து கொள்ளவேண்டும் என்று கருதி,மகுடம முதலிய

உன்னி யேமுடி முதலிய
பல்கலன் உதவிப்
பொன்னின் ஆயதோர் பீடிகை
யிற்கொடு போந்து
முன்ன ராகவைத்து இறைஞ்சியே
இத்திறம் மொழிவான். 97

ஐயகேள் உனக் கில்லையால்
பற்றிகல், அடியேம்
உய்யுமாறு இவண் மணஞ்செய
உன்னினை, உன்பால்
மையல் மாசுணப் பணியெலாம்
மாற்றிமற் றிந்தச்
செய்ய பேரணி அணிந்தருள்
என்றுசெப் பினனே. 98

பங்க யாசனன் குறைஇரந்து
இனையன பகர
அங்கண் மூரல்செய்து அன்புடன்
நீஅளித் திடலால்
இங்கு நாம்இவை அணிந்தென
மகிழ்ந்தனம் என்னாச்
செங்கை யால்அணி கலத்தினைத்
தொட்டருள் செய்தான். 99

---

பல நகைகளைப் பொற்பீடத்தின்மீது வைத்து எடுத்துக் கொண்டுவந்து, ஈசன் முன்னே வைத்து, வணங்கி,

98. "ஐயனே! உமக்கு விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை. அடியேம் உய்யும் வண்ணம் மணம் புரியத் திருவுளம் கொண்டீர். ஆதலால் திருமேனியில் அணிந்துள்ள அரவப் பணியெல்லாம் களைந்து இச்செவ்விய அணிகளை அணிந்து கொள்ளவேண்டும்" என்றான்.

99. அப்பொழுது பெருமான் புன்னகைகொண்டு "அன்புடன் நீ தந்த இந் நகைகளை நாம் அணிந்துகொண்டாற் போலவே மகிழ்வுற்றேம்!" என்று தம் திருக்கரத்தால் அவற்றைத் தொட்டு அருளினார்.

பிரமன் அன்புகண்டு இவ்வகை
அருள்செய்த பின்னர்
ஒருதன் மெய்யணி பணிகளே
அணிகளாய் உறுவான்
திருவுளம் கொள அவ்வகை
யாகிய, செகத்தை
அருள் புரிந்திடு பராபரற்கு
இச்செயல் அரிதோ. 100

கண்டு யாவரும் அற்புதம்
அடைந்துகை தொழலும்
வண்டு லாம் குழல் கவுரிபால்
ஏகுவான் மனத்தில்
கொண்டு பாங்குறை தலைவருக்கு
உணர்த்தியே குறிப்பால்
பண்டு மால்அயற் கரியவன்
எழுந்தனன் படர. 101

மிண்டி நின்றிடும் வீதியின் மாதரார்
அண்டர் நாயகன் அற்புதப் பேருருக்
கண்டு தாழ்ந்து கரைதவிர் காதலாம்
தெண்திரைப் படிந் தார்செயல் வேறிலார். 102

---

100. பின்பு தம் திருமேனியில் அமைந்த அரவங்களே ஆபரணமாக விளங்கும்படி ஈசன் திருவுள்ளத்திலே கருதினார். அவை அவ்வண்ணமே ஆயின. உலகெலாம் படைத்துக் காத்து அழிக்கும் பரம்பொருளாகிய ஈசனுக்கு இச்செயல் அரிதாகுமோ?

101. அதனைக் கண்டு யாவரும் வியப்படைந்து கைகூப்பித் தொழுது நின்றார். முன்னாள் திருமாலும் அயனும் தேடிக் காணாத தேவதேவன், உமாதேவியாரிடம் செல்லத் திருவுளம பற்றினார்; அக்கருத்தை அருகேயிருந்த தலைவர்க்குக் குறிப்பினால் உணர்த்தினார்; இமையமா மலைக்கு எழுந்தருளினார்.

102. ஈசன் மணக்கோலத்தில் இமயமாநகர் வீதியிலே எழுந்தருளியபோது, மங்கையர் அப்பெருமானது

நிறைத்த பூண்களும் நேர்ந்தபொன் ஆடையும்
நறைத்த சாந்தமும் நாண்மலர்க் கண்ணியும்
பிறைத் திருச்சடைப் பிஞ்ஞகன் பேரெழில்
மறைத்த தென்று மனந்தளர் வார்சிலர். 103

திருகு வார்சடைச் செய்யனை நோக்கிநின்று
உருகு வார்சிலர் உள்ளுற வெம்பியே
கருகு வார்சிலர் காதலி மாரொடும்
பெருகு காதலைப் பேசுகின் றார்சிலர். 104

சாற்றி இங்கினி ஆவதென் தையல்மீர்
ஏற்றின் மேவினர் எம்மை மணந்திட
மாற்றி லாத மலைமகள் போலயாம்
நோற்றி லோமென நொந்துயிர்ப் பார்சிலர். 105

அமையப்படும் அப்பொழு தத்தினில்
ஆதி அண்ணல்
விமலத்திரு மாமணம் காணுற
மேலை யண்டச்

---

அற்புத் திருவுருவைக்கண்டு வணங்கிக் கங்குகரை யற்ற காதல் வெள்ளத்திலே மூழ்கினார்; செயல் அற்றார்.

103. எம்பெருமான் அணிந்துள்ள நகைகளும், தரித்துள்ள பொன்னாடையும், பூசியுள்ள கலவைச் சந்தனமும், புனைந்துள்ள புதுமலர் மாலைகளும் அவருடைய இயற்கையான பேரழகை மறைத்தனவே என்று மனந்தளர்ந்தார் சில மங்கையர்.

104. முறுக்கமைந்த நெடுஞ்சடைமுடியுடைய செம்மேனி எம்மானை நோக்கி நின்று மனம் உருகுவார் சிலர்; காதலுற்று வெதும்பிக் கருகுவார் சிலர்; தோழியரோடு பெருகும் காதலைப் பேசுவார் சிலர்.

105. "பல பல பேசுதலால் வரும் பயன் என்ன? பெற்றம் ஊர்ந்த பெருமானை மணந்திட மலைமகள் பெருந்தவம் புரிந்தாள். நாம் அவ்வாறு தவம் செய்தோமில்லை" என்று பெருமூச்சு எறிந்தார் சிலர்.

106. இங்ஙனம் பலர்பேச இறைவன் பவனி வரும்பொழுது, திருக்கல்யாண விழாவினைக் காணும்பொருட்டு

சுமையுற்றிடும் எப்புவ னத்தரும்
　　தொக்க நீரால்
'இமையச் சயிலம் துளங் குற்றது
　　இடுக்கண் எய்தி. 106

ஓங்குற் றதுதென் புவியாதலும்
　　உம்பர் எலலாம்
ஏங்குற்.றனர்மண் உலகோர்கள்
　　இடுக்கண் உற்றுத்
தீங்குற் றனவோ எமக்கென்று
　　தியக்கம் உற்றார்
பாங்குற் றிடுதொல் முனிவோரும்
　　பரியல் உற்றார். 107

இன்னோர் எவரும் சிவனேஎன்று
　　இரங்க லோடும்
முன்னோனும் அன்ன செயல்கண்டு
　　முறுவல் எய்தி
அன்னோர் குறைநீத் திடநந்தியை
　　நோக்கி ஆழி
தன்னோர் கரத்திற் செறித்தானைத்
　　தருதி என்றான். 108

---

எல்லாப் புவனத்தில் உள்ளவர்களும் வந்து சேர்ந்தமையால் இமையமலை வருந்தி நடுக்கமுற்றது.

107. பூவுலகத்தின் வடதலை தாழ்ந்தது; தென்தலை உயர்ந்தது. வானவரெல்லாம் ஏக்கமுற்றார். தீங்கு நேர்ந்ததோ என்று நில வுலகத்தார் மயக்கம் உற்றார். பெருமான் அருகே இருந்த பெரிய முனிவர்களும் வருத்தமுற்றார்.

108. எல்லோரும் சிவனே சிவனே என்று ஓலமிட்டுச் சிந்தை தளர்ந்தார். அது கண்ட ஈசன் புன்னகை கொண்டு, அடியார் துயரம் தீர்க்குமாறு, நந்திதேவரை நோக்கி, 'கடலைக் கையகத் தடக்கிய அகத்திய முனிவரை இங்கு அழைத்து வருக' என்றார்.

தாழும் தவத்தோன் தனைக்கண்ணுதல்
சாமி நோக்கித்
தாழும் குறியோய், இவண் யாவரும்
சார்த லாலே
தாழும் புவி தக்கிணம் உத்தரம்
சால ஓங்கத்
தாழும் சுவர்க்க நிலனும்
நனிதாழும் அன்றே. 109

ஆறல் முனிகேள் ஒருநீ, இவ்
அசலம் நீங்கித்
தேனார் மருத வளம்மேய
தென்னாடு நண்ணி
வானார் பொதிய மலைமேவுதி
வையம் எல்லாம்
மேனாள் எனவே நிகராகி
விளங்கும் என்றான். 110

பிறையொன்று வேணிப்
பரன்இங்கிது பேச லோடும்
மறையொன்று தீஞ்சொல்
தமிழ்மாமுனி அச்சம் எய்தி

---

109. முனிவரும் வந்து இறைவன் திருவடியிற் பணிந்தார். அந்நிலையில் ஈசன் "குறுமுனியே! இவ் விமைய மலைக்கு யாவரும் வந்தமையால் தென் திசை உயர்ந்தது; வடதிசை தாழ்ந்தது; ஆதலால் சுவர்க்கலோகமும் தாழ்ந்து விடும்.

110. ஆயினும் முனிவா! ஒப்பற்ற நீ இம்மலையினின்றும் நீங்கித் தேனடைந்த வளமார்ந்த தென்னாட்டிற் போந்து பொதியமலையில் அமர்வாயாயின், உலகமெல்லாம் முன்போலவே சமநிலை யடைந்து விளங்கும்" என்றார்.

111. பிறையணிந்த பெருமான் இங்ஙனம் பணித்த போது, வேதம் பொருந்திய இனிய மொழியுடைய தமிழ் முனிவன் அச்சம் எய்தி "ஐயனே! அடியேன் செய்தகுற்றம் ஏதேனும் உண்டோ? திருமணம் காண ஆசையுற்றுவந்த

குறையொன்று யான்செய்
துளனோ கொடியேனை ஈண்டே
உறை என் றிலேசேண்
இடைச்செல்ல உரைத்தி எந்தாய். 111

என்னக் குறிய முனிவன்தனை
எந்தை நோக்கி
உன்னைப் பொருவும் முனிவோர்
உலகத்தில் உண்டோ
அன்னத் தவனும் உனைநேர்கிலன்
ஆத லால்நீ
முன்னிற் றெவையும் தவறின்றி
முடித்தி மன்னோ. 112

வேறுற்றிடு தொல்முனி வோர்களின்
விண்ணு ளோரின்
ஈறுற்றிடுமோ இது செய்கை
எவர்க்கும் மேலாம்
பேறுற்ற நின்னால் முடிவாகும்
பெயரு கென்று
கூறுற் றிடலும் முனிஈது
குறித்து உரைப்பான். 113

---

தீவினை யாளனாகிய என்னை இங்கே இருக்கப் பணியாமல் நெடுந்தூரம் செல்லப்பணித்தீரே" என்று வருந்தினான்.

112. அப்பொழுது எம்பெருமான் முனிவரை அமர்ந்து நோக்கி, "உன்னைப் போன்ற முனிவர்கள் உலகத்தில் உண்டோ? அன்னவாகனம் உடைய பிரமனும் உனக்கு நிகரிலன். ஆதலால் நீ கருதிய எல்லாம் தவறாமல் முடிப்பாய்.

113. வேறுள்ள முனிவராலும், தேவராலும் இக் காரியம் முடியுமோ? யாவரினும் சிறந்த பேறுபெற்ற உன்னாலேயே முடியும். ஆதலால் இப்பொழுதே புறப்படு" என்று அருளிச் செய்தார். அவ்வுரைகேட்ட முனிவர்,

ஈங்குஇப் பணியை அளித்தாய் எனில்
எந்தை உன்தன்
பாங்குற்ற புத்தேள் மணக்காட்சி
பணிந்தி டாமல்
நீங்கற்கு அரிதாம் கவல்கின்றதுஎன்
நெஞ்சம் என்ன
ஓங்கற் கயிலைத் தனிநாயகன்
ஓதல் உற்றான். 114

சிந்தையது அழுங்கல் இன்றித்
தென்மலை சேறி, அங்கண்
வந்துநம் வதுவைக் காட்சி
வழங்குதும், மகிழ்ந்து காண்டி
நந்தமை உன்னி ஆங்கே
நாள்சில இருத்தி, பின்னர்
முந்தையில் எமது பாங்கர்
வருதியால் முனிவ என்றான். 115

என்றிவை அமலன் செப்ப
இசைதரு புலத்தன் ஆகி
மன்றமர் கழல்கள் தம்மைப்
பன்முறை வணக்கம் செய்து

---

114. "எம்பெருமானே! இப்பணியை எனக்கு அளித்தீர்! ஆயினும் இங்கு நிகழப்போகின்ற தெய்வத் திருமணக் காட்சியைக் கண்டு வணங்காமல் போவதற்கு இயலவில்லையே! நெஞ்சம் வருந்துகின்றதே" என்று விண்ணப்பம் செய்தார்.

115. அம்மொழி கேட்ட கயிலைநாதன் "முனிவா! மனம் வருந்தாதே! பொதிய மலைக்குச் செல். அங்கே வந்து நம் திருமணக்காட்சி தருவோம். மனமகிழ்ந்து காண்பாயாக. எம்மை நினைந்து அம்மலையிற் சிலகாலம் இருந்து, பின்னர் முன்போலவே எம்மிடம் வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

116. தமிழ் முனிவன் மனமகிழ்ந்து சிவபெருமான் சேவடியைப் பன்முறை வணங்கிக் கைகூப்பித் தொழுது

நின்றுகை தொழுது போற்றி
நெடிதுயிர்த்து அரிதின் நீங்கித்
தென்திசை எல்லை நோக்கிச்
சிறுமுனி கடிது போனான். 116

பொதியமதென்னும் வெற்பில்
புனிதமா முனிவன் வைகத்
துதியுறு வடபால் தென்பால்
புவனியோர் துலைபோல் ஒப்ப
அதுபொழுது உயிர்கள் ஆனோர்
அணங்கொரீஇ அரனை ஏத்தி
மதிமகிழ்ந்து அமர்ந்தார் தொல்லை
வதுவையின் செய்கை சொல்வாம். 117

## திருமணக் காட்சி

அங்கது பொழுது தன்னில்
அரசன திசைவால் எங்கள்
சங்கரி ஐயை காப்பச்
சசியென்பாள் அடைப்பை ஏந்தக்
தங்கைகள் கவரி வீசக்
காளிகள் கவிகை பற்றப்
பங்கய மான்கை பற்றிப்
பாரதி பரவ வந்தாள். 118

---

பெருமூச் செறிந்து, பிரியாவிடை பெற்றுத் தென்திசை நோக்கிச் சென்றான்.

117. பொதியம் என்னும் பேர்பெற்ற மலையில் முனிவன் போய் அமர்ந்தான். வடதலையும் தென்தலையும் துலாக் கோல் போல் சமனாக நின்றன. உயிர்கள் எல்லாம் துயரம் ஒழிந்து, ஈசனைத் துதித்து மகிழ்ச்சியுற்றிருந்தார்கள். இனித் திருமணத்தின் சிறப்பினைச் சொல்வோம்.

118. திருக்கல்யாணத்திற்குக் குறித்த வேளையில், மலையரசன் விரும்பியவாறு கொற்றவை காவல்செய்ய, இந்திரை அடைப்பை ஏந்த, கங்கை முதலிய நங்கையர் கவரி வீச, காளிகள் குடைபிடிக்க, கலைமகள் இனிய பாட்டிசைக்க, திருமகள் கையைப் பற்றிக்கொண்டு உமாதேவி எழுந்தருளினாள்

வந்திடும் உலகை ஈன்றாள்
வதுவையம் சாலை நண்ணி
அந்தமொ டாதி இல்லான்
அடிகளை வணங்க முன்னோன்
முந்துறு தவிசின் தன்பால்
முற்றிழை இருத்தி என்ன
இந்திரை முதலோர் யாரும்
ஏத்திட இருந்தாள் அன்றே. 119

பூசனை புரிந்த பின்னர்ப்
புவனம் ஈன் றாள்தன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப்
பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொடு அளித்தேன் என்று
நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் உதகம் உய்த்தான்
மருகன்என்று அவனை உன்னி. 120

எங்குள பொருளும் கோளும்
ஈதலும் தானே ஆகும்

---

119. இவ்வண்ணம் திருமணச்சாலையை அடைந்த தேவி ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியின் அடிகளில் விழுந்து வணங்கினாள். அரியாசனத்தில் தன் பக்கத்தில் அமருமாறு உமையைப் பணித்தார் ஈசன். இந்திரை முதலிய யாவரும் துதிக்க உமையவள் இறைவன் மருங்கே அமர்ந்தாள்.

120. மலையரசன் ஈசனுக்குரிய பூசனைசெய்து புவனம் ஈன்ற உமையவள் கையைப் பாசம் அகன்ற பரமன் கையில் வைத்து 'என் புதல்வியாகிய உமையை உமக்கு அன்புடன் தந்தேன்' என்று வேதமந்திரம் ஓதிப் பெருமானை மருமான் எனக்கருதி வாசநன்னீரால் தாரை வார்த்தான்.

121. எல்லாப் பொருளும் தானே யாகிக் கொள்வானும் கொடுப்பானும் ஆகிய சங்கரன், உலக மாதாவாகிய மங்கையை மலையரசன் கொடுக்கத் திருமண

சங்கரன், உலக மெல்லாம்
தந்திடும் கன்னி தன்னை
மங்கல முறையாற் கொண்டான்
மலைமகன் கொடுப்ப என்றால்
அங்கவன் அருளின் நீர்மை
ஆர்அறிந் துரைக்கற் பாலார். 121

ஆனதோர் அமையந் தன்னில்
ஆடினர் அமரர், மாதர்
கானம திசைத்தார் சித்தர்
கந்தரு வத்தர் ஆனோர்
ஏனைய இருவர் தாமும்
ஏழிசைக் கீதம் செய்தார்
வானவர் முனிவர் யாரும்
மறைகளை அறையல் உற்றார். 122

அந்தணர் கரணம் எல்லாம்
ஆற்றியே முடிந்த பின்னர்த்
தந்தையும் தாயும் ஆகி
உலகெலாம் தந்தோர் தம்மை
முந்துற அயனும் பின்னர்
முகுந்தனும் அதற்குப் பின்னர்
இந்திரன முனிவர் வானோர்
யாவரும் இறைஞ்சல் உற்றார். 123

---

முறையில் பெற்றுக்கொண்டார் என்றால் எம்பெருமானது திருவருளின் தன்மையை யாவரே அறிந்து கூறவல்லார்?

122. அச்சமயத்தில் அரம்பையர் நடனம்செய்தனர்; சித்தரும கந்தருவரும் கானம பாடினர்; தும்புருவும் நாரதரும் வீணையில் ஏழிசைக் கீதம் இசைத்தனர்; தேவரும் முனிவரும் வேதம் ஓதுவாராயினர்.

123. ஐயர்கள் திருமணச் சடங்குகள் செய்து முடித்த பின்னர், தந்தையும் தாயுமாகி உலகமெல்லாம் ஈன்றருளிய ஈசனையும் உமையாளையும் முதலில் பிரமதேவன் வணங்கினன்; பின்னர் மாயோனும், இந்திரனும், முனிவரும் தேவரும் முறையாக வழிபட்டார்கள்.

தன்னுறு கணவன் துஞ்சத்
தாபத நிலையள் ஆகி
இன்னலை அடைந்து அங்குற்ற
இரதி அவ்வெல்லை வந்து
மன்னுயிர் முழுதும் ஈன்ற
மங்கையை மணந்த வள்ளல்
பொன்னடி வணங்கித் தீயேன்
புன்கணைத் தவிர்த்தி என்றாள். 124

சீருறு கணவன் இல்லாள்
செப்பிய மாற்றம் கேளா
ஆருயிர் முழுதும் நின்றே
அனைத்தையும் உணர்ந்து கூட்டும்
பேரருள் உடைய நாதன்
பேதுறல் மடந்தை என்று
மாரன்வந்து உதிக்கும் வண்ணம்
மனத்திடை நினைத்தான் அன்றே 125

முன்பொடு தோன்றும் மாரன்
முதல்வியோடு இருந்த நாதன்
பொன்புனை கமலத் தாள்முன்
போந்தனன் தாழ்ந்து போற்றி

---

124. அந்நிலையில் மன்மதனை இழந்து கைம்மை விரதம் பூண்டு துன்புற்ற ரதியாள் ஈசனது பொன்னடிகளில் விழுந்து வணங்கித் 'தீவினையேன் துன்பத்தைத் தீர்த்தருளல் வேண்டும்' என்றாள்.

125 அப்போது, உயிர்க்குயிராக நின்று வினைப் பயனை உணர்ந்து ஊட்டும் கருணை வள்ளலாகிய பெருமான் 'மாதே! வருந்தாதே!' என்றுரைத்து மன்மதன் வந்து தோன்றும்படி மனத்திலே நினைத்தார்.

126. உடனே முன்னைய வடிவத்தொடு தோன்றிய மன்மதன் உமாதேவியாரோடு வீற்றிருந்த சிவபெருமானது பொன்னார் திருவடியை வணங்கித் துதித்து 'ஐயனே! அடியேன செய்த பிழை பொறுத்தல் வேண்டும்'

என்பிழை பொறுத்தி என்ன
யாம்உனை முனியின் அன்றே
பின்பது தணிவது உள்ளம்
பேதுறல் மைந்த என்றான். 126

எரிபுனை நமது நோக்கால்
இறந்த நின் உடலம் நீறாய்
விரைவொடு போயிற் றன்றே
வேண்டினள் இரதி, அன்னாட்கு
உருவமாய் இருத்தி, ஏனை
உம்பரோடு இம்பர்க் கெல்லாம்
அருவினை யாகி உன்தன்
அரசியல் புரிதி என்றான். 127

மன்னுயிர்க்கு உயிராய் நின்றோன்
மால்விடை ஏறி மாதைத்
தன்னொரு பாங்கிற் கொண்டு
தழீஇக்கொடு நடத்தி வானோர்
தொன்னிலை அமைந்து செல்லத்
துவன்றியே கணங்கள் சுற்றப்
பொன்னியல் இமயம் நீர்ந்து
வெள்ளியம் பொருப்பில் வந்தான். 128

---

என்றான். அதுகேட்ட பெருமான் "மைந்தா! உன்னிடம் சீற்றம் உற்றாலன்றோ இப்பொழுது சீற்றம் தணிவது! மனம் கலங்காதே.

127. நெருப்பைக் கொண்ட நமது நோக்கால் எரிந்த நின் உடலம் பொடியாகி அப்பொழுதே போயிற்று. ஆயினும் ரதிதேவி வேண்டுகின்றாளாதலின் அவளுக்குமட்டும் உருவத்துடன் விளங்குவாயாக. ஏனை வானவர் முதலிய யாவர்க்கும அநங்கனாய் இருந்து உன் அரசியலை நடத்துக" எனப் பணித்தார்.

128. பின்பு மன்னுயிர்க்கு உயிராகிய ஈசன் பெரிய இடப வாகனத்தில் எழுந்தருளி, உமாதேவியாரைப் பக்கத்திற்கொண்டு முன்போலவே வானவரும் பூத கணங்களும்

## வானவர் முறையீடு

உலகினை அவுணர்க்கு ஈந்தே
யோகிபோல் வைகி நம்பால்
மெலிவினைப் படுத்தி யாம்போய்
வேண்டலும் இரக்கம் எய்தி
மலைமகள் தன்னை வேட்டான்
மைந்தனைத் தந்து நம்மைத்
தலையளி புரியான் வாளா
இருப்பதென் தாணு ஆனோன். 129

மன்னிய கயிலைமால் வரையின் யாமெலாம்
இன்னினி ஏகியே ஈசன் தன்முனம்
உன்னரும் காலமொடு உற்ற நம்குறை
பன்னுதல் துணிபெனப் பலரும் கூறினார். 130

அம்மையோர் பங்குற
அரியணைக் கண் உறும்
எம்மையாள் இறைவன்முன்
எய்தியே ஆங்கவன்

---

புடைசூழப் பொன்மயமான இமையத்தை விட்டு வெள்ளி மாமலையை அடைந்தார். இவ்வாறு இருக்கையில்,

129. "உலகத்தையெல்லாம் அசுரரிடம் ஒப்புவித்து நமக்குத் துன்பத்தை விளைவித்து, யோகிபோல் இருந்தார் ஈசன். நாம் சென்று வேண்டிக்கொண்டபொழுது இரக்க முற்றுப பார்வதிதேவியை மணந்தார்; ஆயினும் ஒரு மைந்தனைத் தந்து நம்மைக் காத்தருளாமல் சும்மா இருப்பது ஏனோ?

130. கயிலாச மலையில் நாமனைவரும் இப்பொழுதே சென்று, நினைத்தற்கரிய நெடுங்காலமாக அடைந்து வரும் துன்பங்களை முறையிடுதலே உறுதியாகக் கொள்ளத்தக்க" தென்று தேவர் பலரும் கூறினர்.

131. அப்படியே கயிலையங்கிரியை அடைந்து, உமை யொருபாகத் திறைவன் முன்னேபோந்து செம்மை வாய்ந்த

செம்மைசேர் தாள்களைச்
சென்னியால் தாழ்ந்தெழீஇப்
பொய்ம்மைதீர் அன்பினுல்
இனையவா போற்றுவார். 131

இருமையும் ஒருமையும் இரண்டும் ஒன்றிய
ஒருமையும் அன்றெனு உலகம் யாவையும்
பெருமையின் இயற்றிய பெரும, நின்செயல்
அருமறை யானவும் அறிதற் பாலவோ. 132

உருவொடு தொழில்பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீஅவை பரித்து நிற்பதும்
விரவிய உயிர்க் கெலாம் வீடு தந்திடும்
கருணையதே யலால் கருமம் யாவதே. 133

முன்னதின் முன்னென மொழிதுமே எனில்
பின்னதின் பின்னுமாப் பேச நிற்றியால்
அன்னவையே எனில் ஒழிந்த தல்லையோ
என்னென நின்னையாம் ஏத்து கின்றதே. 134

---

திருவடிகளைத் தலையால் வணங்கி எழுந்து மெய்யன்போடு துதிக்கலுற்ருர்.

132. "பேதமும அபேதமும், பேதா பேதமும் அல்ல என்று சொலலும்படி நின்று உலகங்களை யெல்லாம் படைத்தருளிய ஆண்டவனே! அருமையான வேதங்களும் உமது செய்கையை அறியும் தன்மை யுடையனவோ?

133. உருவம், தொழில், பெயர் ஒன்றும் இன்றியே எங்கும் வியாபித்துள்ள நீர் அம்மூன்றையும் தாங்கி நிற்பது, மன்னுயிர்க்கெல்லாம் முத்தி யளித்திடும் கருணையினுல் அன்ருே?

134. பழமைக் கெல்லாம் பழமையான பொருள் நீர் என்ருல், புதுமைக்கும் புதுமையான பொருளாக உள்ளீர்! பழமையும் புதுமையும் நீர் என்ருல் மற்றவைகள் அல்லீரோ? உம்மை யாதென்று துதிப்போம்?

எங்களை முன்னரே இயல்பின் ஈந்தனை
எங்களை இவ்வர சியற்று வித்தனை
எங்களோடு ஒருவன்என் றிருத்தி நின்செயல்
எங்களின் அறிவரிது என்று போற்றினர். 135

அவ்வகை அமரர் எல்லாம்
அன்புசெய்து ஏத்தும் எல்லை
மைவரு மிடற்றுப் புத்தேள்
மற்றவர் வதனம் நோக்கி
நொவவுறல் எய்திச் சிந்தை
நுணங்கினீர், நுங்கட்கு இன்னே
எவ்வரம் எனினும் ஈதும்
வேண்டியது இசைத்திர் என்றான். 136

ஆதியும் நடுவும் ஈறும்
அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும்
இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற
விமலனோர் குமரன் தன்னை

135. எங்களை முன்னமே படைத்தீர்; ஆட்சிசெய்யும்படி எங்களுக்கு அருள் செய்தீர; எங்களில் ஒருவராகவும் உள்ளீர். நும்செயல் எங்களால் அறிய ஒண்ணாது" என்று போற்றினர்.

136. அப்போது நீலகண்டனாகிய ஈசன் அவர்முகம் நோக்கி 'நீர் வருந்தி மனம் தளர்ந்தீர்! உமக்கு என்ன வரம் வேண்டும் என்றாலும் இப்பொழுதே தருவோம்! வேண்டியதைச் சொல்லும்' என்றார்.

137. அதுகேட்ட தேவர் அகமகிழ்ந்து "ஆதியும் நடுவும் அந்தமும் இல்லாத ஐயனே! அருவமும் உருவமும் இல்லாத ஆண்டவனே; தனக்குவமையில்லாத் தலைவனே; காரணங்களெல்லாம் கடந்து நின்ற கர்த்தனே; போக்கும் வரவும் இல்லாத புண்ணியனே; இன்பமும் துன்பமும் இல்லானே; வேதமும் கடந்து நின்ற விமலனே; உமக்கு

நீதரல் வேண்டும் நின்பால்
நின்னையே நிகர்க்க என்றார். 137

வந்திக்கும் மலரோன் ஆதி
வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர் செய்யற்க
புதல்வனைத் தருதும் என்று
அந்திக்கு நிகர்மெய் அண்ணல்
அருள்புரிந்து அறிஞர் ஆயோர்
சித்திக்கும் தனது தொல்லைத்
திருமுகம் ஆறும் கொண்டான். 138

## அறுமுகவேள் உற்பத்தி

நிற்புறும் அமரர் யாரும்
நெஞ்சுதுண் ணென்ன நீடும்
அற்புத நீரர் ஆகி
அருள்முறை உன்னிப் போற்றச்
சிற்பரன் தான்கொண் டுள்ள
திருமுகம் ஆறு தன்னில்
பொற்புறு நுதற்கண் தோறும்
புலிங்கம் ஒன் றொன்று தந்தான். 139

---

நிகரான ஒரு குமரனைத் தந்தருளல் வேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

138. இங்ஙனம் பிரமன் முதலிய வானவர் செய்த வண்ணப்பத்தைச் செவியில் ஏற்ற செம்மேனி எம்மான் 'நீர் விரும்பிய வாறே ஒரு புதல்வனைத் தருவோம்' என்று திருவாய் மலர்ந்து, ஐந்து முகத்தோடு அதோமுகமும் கொண்டு மெய்யறிஞர் தியானிக்கும் ஆறுமுகங்களோடு தோன்றினார்.

139. வானவர் அனைவரும் நெஞ்சம் திடுக்கிட்டு, வியப்புற்று, திருவருள் முறைமையை எண்ணித் துதித்து நிற்கையில், அம்முகங்களில் அமைந்த நெற்றிக் கண் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நெருப்புப் பொறியைத் தோற்றுவித்தார், ஈசன்.

காரண மில்லவன் கண்ணிற் கான்றதீ
பேரருள் புரிந்திடப் பிறந்த பான்மையால்
ஒருயிர் தன்னையும் ஒழிவு செய்தில
ஆரையும் எவற்றையும் அச்சம் செய்தவே. 140

அன்னதன் வெம்மைகண்டு அமலன் பாங்குறை
கன்னியும் வியர்த்தனள் கலங்கியே எழீஇப்
பொன்னடி நூபுரம் புலம்பித் தாக்குறத்
தன்னதோர் உறையுளைச் சார ஓடினள். 141

தீங்கனல் அடர்தலும் செம்பொற் கோயிலின்
யாங்கணும் ஆகியே இரிந்த பண்ணவர்
வீங்கிய உயிர்ப்பொடு மீண்டும் எந்தைதன்
பாங்கரில் வந்தனர் பரியும் நெஞ்சினர். 142

வெந்திறல் அவுணரை வீட்டு தற்கொரு
மைந்தனை அருள்கென வந்து வேண்டினேம்
அந்தமில் அழலைநீ அருளல் செய்தனை
எந்தையே எங்ஙனம் யாங்கள் உய்வதே. 143

---

140. இங்ஙனம் நெற்றிக் கண்களினின்று எழுந்த நெருப்புப் பொறிகள், உயிர்களுக்கு அருள் புரிந்திடத் தோன்றின ஆதலால் ஒருயிரையும் அழிக்கவில்லை. ஆயினும் எல்லாரையும், எல்லாவற்றையும் நடுங்கச் செய்தன.

141. அப்பொறிகளின் வெம்மையால் உமை யம்மை வியர்த்து, மனக் கலக்கமுற்று எழுந்து, பொன்னடிச் சிலம்புகள் புலம்ப, தன் இருக்கையை நோக்கி ஓடினள்.

142. தீப்பொறிகள் எங்கும் பரந்து செறிந்தபோது, செம்பொற் கோவிலில் அங்கு மிங்கும் சிதறிய வானவர்கள் பெருமூச்சோடு மீண்டும் எம்பெருமான் பக்கத்தில் வருந்திய மனத்தினராய் வந்தடைந்தார்கள்.

143. "எம் ஐயனே! கொடிய அசுரரைக் கொன்று ஒழித்தற்கு ஒரு மைந்தனை உம்மிடம் வேண்டினோம்; அதற்கு அளவற்ற நெருப்பை நீர் அளித்தீர். யாங்கள் இனி எவ்வாறு உய்வோம்?

விஞ்சிய பேரழல் வெம்மை ஆற்றலாது
அஞ்சினம் இரிந்தயாம் ஐய, நின்இரு
செஞ்சரண் அடைந்தனம் தெரியின் நீயலால்
தஞ்சம துளதுகொல் எம்மைத் தாங்கவே. 144

பொன்மலை வில்லினுன் புதிதின் வந்திடு
தன்முகம் ஐந்தையும் கரந்து தாவில்சீர்
நன்முகம் ஒன்ருெடு நண்ணி அத்துணைத்
தொன்மையின் இயற்கையாய்த் தோன்றி
[வைகினுன். 145

தன்அருள் நிலைமையால் சண்மு கத்திடை
நன்னுதல் விழிகளின் நல்கு தீப்பொறி
இந்நில வரைப்பும்வான் ஈண்டல் உற்றவை
முன்னுற வரும்வகை முதல்வன் முன்னினுன். 146

அந்தியம் பெருநிறத் தமலன் அவ்வகை
சிந்தைகொண் டிடுவழிச் செறிந்த பேரழல்
முந்தையின் வெம்பொறி மூவி ரண்டவாய்
வந்துமுன் குறுகலும் மகிழ்ந்து நோக்கினுன். 147

---

144. ஆண்டவனே! வெங்கனல் எங்கும் மேவிடுகின்றது. அதன் வெப்பத்திற்கு ஆற்ருது அஞ்சி ஓடிய நாங்கள் உம திருவடியே சரணம் என்று அடைந்தோம். எம்மைத் 'தஞ்சம் அளித்துத் தாங்கவல்லார் நீரே யன்றி வேறு யாருளார்?'' என்று பணிந்தார்கள்.

145. அப்போது ஈசன் புதிதாகத் தோன்றிய ஐந்து திருமுகங்களேயும் மறைத்து, முன்போல ஒரு முகத்தோடு விளங்கினுர்.

146. திருவருள் நெறியில் ஆறு முகங்களினின்றும் பிறந்த தீப்பொறிகள் மண்ணிலும் விண்ணிலும் சென்றனவெல்லாம் தம் முன்னே வரும்படி சிந்தித்தார்.

147. அப்பொழுதே எங்கும் நிறைந்த நெருப்பு முன்போல் ஆறு பொறிகளில் அடங்கி அவர் முன்னே சென்று அடைந்தது. அப்பொறிகளை ஈசன் அமர்ந்து நோக்கினுர்

### அறுமுகவேள் சரவணம் அடைதல்

நீங்கள் இச் சுடர்களை நெறியில் தாங்கியே
வீங்குநீர்க் கங்கையில் விடுத்திர் அன்னவை
ஆங்கவள் சரவணம் அமர உய்க்குமால்
ஈங்கிது நும்பணி என்றி யம்பினன். 148

கூற்றுயிர் உண்டதாட் குழகன் இவ்வகை
சாற்றிய துணர்தலும் தாழ்ந்து மும்முறை
போற்றினர் நடுங்கினர் புலம்பும் நெஞ்சினர்
காற்றொடு கனல்இவை கழறல் மேயினர். 149

ஒருநொடி அளவையின் உலகம் யாவுமாய்ப்
பெருகிய இத்தழல் பெரும, நின்னுடைத்
திருவருள் நிலைமையாற் சிறுகிற்று ஆதலால்
அரிது அரிது அடியரேம் ஆற்ற லாகுமோ. 150

அப்பெருங் கனலினை அடைதற்கு உன்னினும்
வெப்புறும் எமதுளம், வியர்க்கும் யாக்கையும்
எப்பரிசு ஏந்துவம் யாங்கள் என்றலும்
துப்புறழ் படர்சடைப் பகவன் சொல்லுவான். 151

---

148. (அங்கிலையில வாயு தேவனையும் அங்கித் தேவனையும நோக்கி) 'நீங்கள் இருவரும் இச்சுடர்களை முறையாகச் சுமந்து சென்று கங்கையாற்றில் சேர்த்து விடுங்கள். அவற்றைக் கங்கை சரவணப் பொய்கையிற் கொண்டு சேர்ப்பாள். இதுவே நும்பணி' என்றார் ஈசன்.

149. அவ்வுரை கேட்ட தேவர் இருவரும் திடுக்கிட்டு மும்முறை இறைவன் திருவடியில் விழுந்து எழுந்து,

150. "பெருமானே! ஒரு நொடிப் பொழுதில் உலகமெல்லாம் பரவிய இந்நெருப்பு உமது திருவருளாற் குறுகி நின்றது. இதனை அடியேம் தாங்கவல்லமோ?"

151. இத்தீப்பொறிகளை நெருங்க நினைத்தாலும் எமது மனம் வெதும்புகின்றது. மெய் முழுதும் வியர்க்கின்றது. இவற்றை எவ்வாறு சுமந்து செல்வோம்" என்று கூறினாகள்.

ஒன்றொரு நொடியினில் உலகம் முற்றுமாய்த்
துன்றிய இச்சுடர் சுமந்து கங்கையில்
சென்றிட நுங்கள்பால் திண்மை எய்துக
என்றலும் நன்றென இசைந்து போற்றினார். 152

ஆங்கனம் அவர்தமை ஆதி நோக்கிஇத்
தீங்கனல் சரவணம் செறிந்தொர் செம்மலாய்
ஓங்குபு சூர்கிளைக்கு ஒழிவு செய்யுமால்
ஈங்கினி யாவரும் ஏகுவீர் என்றான். 153

அரன்அருள் முறையினை அறிந்து கங்கைதன்
சிரமிசை ஏந்தியே சென்றொர் கன்னலில்
சரவணம் எனுமதடம் தன்னில் சேர்த்தனள்
மரையிதழ் ஆயிடை மல்குற்றால்என. 154

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்

---

152. அதுகேட்ட ஈசன் 'இப்பொறிகளைத் தாங்கிக் கங்கையளவும் சென்றிட உங்கள் இருவருக்கும் வேண்டிய வலிமை தருகின்றோம்' என்றருளினார். அவரும் அப்பணி யாற்ற இசைந்தனர்.

153. பின்னர் அங்கு நின்ற தேவர்களை நோக்கி "இப் பொறிகள் சரவணப்பொய்கையை அடைந்து, ஒரு குழந் தையாய் வளர்ந்து சூரன் குலத்தை நாசம் செய்யும். இனி நீங்கள் யாவரும் போகலாம்" என விடை கொடுத்தனுப் பினார்.

154. சிவபிரானுடைய திருவருள் முறைமையை அறிந்து கங்கை தன்பால வந்து சேர்ந்த பொறிகளைத் தலைமீது தாங்கிச் சென்று, ஒரு நாழிகையில் சரவணம் என்னும் பொய்கையிற் சேர்த்தாள். அங்கு அவை செந் தாமரை போல் விளங்கின.

155. அருவமாகவும் உருவமாகவும், அனாதியாகவும், ஒன்றாகவும் பலவாகவும நின்ற அரும்பெருஞ் சோதியே

கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய. 155

ஏவர்தம் பாலும் இன்றி
எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு
முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவணத் தண்
பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றல்
அறுமுகம் கொண்டான் அன்றே. 156

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினுல் அளக் கொணுமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின்
வீற்றிருந்து அருளி னானே. 157

அனற்பிழம்பாகிய மேனியும் ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்டு உலகம் உய்யுமாறு முருகனுகத் தோன்றினுர்.

156. வேறு எவரிடமும் இன்றிச் சிவபெருமானிடம் அமைந்த ஆறு குணங்களும் ஆறு முகங்களாய் அமைந்தாற்போன்று சரவணப் பூம்பொய்கையில் எழுந்தருளிய முருகன் மன்னுயிரைக் காத்தற்பொருட்டு ஆறுமுகங்களைக் கொண்டருளினுர்.

157. வேதாந்தத்தாலும், வாக்காலும் மனத்தாலும் அளவிட இயலாது எங்கும் நிறைந்து விளங்கும் ஈசன் கருணை கூர்ந்து அறுமுக உருவாய்த் தோன்றிச் சரவணப் பொய்கையில நறுமணங் கமழும் தாமரை மலரில் வீற்றிருந் தருளினுர்.

வளம்செறி இனைய பாலால்
    வான்சர வணமாம் பொய்கைத்
தளம்செறி பதுமம் ஒன்றில்
    சராசரம் யாவும் காப்பான்
உளம்செறி கருணை எய்தி
    ஒப்பிலாக் குமர மூர்த்தி
இளம்சிறு மதலை போல
    இனிதுவீற் றிருந்தான் மன்னோ. 158

சாற்றரும் சரவ ணத்தில்
    சண்முகத் தொருவ னாகி
வீற்றிருந்து அருளு கின்ற
    விமலன்ஓர் குழவி போலத்
தோற்றினன் அவனுக் குங்கள்
    துணைமுலை அமுதம் ஊட்டிப்
போற்றுதிர் நாளும் என்ன
    நன்றெனப் புகன்று வந்தார். 159

மறுவறும் ஆரல் ஆகும்
    மாதர் மூவிருவர் தாமும்
நிறைதரு சரவ ணத்தில்
    நிமலனை அடைந்து போற்ற

---

158. வளமார்ந்த சரவணப் பொய்கையில் இதழ் நெருங்கிப் பூத்த தாமரை மலரில் சராசரங்களை யெல்லாம் காத்தருளும் கருணையால் ஒப்பற்ற குமாரக் கடவுள் இளஞ் சிறு குழந்தைபோல இனிது வீற்றிருந்தார்.

159. அப்பொழுது திருமால் முதலிய தேவர்கள் கார்த்திகைப் பெண்களை அழைத்து, "சொல்லற்கரிய பெருமை வாய்ந்த சரவணப் பொய்கையில் சண்முகப் பெருமான் ஒரு குழந்தைபோலத் தோன்றுகின்றார். நீங்கள் அறுவரும் பாலமுதம் ஊட்டி அவரை வளர்ப்பீராக" என்றனர். அதற்கு இசைந்து அவர்களும் சரவணத்தை வந்தடைந்தார்கள்;

160. குமாரக் கடவுளைத் துதித்து நின்றார்கள். தம்மை யடைந்தவர்க்கு வேண்டிய எல்லாம் தருபவர்

உறுநர்கள் தமக்கு வேண்டிற்
றுதவுவோன் ஆதலாலே
அறுமுக ஒருவன் வேறாய்
அறுசிறார் உருவம் கொண்டான். 160

ஓர்உருத் தவழ மெல்ல
ஓர்உருத் தளர்ந்து செல்ல
ஓர்உரு நிற்றல் செல்லா
தொய்யென எழுந்து வீழ
ஓர்உரு இருக்கப் பொய்கை
ஓர்உரு உழக்கிச் சூழ
ஓர்உருத் தாய்கண் வைக
ஒருவனே புரிதல் உற்றான். 161

## நவசக்திகள்

எண்ணிலா நவ மணிகளில்
உமையுரு எனைத்தும்
கண்ணினால் தெரிந்து அருளினால்
வம்மெனக் கழற

---

ஆதலாலே அப்பெருமான் முன்பிருந்த வடிவத்தை விட்டு வெவ்வேறாக ஆறு குழந்தை வடிவம் கொண்டருளினார்.

161. ஓர் உருவம் மெல்லத் தவழ, ஓர் உருவம் தளர்ந்து நடக்க, ஓர் உருவம் எழுந்து நிற்கமாட்டாமல் விழ, ஓர் உருவம் இருப்பிலே இருக்க, ஓர் உருவம் பொய்கையைக் கலக்கிச் சுற்ற, ஓர் உருவம் தாயிடத்திருக்க, இத்தனை திருவிளையாடலையும் குமரன் ஒருவனே செய்ய லுற்றார்.

162. (ஈசன் கண்ணினின்றும் எழுந்த பொறிகளின் வெப்பத்தை பொறுக்கலாற்றாது உமையம்மை விரைந்தோடியபோது அவள் பாதச் சிலம்பினின்றும் நவமணிகள் சிதறின). அவ்வாறு சிந்திய மணிகளில் ஈசன் உமையவள் திருவுருவைக் கண்டு 'வருக' என்று திருவாய் மலர்ந்த

அண்ணல் ஓர்வகை மணிக்கொரு
சக்திகள் ஆக
நண்ணினர் நவ சத்திகள்
அமரர்நற் றவத்தால். 162

பரிபுரம் தனில் மூன்வரும்
மங்கையர் பரைதன்
கருணை கொண்டசொற் கேட்டலும்
கவற்சியை அகன்று
விரைவில் மேலவர் பதம்பணிந்து
ஏத்தியே விடை கொண்டு
ஒருவி மைந்தரை அளித்தனர்
யாவரும் ஒருசார். 163

உதிதரும்அத் திறல்வீரர். அரியணைமேல்
அம்மையுடன் உறைந்த நாதன்
பதமலர்கள் பணிந்தெழலும் அவர்க்கண்டு
பார்ப்பதியைப் பரிவால் நோக்கி
மதியுடையர் திறலுடையர் மானஅருங்
கலத்தினர்நம் மைந்தர் இன்னோர்

வுடனே தேவர் செய்த தவத்தால் நவமணிகளும் நவசக்திகளாயினர்.

163. அந்நவ மாதரும் கருவுற்று, உமையம்மையின் அருளைப்பெற்று, விடைகொண்டு, வீரமைந்தரைஈன்றனர். (மாணிக்கவல்லி வீரவாகுவையும், முத்துவல்லி வீரகேசரியையும், புஷ்பராகவல்லி வீரமகேந்திரனையும், கோமேதகவல்லி வீரமகேச்சுரனையும், வயிடூரியவல்லி வீர புரந்தரனையும், வயிரவல்லி வீர ராக்கதனையும், மரகதவல்லி வீர மார்த்தாண்டனையும், பவளவல்லி வீராந்தகனையும், இந்திர நீலவல்லி வீரதீரனையும் பெற்றெடுத்தார்கள்.)

164. இங்ஙனம் தோன்றிய அருந்திறல் வீரர்கள் மாதொரு பாகனது மலரடி பணிந்து எழுந்தார்கள். அப்போது ஈசன் பார்வதியைப் பரிவுடன் நோக்கி "இவர் மதியுடையார் ; வலியுடையார் ; மானமுடையார் ; இன்னோர்

புதியர்அலர் நந்திதனிக் கணத்தவர்
என்றான்சுருதிப் பொருளாய் நின்றான். 164

## முருகனைக் கயிலாசத்திற்கு எடுத்து வருதல்

பொம்மல் உற்றிடும் நான்முகன்
ஆதியோர் புந்தி
விம்மல் அற்றிட முந்துநம்
விழியிடைத் தோன்றிச்
செம்மலர்ப் பெருஞ் சரவணத்து
இருந்தநின் சேயை
இம்மலைக் கணே உய்க்குதும்
வருகென இசைத்தான். 165

தன்ன தாலயம் நீங்கியே
கயிலையைத் தணந்து
பொன்னின் நீடிய இமையமால்
வரைப்புறத் தேகி
அன்னம் ஆடுறும் சரவணப்
பொய்கையை அடைந்தான்
என்னை ஆளுடை நாயகன்
இறைவியும் தானும். 166

---

நம்மைந்தர்; புதியரல்லர்; நந்தி கணத்தைச் சேர்ந்தவர்" என்று நவின்றார்.

165. இது நிற்க, "துன்பமுற்ற பிரமன் முதலிய தேவர்கள் இன்பமுறும் வண்ணம், நம் கண்ணிலே தோன்றிக் கங்கைப் பொய்கையிலே வளரும் நின் புதல்வனை இம்மலைக்கு அழைத்துவருவோம், வருக" எனப் பணித்தார்.

166. அம்மையும் அதற்கிசைய, இருவரும் திருக்கோயிலினின்றும் புறப்பட்டு, கயிலையைவிட்டு மேரு மலையினும்நெடிய இமயமலைப் பக்கம் போந்து, அன்னங்கள் விளையாடும் சரவணப் பொய்கையை வந்துசேர்ந்தார்கள்.

பிறையு லாம்சடைத் தேவனும்
அவன்தனைப் பிரியாது
உறையும் மாதுமலர் அறுவகை
உருவு கொண் டுற்ற
சிறுவன் நீர்மையை நோக்கியே
திருவருள் செய்து
நிறையும் வான்புனற் பொய்கையம்
கரையிடை நின்றார். 167

முண்ட கச்சர வணம்தனில்
மூவிரு வடிவும்
கொண்டு லாவிவீற் றிருந்திடும்
ஒருபெருங் குமரன்
அண்டர் நாயகன் தன்னுடன்
அகிலம் ஈன்றாளைக்
கண்டு மாமுகம் மலர்ந்தனன்
தனதுளம் களித்தான். 168

சரவ ணம்தனில் தனதுசேய்
ஆறுருத் தனையும்
இருக ரங்களால் அன்புடன்
எடுத்தனள் புல்லித்
திருமுகங்கள் ஓராறுபன்
னிருபுயம் சேர்ந்த

---

167. அங்கு அறுவகை உருவு கொண்டு அமர்ந்த குமரன் தன்மை கண்டு, கருணைகூர்ந்து, பொய்கையின் கரையிலே நின்றார்கள்.

168. தாமரைபூத்த தடாகத்தில் ஆறு வேறுருவம் கொண்டு வீற்றிருந்த அரும பெருங் குமரனும், அண்டர் நாயகனோடு அகிலமீன்ற அன்னையைக் கண்டு முகமலர்ந்து மனமகிழ்ந்தார்.

169. அந்நிலையில் உமையம்மை சரவணப் பொய்கை யில் இறங்கித் தன் மைந்தனது ஆறு உருவங்களையும் தன் திருக்கரத்தால் அன்புடன் அணைத்தெடுத்து, ஆறுமுகங்

உருவம் ஒன்றெனச் செய்தனள்
உலகம்ஈன் றுடையாள். 169

எந்தை சத்திகள் உயிரெலாம்
ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் றாகியே
கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு
வடிவும்ஒன் றாகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன்
கவுரிதன் குமரன். 170

கந்தன் தனை நீர்போற்றிய
கடனால்இவன் உங்கள்
மைந்தன்எனும் பெயராகுக
மகிழ்வால் எவரேனும்
நுந்தம்பகல் இடை இன்னவன்
நோன்தாள் வழிபடுவோர்
தந்தம்குறை முடித்தேபரம்
தனைநல்குவம் என்றான். 171

---

களும் பன்னிரு தோள்களும் உடைய ஒரு திருவுருவமாகச் செய்தருளினாள்.

170. உயிர்கள் எல்லாம் ஒடுங்கும் ஊழிக்காலத்தில் எம்பெருமானுடைய சத்திகள் அனைத்தும் ஒன்றாகச் சேரும் தன்மைபோல், அந்தமற்ற ஆறு உருவமும் ஒன்றாகவே கந்தன் என்று பேர் பெற்றார் குமரன்.

171. (அப்பொய்கையில் தொழுது நின்ற கார்த்திகைப் பெண்களை நோக்கி ஈசன்) "நீங்கள் கந்தனை எடுத்து வளர்த்த முறைமையால் இவன் உங்கள் மைந்தன் என்னும் பெயர் பெற்றுக் கார்த்திகேயன் ஆகுக. உங்களுக்கு உரிய நாளாகிய கார்த்திகையில் கந்தனது திருவடியை வழிபடுவோரது குறை தீர்த்து அவர்க்குப் பரகதியும் தருவோம்" எனப் பகர்ந்தார்.

## முருகன் திருவிளையாடல்

மன்றுதொ றுலாவும மலர்
வாவிதொ றுலாவும்
துன்றுசிறு தென்றல் தவழ்
சோலைதொ றுலாவும்
என்றும்உல வாதலவும்
யாறுதொ றுலாவும்
குன்றுதொ றுலாவும்
உறையும் குமரவேளே. 172

இருமூவகை வதனத்தொடும்
இளையோன்எனத் திரியும்
ஒருமாமுக னொடு சென்றிடும்
உயர்காளையின் உலவும்
பெருமாமறை யவரேஎன
முனிவோர்எனப் பெயரும்
தெரிவார்களை மறவீரரில்
திரிதந்திடும் செவ்வேள். 173

## முருகவேளின் பெருமையை ஈசன் கூறுதல்

ஈங்கனம் நமது கண்ணின்
எய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று
சரவணத் திடுதலாலே

---

172. பொது விடங்களிலும, தாமரைக் குளங்களிலும், மெல்லிய தென்றல் தவழுஞ் சோலைகளிலும், வற்றாத நீருடைய ஆறுகளிலும், குன்றுகளிலும் குமாரவேள் உலாவுவார்.

173. ஆறுமுகங்களோடு குழந்தையாக வருவார்; ஒரு முகத்தோடு உலாவுவார்; வாலிபனாய் வருவார்; வேதியர் போலவும் முனிவர் போலவும் தோன்றுவார். அம்பு தொடுக்கும் வீரரைப்போல எங்கும் திரிவார்.

174. (கந்தன் செய்த திருவிளையாடலைக் கண்டு சிந்தை மகிழ்ந்த உமையம்மையிடம் ஈசன் அவர் சிறப்

காங்கெயன் எனப்பேர் பெற்றான்
காமர்பூஞ் சரவ ணத்தின்
பாங்கரின் வருத லாலே
சரவண பவன் என்றுனன். 174

தாய்என ஆரல் போந்து
தனங்கொள்பால் அருத்த லாலே
ஏயதோர் கார்த்தி கேயன்
என்றொரு தொல்பேர் பெற்றான்
சேயவன் வடிவம் ஆறும்
திரட்டிநீ ஒன்றாய்ச் செய்தாய்
ஆயத னாலே கந்தன்
ஆமெனும் நாமம் பெற்றான். 175

நன்முகம் இருமூன்று உண்டால்
நமக்கு, அவை தாமே கந்தன்
தன்முக மாகி உற்ற
தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம்
மூவிரண்டு எழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத்து ஓராறு
எழுத்தெனா உற்ற அன்றே. 176

---

பினை உணர்த்தலுற்றார்) "மாதே! நமது கண்ணில் தோன்றிய குமரனைக் கங்கை தாங்கிச் சென்று சரவணத்திற் சேர்த்தமையால் காங்கேயன் என்ற பெயரைப் பெற்றான். அழகிய சரவணப் பொய்கையில் குழந்தையாக வளர்ந்தமையால் சரவணபவன் என்று ஆயினான்.

175. கார்த்திகைப் பெண்கள் தாயராக வந்து பாலூட்டிய பான்மையால் கார்த்திகேயன் என்று ஒரு பேர் பெற்றான். அவனுடைய ஆறு உருவங்களையும் நீ ஒன்றாகத் திரட்டிச் சேர்த்தமையால் கந்தன் என்னும் நாமம் பெற்றான்.

176. நமக்கு நன்முகங்கள் ஆறு உண்டு. அவைகளே கந்தனுடைய முகங்களாய் அமைந்தன. பிரணவத்தோடு கூடிய ஐந்தெழுத்துமே உன் மகன் பெயரின் ஆறெழுத்தாகப் பொருந்தின.

ஆதலின் நமது சத்தி
அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல்
பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான்
யாவையும் உணர்ந்தான், சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க்கு அருள வல்லான். 177

மேல்இனி அனைய செவ்வேள்
விரிஞ்சனைச் சுருதிக் கெல்லாம்
மூலம தாகி நின்ற
மொழிப்பொருள் வினவி அன்னான்
மாலுறச் சென்னி தாக்கி
வன்சிறைப் படுத்தித் தானே
ஞாலமன் னுயிரை எல்லாம்
நல்கியே நண்ணும் பன்னாள். 178

தாரகன் தன்னைச் சீயத்
தடம்பெரும் முகத்தி னானைச்

---

177. ஆதலால் ஆறுமுகன் நமது சத்தியே யாம். அவனுக்கும் எமக்கும் வேறுபாடில்லை. நம்மைப்போல் அவனும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளான். குழந்தைபோல் இருப்பினும் யாவையும் உணர்ந்தவன்; தன்னை வழிபடும் அடியார்க்குச் செல்வமும் ஞானமும் சிறப்பும் அருள வல்லவன்.

178. இனிமேல், குமரவேள் 'வேதத்திற்கெல்லாம் மூலமாகவுள்ள பிரணவத்தின் பொருள் யாது' எனப் பிரம தேவனை வினவுவான் அவன் அறியாமல் மயங்குவான். அப்போது குமரன் அவன் தலையிற் குட்டிச் சிறைக் கோட்டத்தில் அடைத்துவிட்டுத் தானே பலகாலம் படைப்புத் தொழில் புரிவான்.

179. அப்பால் தாரகாசுரனையும், சிங்கமுகாசுரனையும், சூரபன்மாவையும், ஏனைய அசுரரையும் அழித்துத்

சூரபன் மாவை ஏனை
அவுணரைத் தொலைவு செய்தே
ஆரணன் மகவான் ஏனை
அமரர்கள் இடுக்கண் நீங்கிப்
பேரருள் புரிவன் நின்சேய்
பின்னர்நீ காண்டி என்றான். 179

## முருகன் விளையாட்டைக் கண்டு வானவர் வருந்துதல்

குலகிரி அனைத்தும் ஓர்பால்
கூட்டிடும் அவற்றைப் பின்னர்
தலைதடு மாற்ற மாகத்
தரையிடை நிறுவும், எல்லா
அலைகடல் தனையும் ஒன்றா
ஆக்குறும், ஆழி வெற்பைப்
பிலன்உற அழுத்தும் கங்கைப்
பெருநதி அடைக்கும் மன்னோ. 180

இத்திறம் உலகம் தன்னில்
இம்பரோடு உம்பர் அஞ்சிச்
சித்தம்மெய் தளர்தல் அன்றிச்
சிதைவுறு வகைமை தேர்ந்து

---

தொலைத்து, தேவர்கள் துயரம் தீர்த்து அன்னார்க்குப் பேரருள் புரிவான்" என்று பேசினார் பெருமான்.

180. (மைந்தனது சிறப்பெல்லாம் கேட்டு உமையவள் மன மகிழ்ந்திருந்தாள். குமரவேள் அரிய திருவிளையாடல் புரியலுற்றார்.) எட்டுப் பெருமலைகளையும் ஓரிடத்தில் ஒன்றாகக் கூட்டுவார். பின்னர் அவற்றை முறைத் தலைகீழாக நிறுத்துவார். நெடுங் கடல்களை ஒன்றாகச் சேர்ப்பார். பூவுலகத்தைச் சூழ்ந்த சக்கரவாள மலையைப் பாதலத்திற் செல்ல அழுத்துவார். அகன்ற கங்கையாற்றை அடைப்பார்.

181. இவ்வாறு மண்ணுலகில் வாழும் உயிர்களும், விண்ணுலகில் உள்ள தேவரும் அச்சம் கொண்டு மனமும்

வித்தக எண்ணில் ஆடல்
வியப்பொடு புரிந்தான், ஆவி
முத்தர்தம் விழியின் அன்றி
முன்னுரு நிமல மூர்த்தி. 181

தோன்றிய குமரன் தன்னைச்
சுரபதி சுரராய் உள்ளோர்
ஆன்றதோர் திசைகாப் பாளர்
அனைவரும் தெரிகுற்று அன்னோ
வான்தரை திரிபு செய்தோன்
மற்றிவன் ஆகும் என்னாக்
கான்திரி அரியை நேரும்
விலங்கெனக் கலங்கிச் சொல்வார். 182

நொய்தாம் குழவி யெனக்கொள்கிலம்
நோன்மை நாடின்
வெய்தாம் அவுணக் குழுவோரினும்
வெய்யன் யாரும்
எய்தாத மாயம் உளனால்இவன்
தன்னை வெம்போர்
செய்தாடல் கொள்வம் இவண்என்று
தெரிந்து சூழ்ந்தார். 183

---

மெய்யும் நடுங்குதலே யன்றி அழிவுறுத வகையில் அள வற்ற திருவிளையாடல்கள் புரிந்தார் திருக்குமரன்.

182. இங்ஙனம் எல்லாவற்றையும் நிலைகுலையச் செய்த பாலனை இந்திரன் முதலிய வானவரும் திக்குப் பாலகரும் கண்டு, "அந்தோ! மண்ணையும் விண்ணையும் மாறு படுத்தியவன் இவனே' என்று சிங்கத்தை எதிர்ப் பட்ட விலங்குகள்போல் மனங்கலங்கி,

183. "இவனைச் சிறு பாலன் எனக் கருதலாகாது. இவன் வலிமை கண்டால் கொடிய அசுரக் குலங்களிலும் கொடியன். மாய வித்தையில் யாரினும் வல்லவன். இவனை வெம்போரில் வெற்றி கொள்வோம்" என்று எண்ணித் துணிந்தார்கள்.

### முருகனை எதிர்த்து வானவர் மடிதல்

தந்தங்கள் பெற்று வருகின்ற
    தனிக் களிற்றின்
கந்தம் தனிற்போந்து அடல் வச்சிரம்,
    காமர் ஒள்வாள்
குந்தம் சிலைகொண்டு இகல்வெஞ்சமர்க்
    கோலம் எய்தி
மைந்தன் தனைவா னவரோடும்
    வளைந்து கொண்டான். 184

ஒல்லா தவரிற் பொருதேசில
    உம்பர் வீழ
நில்லாது உடைந்து சிலதேவர்கள்
    நீங்க, நேரில்
வில்லாளி யாகித் தனிநின்ற
    விசாகன் மேனாள்
எல்லா ரையும்அட்டு உலவும்தனி
    ஈசன் ஒத்தான். 185

### வானவரை எழுப்புதல்

ஆத பன்மதி அண்டர் தமக்கிறை
மாதி ரத்தவர் மால்கரி தன்னுடன்

---

184. வானவர் தலைவனாகிய இந்திரன், வலிய தந்தங்கள் பெற்று வந்த வெள்ளையானையின் மீது ஏறி, வச்சிரம், வாள், குந்தம், சிலை இவற்றைக் கையிலே கொண்டு, போர்க் கோலம் பூண்டு, தேவசேனையொடு சென்று கந்தப்பெருமானை வளைந்துகொண்டான்.

185. போர்க்களத்தில் விழுந்தார் சில தேவர்; ஆற்றாது தோற்று ஓடினார் சில தேவர்; அப்போது அமர்க்களத்தில் வில்லேந்தி நின்ற முருகன், ஊழிக் காலத்தில் எல்லோரையும் அழித்து நின்ற ஈசனை ஒத்தார்.

186. சூரியனும் சந்திரனும், இந்திரனும் எட்டுத்திக்குப் பாலகரும், வெள்ளையானையும் மடிந்து கிடந்த போர்க்

சாதல் கொண்ட சமர்க்களம் தன்னிடை
போதல் மேயினன் பொன்எனும் பேரினன். 186

முழுது ணர்ந்திடும் மொய்சுடர்ப் பொன்னவன்
எழுதொ ணாத எழில்நலம் தாங்கிஓர்
குழவி தன்உருக் கொண்ட குமரனைத்
தொழுது நின்று துதித்துஇது சொல்லுவான்.

ஒறுத்திடும் அவுணர்கள் ஒழிய வேரொடும்
அறுத்தருள் உணர்விலா அளியர் உன்னடி
மறத்தலில் அன்பினர் மற்றின் னோர்பிழை
பொறுத்தருள் கருணையால் புணரி போன்றுளாய்

பொன்னவன் இன்னன புகன்று வேண்டிட
முன்னவர் முன்னவன் முறுவல் செய்து,வான்
மன்னவன் ஆதியர் மால் களிற்றொடும்
அந்நிலை எழும்வகை அருள்செய் தானரோ. 189

## வானவர் முருகனை வழிபடல்

கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம
கங்கை உமைதன்

---

களத்திற்குச் சென்றான் விண்ணோர் குருவாகிய வியாழன் என்னும் பிரகஸ்பதி.

187. எல்லா முணர்ந்த வியாழன், ஓவியத்தில் எழுத முடியாத பேரழகு வாய்ந்த பிள்ளைப்பெருமானைத் தொழுது துதித்து நின்று,

188. "கருணையங் கடலே! உலகத்தை வருத்தும் அசுரரை நீ ஒறுத்திடல்வேண்டும். இவ் ஏழை வானவர் நின் திருவடியை மறவாத அன்பர்கள். இவர் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தான்.'

189. அப்பொழுது குமரவேள் புன்னகை கொண்டு, இந்திரன் முதலிய தேவர்களும் யானையும் உயிர் பெற்று எழும்படி திருவருள் புரிந்தார்.

190 எழுந்த வானவர் முருகவேள் முன்னின்று, "கந்தா போற்றி! ஐந்துமுகப் பெருமான் அளித்த

மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர்
மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம
தற் பரமதாம்
எந்தைநம என்றும்இளை யோய்நம குமாரநம
என்று தொழுதார். 190

எண்திசையும் ஈரெழு திறத்துலகும்
எண்கிரியும் ஏழு கடலும்
தெண்திரையும் நேமிவரை யும்பிறவும்
வேறு திரி பாகி உளசீர்
அண்டநிரை யானவும் அனைத்துயிரும்
எப்பொருளும் ஆகி அயனும்
விண்டும் அரனும் செறிய ஓர்உருவு
கொண்டனன் விறற் குமரனே. 191

அடிமுதல் முடியின் காறும்
அறுமுக உருவம் எல்லாம்
கடிதவன் அருளால் நோக்கிக்
கணிப்பிலா அண்டம் முற்றும்

---

முருகேசா போற்றி! பன்னிரு புயத்தாய் போற்றி! கடம்ப மலர் மாலையணிந்த ஐயனே போற்றி! ஆறுமுக ஆதியே போற்றி! சோதியே போற்றி! தற்பரனாய் நின்ற தந்தையே போற்றி! என்றும் இளையாய் போற்றி! குமரவேளே போற்றி!" என்று தொழுதார்கள்.

191. அந்நிலையில் எட்டுத் திசைகளும் பதினான்கு உலகமும், எட்டுமலையும், சக்கரவாளகிரியும், ஏழுகடலும், பெரும்புறக் கடலும், அண்ட வரிசையும், அனைத்துயிரும் பொருள்களும் ஆகி, அயன் அரி அரன் என்னும் திரிமூர்த்திகளும் தன்னுளே அமைய ஒரு பேருருவம் (விசுவரூபம்) கொண்டார் குமார மூர்த்தி.

192. இந்திரன் முதலிய வானவர்கள் அறுமுகப்பெருமான் திருவுருவத்தை அவர் அருளால் அடிமுதல முடிவரை நெடிது நோக்கி, அளவிறந்த அண்டங்களும், அழி

முடிவறும் உயிர்கள் யாவும்
மூவரும் தேவர் யாரும்
வடிவினில் இருப்பக் கண்டு
வணங்கியே வழுத்திச் சொல்வார். 192

அறிகிலம் இந்நாள் காறும்
அகிலமும் நீயே ஆகி
உறைதரு தன்மை நீவந்து
உணர்த்தலின் உணர்ந்தாம் அன்றே
பிறஒரு பொருளும் காணேம்
பெரும,நின் வடிவம் அன்றிச்
சிறியம்யாம் உனது தோற்றம்
தெரிந்திட வல்லமோ தான். 193

நாரணன் மலரோன் பன்னாள்
நாடவும் தெரிவின் றாகிப்
பேரழல் உருவாய் நின்ற
பிரான்திரு வடிவே போல்உன்
சீர்உரு உற்ற தம்மா
தெளிகிலர் அவரும் எந்தை
ஆர்அருள் எய்தின் நம்போல்
அடிமுடி தெரிந்தி டாரோ 194

---

வற்ற ஆன்ம கோடிகளும், திரிமூர்த்திகளும் தேவர்களும் அங்கிருப்பக்கண்டு வணங்கித் துதித்தார்கள்.

193. "ஐயனே: எல்லா வுலகமும் நீயே யாகி நின்ற தன்மையை இந்நாள்வரை அறிந்திலோம். இன்று நீ வந்து உணர்த்தலால் உணர்ந்தோம. எம்பெருமானே! உன் திருவுருவே யன்றி வேறு ஒருபொருளும் காணோம். சிறியவராகிய நாங்கள் உனது தோற்றத்தை அறிய வல்லமோ?

194. திருமாலும பிரமனும் நெடுங்காலம் அடிமுடி தேடியும் அறியப்படாமல் அனல் உருவாக நின்ற சிவ பெருமான் வடிவேபோல் நின் திருவுருவம் அமைந்தது. எம்பெருமானது திருவருளை அவர்கள் எம்மைப்போல் பெற்றிருந்தால அடியும் முடியும் கண்டிருப்பார் அன்றோ?

ஆகையால் எம்பி ரான்நீ
அருவுரு வாகி நின்ற
ஏக நாயகனே ஆகும்
எமதுமா தவத்தால் எங்கள்
சோக மானவற்றை நீக்கிச்
சூர்முதல் தடிந்தே எம்மை
நாகமேல் இருத்து மாற்றால்
நண்ணினை குமரனே போல். 195

என்று இவை புகன்று வேண்ட
எம்பிரான் அருளால் வான்போய்
நின்றபேர் உருவம் தன்னை
நீத்துஅறு முகத்தோன் ஆகித்
தொன்றுள வடிவத் தோடு
தோன்றலும் தொழுது போற்றிக்
குன்றிரும் சிறைகள் ஈர்ந்த
கொற்றவன் கூறல் உற்றான். 196

தொன்னிலை தவாது வைகும்
சூரனே முதலா உள்ள
ஒன்னலர் உயிரை மாற்றி
உம்பரும் யானும் பாங்கர்

---

195. ஆதலால் எம் ஐயனே; நீ அருவுருவாகி நின்ற ஆதி நாயகனே ஆகும். அடியேம் செய்த அருந்தவத்தால் எம் துன்பத்தைத் துடைத்து, சூரனாதிய அசுரரைக் கொன்று வானுலகத்தில் எம்மை வாழ வைத்தற்காகப் பாலன் வடிவத்தில் வந்தாய்" என்று வணங்கினார்கள்.

196. அப்போது எம்பெருமான் கருணை கூர்ந்து வான் அளாவி நின்ற பேருருவத்தை நீத்து ஆறுமுகங்களோடு முன்னைய வடிவத்திலே தோன்றினார். வானவர் கோமான் வணங்கித் துதித்து,

197. "ஐயனே! முன்னே அமைந்த நிலைமை நீங்காதிருக்கும் சூரன் முதலிய பகைவரையெல்லாம் அழித்து, வானவரும யானும் பக்கத்தில் என்றும் நின்று பணிசெய்ய,

மன்னிநின்று ஏவல் செய்ய
வானுயர் துறக்கம் நண்ணி
என்னரசு இயற்றி எந்தாய்
இருத்திஎன் குறைஈது என்றான். 197

இகமொடு பரமும் வீடும்
ஏத்தினர்க்கு உலப்பு றாமல்
அகன்அமர் அருளால் நல்கும்
அறுமுகத் தவற்குத் தன்சீர்
மகபதி அளிப்பான் சொற்ற
வாசகம், சுடர்ஒன்று அங்கிப்
பகவனுக்கு ஒருவன் நல்கப்
பாரவிய போலும் அன்றே. 198

வானவர் கோனை நோக்கி
வறிதுற நகைத்துச் செவ்வேள்
நீநமக் களித்த தொல்சீர்
நினக்குநாம் அளித்தும் நீவிர்
சேனை களாக நாமே
சேனையந் தலைவ னாகித்
தானவர் கிளையை எல்லாம்
வீட்டுதும் தளரேல் என்றான். 199

---

வானத்தில் உயர்ந்த சுவர்க்க லோகத்தை அடைந்து என் அரசியலை நடத்தி அருளவேண்டும்; இதுவே என் வேண்டுகோள்" என்றான்.

198. போற்றி வழிபடும் அடியார்க்கு இம்மைச் செல்வமும் மறுமைச் செல்வமும், வீட்டின்பமும் கருணை கூர்ந்து அளிக்கும் ஆறுமுகப் பெருமானுக்கு இந்திரன் தன் செல்வத்தைக் கொடுப்பதாகக் கூறிய வாசகம், அங்கித் தேவனுக்கு ஒரு தீப்பொறி கொடுப்பேன் என்று ஒருவன் சொல்லும் சொல்லை ஒக்குமன்றோ ?

199. அந்நிலையில் இந்திரனை நோக்கிக் குமாரவேள் இளநகை கொண்டு, " நீ நமக்குத் தந்த செல்வத்தை நாம் உனக்குத் தந்தோம். நீங்கள் அனைவரும் சேனைகளாக வருக. நாமே சேனாபதியாகி, அசுரர் குலத்தை யெல்லாம் நாசம் செய்வோம். வருந்தவேண்டாம்" என்று அருளினார்.

புரந்த ரன்முதல் புங்கவர் தம்உளத்து
அரந்தை நீங்க அருச்சனை செய்துபின்
பரிந்து தாழ்ந்து பரவலும் ஆயிடைக்
கரந்து வள்ளல் கயிலையிற் போயினுன். 200

### வேள்வியில் எழுந்த ஆட்டுக்கடாவை முருகன் அடக்குவித்தல்

மாமுனி வரும்சுரரும்
மாநில வரைப்பில்
தோமறு தவத்தின் உயர்
தொல்லை மறையோரும்
ஏமமொடு சூழ்தர
இயற்றிய மகத்தில்
தீமிசை எழுந்ததொரு
செக்கர்புரை செச்சை. 201

அங்கிதனில் வந்ததகர்
ஆற்றுமகம் தன்னில்
நங்கள் இனமே பலவும்
நாளும் அடுகின்றுர்

---

200. அப்போது இந்திரனும் வானவரும் தம் மனத் துயர் நீங்கும் வண்ணம் ஐயனை அருச்சனை செய்து அன்புடன் வணங்கித் தொழுதனர். கருணை வள்ளலாகிய குமாரவேள் மறைந்து கயிலாச மலைக்குச் சென்றுர்.

201. நாரத முனிவர் சிவபெருமானை நோக்கி ஒரு வேள்வி செய்யத் தொடங்கினுர். சிறந்த முனிவர்களும் தேவர்களும், தவத்தால் உயர்ந்த வேதியர்களும் சூழ்ந்திருந்து செய்த அவ்வேள்வித் தீயில் செவ்வானம் போன்ற ஆட்டுக் கடா ஒன்று தோன்றிற்று.

202. "எங்கும் யாகம் செய்பவர்கள் எங்கள் இனமாகிய ஆடுகள் பலவற்றைக் கொல்கின்றுர்கள் ; ஆதலால் யான் இங்கு வேள்வி செய்பவர்களைக் கொல்வேன்" எனத்

இங்கிவரை யான் அடுவன்
என்றிசைவு கொண்டே
வெங்கனலை ஏந்து பரி
மீதெழுதல் போலும். 202

கல்லென மணித்தொகை
களத்தின் இடை தூங்கச்
சில்லரிபெய் கிண்கிணி
சிலம்படி புலம்ப
வல்லைவரு கின்றதகர்
கண்டுமகத் துள்ளோர்
எல்லைவரும் அச்சமொடு
இரிந்தனர்கள் அன்றே. 203

இனையவகை யால்தகர்
யாண்டும் உலவுற்றே
சினமொடுஉயிர் கட்கிறுதி
செய்துபெயர் காலை
முனிவர்களும் நாரதனும்
மொய்ம்புமிகு வானோர்
அனைவர்களும் ஓடினர்
அருங்கயிலை புக்கார். 204

---

துணிந்து அங்கித் தேவனது வாகனமாகிய ஆட்டுக்கடா எழுந்து வந்தாற்போல வந்தது அத்தகர்.

203. கழுத்தில் அணிந்த மணிகள் கலீர், கலீர் என்று ஒலிக்க, கிண் கிணியும் சிலம்பும் கால்களில் புலம்ப விரைந்து வந்த தகரைக் கண்டு யாகசாலையில் இருந்தவர்கள் அச்சமுற்றுச் சிதறி ஓடினர்.

204. இங்ஙனம் அத்தகர் எங்கும் திரிந்து சீற்றத்தோடு உயிர்களைச் சிதைத்து வருகையில் முனிவர்களும் நாரதரும் வானவரும் ஓடிக் கயிலாச மலையை அடைந்தார்கள்.

வந்துபுகழ் வானவரும்
மாமுனிவர் தாமும்
தந்திமுக வற்கிளவல்
தன்னடி வணங்க
கந்தன்அவர் கொண்டதுயர்
கண்டுமிக நீவிர்
நொந்தனிர் புகுந்தது
நுவன்றிடுதிர் என்றான். 205

சீற்றமொடு உயிர்க்கிறுதி
செய்துலவும் மேடத்து
ஆற்றலை அடக்கிஎமது
அச்சமும் அகற்றி
ஏற்றகுறை வேள்வியையும்
ஈறுபுரி வித்தே
போற்றுதி எனத்தொழுது
போற்றிசெயும் வேலை. 206

எஞ்சும்அவர் தம்மை
இளையோன் பரிவில் நோக்கி
அஞ்சல் விடுமின்கள் என
அங்கையது அமைத்தே

---

205. அங்கு முருகவேளைக் கண்டு அடி பணிந்தார்கள். அன்னார்கொண்ட துயர் கண்ட பெருமான் 'நீங்கள் மிக வருந்துகின்றீர்கள். என்ன நேர்ந்தது' என்று வினவினார்.

206. "ஐயனே! சீற்றமுற்று எழுந்து ஒரு தகர் அழிவு செய்து திரிகின்றது. அதன் ஆற்றலை அடக்கி, எமது அச்சம் தீர்த்து, யாகக் குறையையும் நிறைவேற்றி எங்களைப் பாதுகாத்தல் வேண்டும்" என அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

207. அவர்களைக் குமாரவேள் அருளோடு நோக்கி, 'அஞ்ச வேண்டாம்' என்று அபயம் அளித்தார். தம்

தஞ்சமென்னவே பரவு
தன்பரி சனத்துள்
மஞ்சுறுபெறு மேனிவிறல்
வாகுவொடு சொல்வான். 207

மண்டுகனல் வந்திவர் மகந்தனை அழித்தே
அண்டமொடு பாருலவி ஆருயிர்கள் தம்மை
உண்டுதிரி செச்சைதனை ஒல்லைகுறு குற்றே
கொண்டணைதி என்றுமை குமாரனுரை
[செய்தான். 208

ஆடலந் தொழில்மேற் கொண்டே
அனைவரும் இரியச் செல்லும்
மேடம் அஞ்சுறவே ஆர்த்து
விரைந்து போய் வீரவாகு
கோடவை பற்றி ஈர்த்துக்
கொண்டுராய்க் கயிலை நண்ணி
ஏடுறு நீபத் தண்டார்
இளையவன் முன்னர் உய்த்தான். 209

நவையில்சீர் முனிவர் தேவர்
நயப்ப நாரதன் என்றுள்ளோன்

---

மையே தஞ்சமாகக் கொண்டு வணங்கும் பரிசனங்களுள் வீரவாகுவை நோக்கி,

208. "நெருப்பிலே பிறந்து இம்முனிவர் செய்யும் வேள்வியை அழித்து விண்ணிலும் மண்ணிலும் உள்ள உயிர்களைக் கொன்று திரிகின்றதாம் ஒரு தகர். அதனை விரைவிற் சென்று கொண்டுவா" என்று பணித்தார்.

209. அப்பணி தலைமேற்கொண்ட வீரவாகு, எல்லோரும் நடுங்கக் கொல்லும் தொழிலைக் கொண்ட தகர் அஞ்சும வண்ணம் ஆரவாரித்து விரைந்துபோந்து, அதன் கொம்புகளைப் பற்றி இழுத்துக்கொண்டு, கயிலாச மலையை அடைந்து முருகவேள் முன்னே விடுத்தான்.

210. குற்றமற்ற முனிவரும் தேவரும் மனமகிழ்ந்தார்கள். நாரத முனிவரும் மீண்டும் பூவுலகிற் போந்து

புவிதனில் வந்து முற்றப்
புரிந்தனன் முன்னர் வேள்வி
அவர்புரி தவத்தின் நீரால்
அன்றுதொட்டு அமல மூர்த்தி
உவகையால் அனைய மேடம்
ஊர்ந்தனன் ஊர்தி யாக. 210

## செருக்குற்ற பிரமனை முருகன் சிறை செய்தல்

மேடமூர்த்தி யாகஉய்த்து
விண்ணும்மண்ணும் முருகவேள்
ஆடல்செய் துலாவிவெள்ளி
அசலமீதில் அமர்தரும்
நீடுநாளில ஒருபகற்கண்
நெறிகொள்வேதன் முதலினோர்
நாடிஈசன் அடிவணங்க
அவ்வரைக்கண் நண்ணினார். 211

அங்கண்வைகும் முருகன்நம்பன்
அடிவணங்கி வந்திடும்
புங்கவர்க்குள் ஆதியாய
போதினை நோக்குறு
இங்குநம்முன் வருதியால்
எனவிளிப்ப ஏகியே

---

வேள்வியை நிறைவேற்றினார். அவர் ஆற்றிய தவத்தால் அன்று முதல முருகவேள் அம்மேடத்தை வாகனமாகக் கொண்டார்.

211. இங்ஙனம் மேட மூர்த்தியாகிய முருகவேள் திருக் கயிலாச மலையில் விளையாடிக் கொண்டிருக்கையில் ஒருநாள் பிரமன் முதலாயினோர் சிவபெருமான் திருவடிகளைத் தரிசிக்க ஆங்குப் போந்தார்கள்.

212. சிவபெருமான் சேவடி பணிந்து மீண்ட வானவர் முதல்வனாகிய பிரமதேவனை முருகவேள் நோக்கி, ‘இங்கு எம் முன்னே வருக’ என்றழைத்தார். பிரமனும்

பங்கயாச னத்திறேன்
பணிந்திடாது தொழுதலும். 212

ஆதிதேவன் அருளும்மைந்தன்
அவன்உளத்தை நோக்கியே
போதனே இருக்கெனப்
புகன்றுஇருத்தி வைகலும்
ஏதுநீ புரிந்திடும்
இயற்கையென்ன நான்முகன்
நாதன்ஆணை யால்அனைத்தும்
நான்படைப்பன் என்றனன். 213

முருக வேள்அது கேட்டலும்
முறுவல்செய் தருளி
தரணி வானுயிர் முழுவதும்
தருதியே என்னில்
சுருதி யாவையும் போகுமோ
மொழிகெனத் தொல்சீர்ப்
பிரமன் என்பவன் இத்திறம்
பேசுதல் உற்றான். 214

---

முன்னே சென்று முருகன் திருவடிகளில் விழுந்து வணங்காமல் அஞ்சலி செய்து நின்றான்.

213. அப்போது கந்தவேள் அவன் உள்ளத்தில் அமைந்த கர்வத்தை உணர்ந்து 'போதனே! அமர்க' என்று கூறி இருக்கச் செய்து 'நாள்தோறும் நீ என்ன தொழில் புரிகின்றாய்' என்று வினவினார். 'ஈசன் ஆணையால் எல்லாவற்றையும் படைத்தல் என் தொழில்' என்று மறுமொழி கூறினான் பிரமன்.

214. அது கேட்ட முருகவேள் குறுநகை செய்து, "மண்ணிலும் விண்ணிலும் உள்ள உயிர்களை யெல்லாம் படைத்தல் உன் தொழிலாயின் வேதம் முழுவதும் உனக்கு வருமோ? சொல்லுக" என்றார். அப்போது பிரமன்,

தாம ரைத்தலை இருந்தவன்
குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை எடுத்தனன்
டகர்தலும் வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேள்
நிற்றி,முன் கழறும்
ஓம் எனப்படும் மொழிப்பொருள்
இயம்புகென் றுரைத்தான். 215

முகத்தில் ஒன்றதா அவ்வெழுத்
துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத் தினுக்குஉரை
பொருள்என நவில
மிகைத்த கண்களை விழித்தனன்
வெள்கினன் விக்கித்
திகைத் திருந்தனன் கண்டிலன்
அப்பொருட் டிறனே. 216

தெருள தாகிய குடிலையைச்
செப்புதல் அன்றிப்
பொருள் அறிந்திலன் என்செய்வான்
கண்ணுதற் புனிதன்

---

215. பிரணவத்தை முன்னே சொல்லி வேதத்தின் அடியெடுத்து ஓதத் தலைப்படலும், எல்லையற்ற அழகு பெற்ற முருகவேள் 'நிலலு நில்லு! நீ முதலிற் சொல்லிய 'ஓம்' என்னும் சொல்லின் பொருள் கூறுக" எனப் பணித்தார்.

216. பிரணவத்தைத் தம் திருமுகங்களில் ஒன்றாக உடைய முருகன் இவ்வாறு கூற, அதன் பொருள் அறியாத பிரமன் எட்டுக் கண்ணையும் வெறித்து விழித் தான். வெட்க முற்றான்; விக்கினன், திகைத்தான்; இருந்தான்.

217. ஞான வடிவாகிய பிரணவத்தைப் பிரமன் ஓதினவனே யன்றிப் பொருள் உணர்ந்தவன் அல்லன்.

அருளினால் அது முன்னரே
பெற்றிலன் அதனால
மருளு கின்றனன் யார்அதன்
பொருளினை வகுப்பார். 217

தூமறைக் கெலாம் ஆதியும்
அந்தமும் சொல்லும்
ஓம் எனப்படும் ஓர்எழுத்து
உண்மையை உணரான்
மாமலர்ப் பெருங் கடவுளும்
மயங்கினன் என்றால்
நாம் இனிச்சில அறிந்தனம்
என்பது நகையே. 218

எட்டொ ணாதஅக் குடிலையின்
பயன்இனைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலும்
இதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதுஇத் தன்மையதோ
எனாச் செவ்வேள்
குட்டினான் அயன் நான்குமா
முடிகளும் குலுங்க. 219

---

ஈசன் அருளால் அதனை முன்னமே அறிந்தானில்லை. என் செய்வான்; மயங்கினான்; அதன் பொருளை யாவரே சொல்லவல்லார்?

218. மாசற்ற மறைகளுக்கெல்லாம் முதலிலும் முடிவிலும் ஓதப்படுவதாகிய ஓம் என்னும் ஓர் எழுத்தின் உண்மையுணராது, மும்மூர்த்திகளில் ஒருவனாகிய பிரமதேவன் மயங்கினான் என்றால, நாம் சிலவற்றை அறிந்துள்ளோம் என்பது நகையாடற்குரிய தன்றோ?

219. கலை ஞானத்தால் அறிய முடியாத பிரணவத்தின் பொருளைக் கூறமாட்டாது மயங்கிய பிரமனை நோக்கி, "இதன் பொருள் உணர்ந்திலையே! இப்படித்தான் நீ படைப்புத்தொழில் செய்வதோ?" என்று, நான்கு தலைகளும் குலுங்க அவனைக் குட்டினார் குமாரவேள்.

அல்லி மாமலர்ப் பண்ணவன்
 தனை அரும் சிறையில்
வல்லி பூட்டுவித்து, யாவையும்
 புரிதர வல்லோன்
எல்லை தீர்தரு கந்தமால்
 வரைதனில் ஏகிப்
பல்லுயிர்த் தொகை படைப்பது
 நினைந்தனன் பரிவால். 220

உயிரி னுக்கு உயி ராகியே
 பரஞ்சுடர் ஒளியாய்
வியன் மறைத் தொகைக்கு ஈறதாய்
 விதிமுதல் உரைக்கும்
செயலினுக் கெலாம் ஆதியாய்
 வைகிய செவ்வேள்
அயன்எனப் படைக் கின்றதும்
 அற்புதம் ஆமோ. 221

## திருமால் முதலியோர் ஈசனிடம் முறையிடல்

இன்ன தன்மையில் அமரரும்
 முனிவரும் எய்த
அன்னர் தம்மொடும் செங்கண்மால்
 கயிலையை அடைந்து

---

220. மேலும் அவன் மெய்யில் விலங்கு பூட்டிச் சிறைக் கோட்டத்தில் அடைப்பித்தார். கந்தமாதன கிரியை அடைந்து தாமே எல்லா வுயிர்களையும் படைக்கத் திருவுளம் கொண்டார் எல்லாம்வல்ல முருகப் பெருமான்.

221. மன்னுயிர்க்கு உயிராய், பரஞ்சுடர் ஒளியாய், வேதத்தின் எல்லையாய், படைத்தல் முதலிய ஐந்தொழி லுக்கும் மூலமாய் அமைந்த அறுமுகச் செவ்வேள் பிரம தேவனாக அமர்ந்து படைத்தலும் ஓர் அற்புதமோ?

222. (இவ்வாறு நெடுங்காலம் கழிந்தது.) பிரம தேவனைச் சிறையினின்றும் விடுவிக்கக் கருதிய திருமால், தேவர்களோடும் முனிவர்களோடும் திருக்கயிலாச மலையை

முன்னர் வைகிய நந்திகண்
முறையின்உய்த் திடப் போய்
தன்னையே தனக் கொப்பவன்
பொற்கழல் தாழ்ந்தான். 222

இறைவ, நின்மகன் ஈண்டுறு போதனை
மறை முதற்பத வான்பொருள் கேட்டலும்
அறிகிலான் உற அன்னவன் தன்னைமுன்
சிறை புரிந்தனன் சிட்டியும் செய்கின்றான். 223

கந்த வேள்எனக் கஞ்சனும் ஐய,நின்
மைந்தனும் அவன் வல்வினை ஊழினால்
அந்தமில் பகல் ஆழ்சிறைப் பட்டுளம்
நொந்து வாடினன நோவுழந் தான்அரோ. 224

## ஈசன் பிரமனை விடுவித்தல்

சாற்றரும் திறல் சண்முக எம்பிரான்
வீற்றிருந்த வியன்நகர் முன்னுறா
ஏற்றின் நின்றும் இழிந்து விண்ணோர்எலாம்
போற்ற முக்கண் புனிதன்உட் போயினான். 225

---

அடைந்து, நந்தி தேவரால் முறைப்படி உள்ளே அனுப்பப் பெற்று, தன் நிகரில்லாத் தலைவனது திருவடிகளிலே விழுந்து எழுந்து;

223. "ஆண்டவனே! நின் மகன் இங்கு வந்த பிரம தேவனைப் பிரணவத்தின் பொருள் கேட்டான். அதனை அறியாமையால் அவனைச் சிறையில் இட்டான். சிருஷ்டித் தொழிலும் தானே செய்கின்றான்.

224. ஐயனே! கந்தவேள் போலவே பிரமனும் உமது பிள்ளையே! அவன் தீவினையால் அளவிறந்த காலம் அருஞ் சிறையில் அகப்பட்டு மனம் நொந்து வாடி வருந்துகின்றான்" என்று விண்ணப்பம் செய்தான்.

225. அது கேட்ட சிவபெருமான் மனமிரங்கி, எழுந்தருளி அறுமுகப் பெருமான் வீற்றிருந்த கோயில முன்னே இடப வாகனத்தினின்றும் இறங்கி வானவர் போற்ற உள்ளே சென்றார்.

அந்தி போலும் அவிர்சடைப் பண்ணவன்
கந்தன் முன்னர்க் கருணையொ டேகலும்
எந்தை வந்தனன் என்றெழுந்து ஆங்கவன்
வந்து நேர்கொண்டு அடிகள் வணங்கியே. 226

பெருத்த தன்மணிப் பீடிகை மீமிசை
இருத்தி நாதனை ஏழுல கீன்றிடும்
ஒருத்தி மைந்தன் உயிர்க்குயி ராகிய
கருத்த, நீவந்த காரியம் யாதென்றான். 227

மட்டு லாவும் மலர்அயனைச் சிறை
இட்டு வைத்தனை யாம்அது நீக்குவான்
சுட்டி வந்தனமால், சுரர் தம்முடன்
விட்டிடு ஐயஎன்று எந்தை விளம்பினான். 228

நாட்டம் மூன்றுடை நாயகன் இவ்வகை
ஈட்டும் அன்பொடு இசைத்திடும் இன்சொலை
கேட்ட காலையில் கேழ்கிளர் சென்னிமேல்
சூட்டும் மௌலி துளக்கினன் சொல்லுவான்.

---

226. கருணையோடு வந்த பெருமானைக் கண்ட முருக வேள் 'என் தந்தை வந்தார்' என்று மனமகிழ்ந்து எழுந்து எதிர்கொண்டு அவர் திருவடிகளை வணங்கி,

227. அழைத்துச் சென்று அழகிய அரியாசனத்தில் எழுந்தருளச் செய்து 'உயிர்க்குயிராகிய கர்த்தனே! இங்குப் போந்த காரியம் என்ன' என்று வினவினார்.

228. அப்போது சிவபெருமான் "ஐய! மெல்லிய மலர்க் கோயிலில் வசிக்கும் பிரமனைச் சிறையில் அடைத்து வைத்தாய்! அச்சிறையை நீக்கக் கருதித் திருமால் முதலிய தேவருடன் இங்கு வந்தோம். அவனை விட்டு விடு" என்று கூறினார்.

229. இங்ஙனம ஈசன் அன்புடன் பேசிய இனிய மொழிகளைக் கேட்ட முருகவேள், தலையில் அமைந்த அழகிய திருமுடியை அசைத்து,

உறுதி யாகிய ஓர்எழுத் தின்பயன்
அறிகி லாதவன் ஆவிகள் வைகலும்
பெறுவன் என்பது பேதைமை ஆங்கவன்
மறைகள் வல்லதும் மற்றது போலுமால். 230

ஆவி முற்றும் அகிலமும் நல்கியே
மேவு கின்ற வியன்செயல் கோடலால்
தாவில் கஞ்சத் தவிசுறை நான்முகன்
ஏவர் தம்மையும் எண்ணலன் யாவதும். 231

நின்னை வந்தனை செய்யினும் நித்தலும்
தன்அகந்தை தவிர்கிலன் ஆதலால்
அன்ன வன்தன் அருஞ்சிறை நீக்கலன்
என்ன மைந்தன் இயம்பிய வேலையே. 232

மைந்தநின் செய்கை என்னே
மலரயன் சிறைவி டென்று
நந்திநம் பணியால் ஏகி
நவின்றதும் கொள்ளாய் நாமும்

---

230. " ஐயனே, எவ்வுயிர்க்கும் உறுதி பயப்பதாகிய பிரணவ எழுத்தின் பொருள் அறியாத பிரமன் சதா காலமும் உயிர்களைப் படைக்கின்றான் என்பது பேதைமையே! அவன் வேதங்களை உணர்ந்தான் என்பதும் அத்தன்மையதே.

231. எல்லா உலகிலுள்ள எல்லா உயிர்களையும் படைக்கின்ற பெருந்தொழிலைக் கைக்கொண்டிருத்தலால், பிரமன் யாரையும் எப்பொருளையும் மதிக்கின்றானல்லன்.

232. நித்தலும் உம்மை வழிபட்டும் தான் என்னும் அகங்காரம் தவிர்ந்ததில்லை. ஆதலால் அவனைச் சிறையினின்று நீக்கமாட்டேன்" என்று கூறினார்.

233. அப்போது கருணை வள்ளலாகிய சிவபெருமான் 'மைந்தனே! என்ன செயல் செய்கின்றாய்! பிரமனை விடும்படி நந்தியிடம் சொல்லி யனுப்பினோம். அவன் சொன்ன சொல்லையும் செவியிற் கொள்ளவில்லை. இங்கு நாமே

வந்துரைத் திடினும் கேளாய்
    மறுத்தெதிர் மொழிந்தாய் என்னுக்
கந்தனை வெகுள்வான் போலக்
    கழறினன் கருணை வள்ளல். 233

அத்தனது இயல்பு நோக்கி
    அறுமுகத் தமலன் ஐய
சித்தம்இங் கிதுவே யாகில்
    திசைமுகத் தொருவன் தன்னை
உய்த்திடு சிறையின் நீக்கி
    ஒல்லையில் தருவன் என்று
பத்தியின் இறைஞ்சிக் கூறப்
    பராபரன் கருணை செய்தான். 234

என்றலும் சார தர்க்குள்
    சிலவர்கள் ஏகி அங்கண்
ஒன்றொரு பூழை தன்னுள்
    ஒடுங்கினன் உறையும் வேதா
வன்தனை விடுத்தல் செய்து
    மற்றவன் தனைக்கொண் டேகிக்
குன்றுதோ றாடல் செய்யும்
    குமரவேள் முன்னர் உய்த்தார். 235

---

வந்து சொல்லியும் கேட்கவில்லை; தடுததுப் பேசுகின்றாய்' என்று கோபிப்பார்போலக் கூறினார்.

234. எம்பெருமானது திருவுள்ளக் குறிப்பை உணர்ந்த அறுமுகன் "ஐயனே! உமது சித்தம் இதுவாயின், பிரம தேவனைச் சிறையினின்று விடுவித்து விரைவில் தருவேன்" என்று அன்புடன் பணிந்தான். 'அவ்வண்ணமே செய்க' என்று பெருமான் அருள் புரிந்தார்.

235. அந்நிலையில் பூதர்களில சிலர் சென்று ஒரு குகையில் ஒடுங்கியிருந்த பிரமதேவனது விலங்கைத் தறித்து, அவனைக்கொண்டு சென்று குன்றுதோறாடும் குமாரவேள் முன்னே விட்டார்கள்.

உய்த்தலும் கமலத் தண்ணல்
ஒண்கரம் பற்றிச் செவ்வேள்
அத்தன்முன் விடுத லோடும்
ஆங்கவன் பரமன் தன்னை
மெய்த்தகும் அன்பால் தாழ்ந்து
வெள்கினன் நிற்ப நோக்கி
எய்த்தனை போலும் பன்னாள்
இருஞ்சிறை எய்தி என்றான். 236

நாதன் இத்தன்மை கூறி
நல்லருள் புரித லோடும்
போதினன் ஐய உன்தன்
புதல்வன் ஆற்றிய இத்தண்டம்
ஏதமன்று, உணர்வு நல்கி
யானெனும் அகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகள் மாற்றிச்
செய்தது புனிதம் என்றான். 237

## முருகவேள் பிரவணப் பொருள் உரைத்தல்

காமரு குமரன் சென்னி
கதுமென உயிர்த்துச் செக்கர்த்
தாமரை புரையும் கையால்
தழுவியே அயனும தேற்று

---

236. அவர் பிரமதேவன் கையைப்பற்றி அழைத்துச் சென்று எம்பெருமான் முன்னே விட்டார். ஈசனது பாதம் பணிந்து எழுந்து வெட்கத்தால் குறுகி நின்றான் பிரமன். ஈசன் அவனை நோக்கி "இருஞ்சிறையில் பலநாள் இருந்து இளைத்தாய் போலும்" என்று கூறியருளினார்.

237. இவ்வாறு நாதன் நல்லருள் புரிந்தபோது பிரமதேவன், "ஐயனே! குமாரவேள் கொடுத்த தண்டனை குற்றமன்று. அது நல்லறிவு தந்தது; என் அகங்காரத்தை ஒழித்தது. துன்பம் பயக்கும் தீவினைகளை அழித்தது; என்னைப் புனிதன் ஆக்கியது" என்று பேசினான்.

238. அதுகேட்டு மகிழ்வுற்ற ஈசன் அழகிய குமாரனை எடுத்து அணைத்து, உச்சிமோந்து "பிரமனும் அறியாத

ஓம்என உரைக்கும் சொல்லின்
உறுபொருள் உனக்குப் போமோ
போமெனில் அதனை இன்னே
புகல்என இறைவன் சொற்றான். 238

முற்றொருங்கு உணரும் ஆதி
முதல்வகேள் உலக மெல்லாம்
பெற்றிடும் அவட்கு நீ முன்
பிறர் உணராத வாற்றால்
சொற்றதோர் இனைய மூலத்
தொல்பொருள் யாரும் கேட்ப
இற்றென இயம்ப லாமோ
மறையினால் இசைப்ப தல்லால். 239

என்றலும் நகைத்து மைந்த
எமக்கருள் மறையின் என்னாத்
தன்திருச் செவியை நல்கச்
சண்முகன் குடிலை என்னும்
ஒன்றொரு பதத்தின் உண்மை
உரைத்தனன் உரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தான் என்ப
ஞான நாயகனும் அண்ணல். 240

---

ஓம் என்னும் சொல்லின் பொருள் உனக்குத் தெரியுமோ? தெரிந்தால் அதனை இப்போதே சொல்'' என்று வினவினார்.

239. "முற்றறிவுடைய முதல்வா! உலக மெல்லாம், ஈன்ற உமாதேவியார்க்கு மற்றையோர் அறியாதவாறு நீர் சொல்லி யருளிய மூலப் பொருளை எல்லோரும கேட்க இங்கு கூறலாமோ?'' என்று குமார வேள் சொல்லியபொழுது, ஈசனார் மனம் குளிர்ந்தார்.

240. மீண்டும் மைந்தனை நோக்கி "எமக்கு மட்டும் அப்பொருளை மறைவாகக் கூறுவாயோ'' என்று தம் திருச் செவியைச் சாய்த்தார் ஈசன். அப்போது முருகன் பிரண வம் என்னும் ஓங்காரத்தின் உட்பொருளை எடுத்துரைத் தார். அவ்வுரைகேட்டு ஞான நாயகனாகிய ஈசன் மைந் தனுக்கு நல்லருள் புரிந்தார்.

அன்னதோர் ஐயம் மாற்றி
அகமகிழ் வெய்தி அங்கண்
தன்னிளங் குமரன் தன்னைத்
தலைமையோ டிருப்ப நல்கி
என்னை யாளுடைய நாதன்
யாவரும் போற்றிச் செல்லத்
தொன்னிலை அமைந்து போந்து
தொல்பெருங் கயிலை வந்தான். 241

## இந்திரன் ஈசனிடம் முறையிடல்

இத்திறம் சிலபகல் இருந்து பன்னிரு
கைத்தலம உடையவன் கயிலை மேலுறை
அத்தனோ டன்னைதன் அடி பணிந்திடச்
சித்தம துன்னினன் அருளின் செய்கையால். 242

அண்ணலம் குமரவேள் அங்கண் வைகலும்
விண்ணவர் மகபதி மேலை நாள்முதல்
உண்ணிகழ் தம்குறை உரைத்து நான்முகன்
கண்ணனை முன்கொடு கயிலை எய்தினார். 243

---

241. ஐயம் நீங்கி அகமகிழ்வடைந்தார். அங்கே தலைமையோடு இருக்கும் வண்ணம் திருவருள் செய்து, எம்பெருமான் முன்போலவே இடப வாகனத்தில் ஏறிச் சென்று கயிலாச மலையை அடைந்தார்.

242. இவ்வாறு சிலநாள் இருந்த குமாரவேள் திருவருட் செயலால், கயிலாச மலையில் வீற்றிருந்தருளும் அம்மையப்பருடைய திருவடிகளை வணங்கத் திருவுளம் கொண்டார்.

243. அங்ஙனமே கந்தவேள் சென்று தொழுது கயிலாசத்தில தங்கியிருக்கையில் இந்திரன், தன் கொடிய மனக்கவலையைப் பிரமதேவனிடமும் திருமாலிடமும் முறையிட்டு அவரை முன்னிட்டுக் கயிலாச மலையை வந்தடைந்தான்.

பரிந்துல கருள்புரி பரையொ டொன்றியே
இருந்தருள் முதல்வகேள், எண்ணிலா உகம்
அருந்திறல் சூர்முதல் அவுணர் தங்களால்
வருந்தினம் ஒடுங்கினம் வன்மை இன்றியே. 244

அந்தமில் அழகுடை அரம்பை மாதரும்
மைந்தனும அளப்பிலா வானு ளோர்களும்
வெந்தொழில் அவுணர்கள் வேந்தன் மேவிய
சிந்துவின் நகரிடைச் சிறைக்கண் வைகினர். 245

முன்னுற யான்தவம் முயன்று செய்துழி
துன்னினை, நங்கண்ஓர் தோன்றல் எய்துவான்
அன்னவனைக் கொடே அவுணர்ச் செற்றுநும்
இன்னலை அகற்றுதும் என்றி எந்தை நீ. 246

அப்படிக் குமரனும் அவத ரித்துளன்
இப்பகல் காறும்எம் இன்னல தீர்த்திலை
முப்புவனம் தொழும் முதல்வ, தீயரேம்
துப்புறு பவப்பயன் தொலைந்த தில்லையோ. 247

---

244. "அன்பினால் உலகம் காக்கும் அம்மையோடு அமர்ந்து அருளும் ஆண்டவனே! அளவற்ற காலமாக அருந்திறல் வாய்ந்த சூரன்முதலிய அசுரர்களால் வன்மை யற்று வருந்தினோம்; ஒடுங்கினோம்.

245. எல்லையற்ற அழகுடைய அரம்பையரும், என் மைந்தனாகிய சயந்தனும், எண்ணிறந்த வானவரும், கொடுந்தொழில புரியும அசுரர்கோன் ஆளும் நகரத்தில் சிறையிருக்கின்றார்கள்.

246. எம்பெருமானே! முன்பு யான் தவம முயன்ற பொழுது, நீர் எழுந்தருளி 'நம்மிடம் ஒரு குமரன் தோன்று வான்; அவனைக் கொண்டு அசுரரை அழித்து உமது துயரத்தை ஒழிக்கின்றோம்' என்று அருளிச் செய்தீர்!

247. அவ்வாறே திருக்குமாரனும் தோன்றியுள்ளார்; ஆயினும் இன்றளவும் எம் துன்பம் தீர்க்கவில்லை. மும்மை யுலகமும் வணங்கும் எம்மானே! எம்மைப் பற்றி நிற்கும் கொடிய தீவினையின் பயன் இன்னும் தீர்ந்ததில்லையோ?

சூருடை வன்மையைத் தொலைக்கத் தக்கதோர்
பேருடை யார்இலை, பின்னை யான்இனி
யாரொடு கூறுவன் ஆரை நோகுவன்
நீருடை முடியினோய் நினது முன்னலால். 248

தீதினை அகற்றவும் திருவை நல்கவும்
தாதையர் அல்லது தனயர்க்கு ஆருளர்
ஆதலின் எமைஇனி அளித்தி யால்என
ஓதினன் வணங்கினன் உம்பர் வேந்தனே. 249

## அசுரரை அழிக்க ஈசன் முருகனை அனுப்புதல்

இகபரம் உதவுவோன் இவற்றைக் கேட்டலும்
மிகஅருள் எய்தியே, விடுமின் நீர்இனி
அகம்மெலி வுறல்என அருளி, ஆங்கமர்
குகன்முகம் நோக்கியே இனைய கூறுவான். 250

பாரினை அலைத்துப் பல்லுயிர் தமக்கும்
பருவரல் செய்துவிண் ணவர்தம்
ஊரினை முருக்கித் தீமையே இயற்றி
உலப்புறு வன்மைகொண் டுற்ற

---

248. சூரனது வலிமையை அழிக்கத் தக்கவர் வேறு யாருமில்லை. கங்காதரனே! இங்கே முறையிடுவதல்லால், மற்று யாருடன் சொல்லுவேன், யாரை நோகுவேன்.

249. துன்பத்தை ஒழிக்கவும், செல்வத்தை அளிக்கவும், தந்தையரே யன்றி மைந்தர்க்கு வேறு யாருளார்? ஆதலின் இனி அடியேங்களைக் காத்தருளல் வேண்டும்" என்று இந்திரன் வணங்கி நின்றான்.

250. இம்மை மறுமைப் பயன்களை அளித்தருளும் இறைவன் அச்சொற்களைக் கேட்டுக் கருணைகூர்ந்து 'இனி மனம் வருந்தாதீர்!' என்று அருளிச்செய்து அருகேயிருந்த முருகன் திருமுகத்தை நோக்கி,

251. "உலகத்தை நிலைகுலைத்துப் பல வுயிர்க்கும் துயர் இழைத்து, வானவர் நகரத்தை அழித்து, தீமையே

சூரனை அவுணர் குழுவொடும் தடிந்து
சுருதியின் நெறி நிறீஇ, மகவான்
பேர் அரசளித்துச் சுரர்துயர் அகற்றிப்
பெயர்தி என்றனன் எந்தை பெருமான். 251

ஆயதன் பின்னர் ஏவின் மூதண்டத்து
ஐம்பெரும் பூதமும் அடுவது
ஏயபல் உயிரும் ஒருதலை முடிப்பது
ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களும் சிந்தி
மன்னுயிர் உண்பது, எப்படைக்கும்
நாயகம் ஆவது ஒருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைகைக் கொடுத்தான். 252

கொடுத்தலும் வயின்வைத்து அருளினுற் புல்லிக்
குமரவேள் சென்னி மோந்து, உன்பால்
அடுத்திடும் இலக்கத் தொன்பது வகையோர்
அனிகமாய்ச் சூழ்ந்திடப் போந்து
கடக்கரும் ஆற்றல் அவுணர்தம் கிளையைக்
காதிஇக் கடவுளர் குறையை

---

புரிந்து திறம்பட வாழும் சூரனையும் அசுரர் குலத்தையும் நீ சென்று கொன்று, சுவர்க்கலோகத்தின் ஆட்சியை மீண்டும் இந்திரனுக்குக் கொடுத்து இங்கு வந்துசேர்வாயாக" என்று திருவாய் மலர்ந்தார்.

252. பின்னர், பஞ்ச பூதங்களையும் அழிக்கவல்லதும், உயிர்கள் அனைத்தையும் ஒருங்கே நாசஞ்செய்ய வல்லதும், மாற்றாரது வலிமையையும் வரங்களையும சிதைத்து உயிருண்ண வல்லதும், கொல்லும் படைக்கலங்களுக்கெல்லாம் தலைமையுற்று விளங்குவதும் ஆகிய ஒப்பற்ற வேலாயுதத்தைக் குமாரவேள் கையில் கொடுத்தார்.

253. அந்நிலையில் உமையம்மை அருமைத் திருக்குமரனை, அருகில்வைத்து, அருளோடு அணைத்து, உச்சி மோந்து "அப்பா! நூறாயிரத்து ஒன்பது வீரர்களும உன்னை நெருங்கிவர, பெருந்திறல் பெற்ற அசுரர் குலத்தை

முடித்தனை வருதி என்றருள் புரிந்தாள்
மூவிரு சமயத்தின் முதல்வி. 253

நின்றிடும். அயன்மால் மகபதி எந்தாய்
நீஎமை அளித்தனை நெஞ்சத்து
ஒன்றொரு குறையும் இல்லையால் இந்நாள்
உய்ந்தனம் உய்ந்தனம் என்று
பொன்திகழ் மேனி உமையுடன் இறைவன்
பொன்னடி பணிந்தெழ நுமக்கு
நன்றிசெய் குமரன் தன்னுடன் நீரும்
நடம்என விடையது புரிந்தான். 254

## படை திரண்டு எழுதல்

ஓங்கு தேர்மிசைக் குமரவேள் மேவலும் உவப்பால்
ஆங்கு அவன்தன தருள்பெறும் திறலினோர் அணுகி
பாங்கர் நண்ணினர் முனிவரும் தேவர்கள் பலரும்
நீங்கல் இன்றியே அவர்புடை சூழ்ந்தனர் நெறியால்.

நீறு கண்டிகை புனைதரும் யாக்கையர் நெடுநஞ்சு
ஏறு கண்டனை யன்றிமற் றெவரையும் எண்ணார்

அறுத்தெறிந்து வானவர் குறையைத் தீர்த்து இங்கே வருக" என்று ஆசி கூறினாள்.

254. இவற்றைக்கண்ட திருமாலும், பிரமனும் இந்திரனும் "ஆண்டவனே! எம்மைப் பாதுகாத்தருளினீர்! எங்கள் மனத்தில் இனி ஒரு குறையும் இல்லை; இன்றே பிழைத்தோம், பிழைத்தோம்" என்று அம்மையப்பரது திருவடிகளைத் தொழுதார்கள். அப்போது எம்பெருமான் "நீங்களும் நன்மை புரியும் கந்தனோடு செல்வீராக" என விடை கொடுத்தருளினார்.

255. முருகவேள் பெரியதோர் தேரின்மீது எழுந்தருளினார். அவர் அருளைப்பெற்ற வீரர்கள் அருகே வந்து சேர்ந்தார்கள். முனிவரும் தேவரும் நிரந்தரமாகப் பக்கத்திலே முறையாகச் சூழ்ந்து நின்றார்கள்.

256. திருநீறும் கண்டிகையும் அணிந்தவர்கள்; சிவபெருமானை யன்றி மற்றெவரையும் தெய்வமாக மனத்தி

மாறு கொண்டவர் உயிர்ப்பலி நுங்குவோர் மறலி
வீறு கொண்டதொல் படைதனைப் படுத்திடும்
[மேலோர். 256

இந்த வண்ணமாம் சாரதப் படையினர் ஈண்டித்
தந்தம் வெஞ்சமர்த் தலைவர்க ளோடுசண் முகன்பால்
வந்து கைதொழுது ஏத்தியே இறுதி சேர்வைகல்
அந்த மில்புனல் அண்டமது உடைந்தெனஆர்த்தார்.

ஆன காலையில் அதுதெரிந்து அறுமுகத் தொருவன்
வான் அளாவிய புணரிகள் சூழ்ந்திட வயங்கும்
பானு நாயகன் வந்தெனப் பரந்து பாரிடத்துச்
சேனை சூழ்தரக் கயிலைநீத்து அவனிமேற் சென்றான்.

## கிரவுஞ்ச மலையின் தன்மையை முருகவேள் அறிதல்

விண்டு லாய்நிமிர் கிரவுஞ்ச கிரியினை விண்ணோர்
கண்டு ளம்பதை பதைத்தனர், மகபதி கலக்கம்
கொண்டு நின்றனன் நாரதன் அணுகியே குமரன்
புண்ட ரீகநேர் பதம்தொழுது இன்னன புகல்வான்.

---

லும் கருதாதவர்கள்; மாற்றார் உயிரைப் பலியாக உண்டவர்கள்; கூற்றுவனது வீரப்படையையும் வெற்றி கொள்ளும் திறலுடையவர்கள்;

257. இத்தகைய பூதப்படை வீரர்கள் தத்தம் தலைவரோடு திரண்டெழுந்து சண்முகப் பெருமானை அடைந்து, கையெடுத்துத் தொழுது துதித்துப் பெருங்கடல் உடைந்தாற் போன்று ஆரவாரித்தார்கள்.

258. அப்போது முருகவேள் பெருங்கடலின் நடுவே இலங்கும் சூரியன்போல, பரந்தசேனை சூழ்ந்துவரக் கயிலாசமலையை விட்டு நிலவுலகத்தில் வந்தருளினார்.

259. வழியில், கிரவுஞ்சம் என்னும் மலை நிமிர்ந்து ஓங்கி நின்றது. அதைக்கண்டு வானவர் மனம் பதைத்தார்கள். இந்திரன் கலக்கங்கொண்டு நின்றான். அப்போது நாரதர் முருகப்பெருமானது மலரடி தொழுது,

நேரில் இக்கிரிக் கொருபுடை மாயநீள் நகரில்
சூர் எனப்படும் அவுணனுக்கு இளவலாம் துணைவன்
போரில் அச்சுதன் நேமியை அணியதாப் புனைந்தோன்
தாரகப் பெயர் வெய்யவன் வைகினன் சயத்தால். 260

இன்னவன் தனை அடுதியேல் எளிதுகாண் இனையோன்
முன்னவன் தனை வென்றிடல் எனமுனி மொழிய
மின்னு தண்சுடர் வேலவன் அவற்றினை வினவி
அன்னவன் தனை முடிக்குதும் இவண் என அறைந்
[தான். 261

### வீரவாகுவைப் போர் செய்ய விடுத்தல்

ஐயர்கள் பெருமகிழ் வடைய ஆறிரு
கையுடை முருகன் அக்காலை தன்புடை
மெய்யருள் எய்திய வீர வாகுவாம்
துய்யனை நோக்கியே இனைய சொல்லுவான். 262

உற்ற அக்கிரி கிரவுஞ்சம் ஆகுமால்
மற்றதன் ஒருபுடை மாய நொச்சியுள்

---

260. "ஐயனே! இதுதான் கிரவுஞ்சம் என்னும் மலை. இதன் பக்கத்திலுள்ள மாயமா நகரில் சூரன் தம்பியாகிய தாரகன் இருக்கின்றான். இக் கொடியவன் திருமாலின் நேமிப் படையைப் பொன்னாரமெனப் பூண்டவன்.

261. இவனைக் கொன்று விட்டால், மூத்தவனாகிய சூரனை வென்றிடல் எளிதாகும்" என்று மொழிந்தார். அதுகேட்ட குமரவேள் "இவனை இங்கேயே அழிப்போம்" என்றார்.

262. வானவர் பெரு மகிழ்வடைய, அருகே நின்ற மெய்யருள்பெற்ற வீரவாகு தேவனை நோக்கி,

263. "அதோ நிற்கும் மலையே கிரவுஞ்ச மலையாம், அதன் பக்கத்தில் உள்ள கோட்டையுள் நிறைந்த அசுரப்

செற்றிய அசுரர்தம் சேனை தன்னுடன்
அற்றமில் தாரகன் அமர்தல் மேயினன். 263

தடுத்தெதிர் மலைந்திடும் அவுணர் தானையைப்
படுத்தனை, தாரகப் பதகன் எய்துமேல்
அடுத்தமர் இயற்றுதி, அரியதேல் யாம்
முடித்திட வருகுதும் முந்துபோ என்றான். 264

தொழுது வள்ளலைச் சூழ்ந்து மும்முறை
விழுமி தாகிய விடைபெற்று ஏகினர்
பழுதில் நீத்தம்ஓர் பத்து நூறெனக்
குழுமிப் பாரிடம் குலவிச் செல்லவே. 265

சாற்றும்இவ் வியல்புறத் தானை வீரரும்
சீற்றவெம் பூதரும் செல்ல வாகையான்
கோற்றொழில் அகற்றிய கோட்டு மாமுகன்
போற்றிய மாயமா புரியைச் சேர்ந்தனன். 266

## தாரகாசுரன் எதிர்த்தல்

சேர்ந்திடும் எல்லை பூதர்
சேனைபோய் நகரம் புக்கு

---

படைகளுடன் தாரகன் என்னும் அசுரன் அமர்ந்திருக்கின்றான்.

264. பூதப்படைகளோடு நீ போந்து அவன் கோட்டையை வளைத்திடு; தடுத்துப் போர்புரியும் அசுர சேனையைப் படுத்திடு; பாவியாகிய தாரகன் வந்தால் போர் தொடுத்திடு ; அவனைக் கொல்லுதல் அரிதாயின் நாம் வந்து முடித்திடுவோம. முன்னே செல்க'' எனப் பணித்தார்.

265. வீரவாகு தேவரும் வீரரும் முருகவேளை மும்முறை வலம் வந்து தொழுது விடைபெற்று ஆயிரம் வெள்ளமாகக் கூடி மகிழ்ந்து சென்றார்கள்.

266. இவ்வண்ணம படை வீரரோடும் பூதர்களோடும் எழுந்து சென்ற வீரவாகு தேவர், யானை முகத்தைக் கொண்ட தாரகாசுரன் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மாயமா நகரை அடைந்தார்.

267. உடனே பூதப்படைகள் நகரத்தின் உள்ளே புகுந்து எதிர்த்த அசுரரோடு நின்று போர் புரிந்தன.

நேர்ந்திடும் அவுண ரோடு
　　நின்றமர் விளைத்து நின்றார்
ஓர்ந்தனர் அதனைத் தூதர்
　　ஓடித்தம் கோயில் புக்கு
சார்ந்திடு திருவில் வைகும்
　　தாரகன் தொழுது சொல்வார். 267

எந்தைமற் றிதுகேள் உம்முன்
　　இமையவர் தொகையை இட்ட
வெந்துயர்ச் சிறையை நீக்க
　　விரிசடைக் கடவுள் மைந்தன்
கந்தன்என் றொருவன் வந்தான்
　　அவுணரைக் கடக்கும் என்று
அந்தர நெறிசெல் விண்ணோர்
　　அறைந்திடக் கேட்டும் அன்றே. 268

என்றலும் வடவைத் தீயில்
　　இழுதெனும் அளக்கர் வீழத்
துன்றிய எழுச்சி மானத்
　　துண்ணெனச் செற்றம் தூண்ட
மின்திகழ் அரிமான் ஏற்று
　　வியன்தவி சிருக்கை நீங்கிக்

---

அதை யறிந்த தூதர்கள் அரண்மனைக்கு ஓடிச் சென்று தாரகனை வணங்கி,

268. "ஐயனே! உம் தமையன் சிறை வைத்துள்ள வானவரை விடுவிக்கச் சிவபெருமான் மைந்தனாகிய கந்தன் என்பவன் வந்துள்ளான். அவன் அசுரரை வெல்வான் என்று ஆகாய வழியே சென்ற தேவர்கள் சொல்லக் கேட்டோம்.

269. (அன்னார் சொல்லிய வண்ணமே கந்தன் வந்துள்ளான். அவன் படை நமது நகரத்தை அழித்தது" என்றார்கள்.) அப்பொழுது ஊழித்தீயில் நெய்க்கடல் விழுந்தால் எழும் தீக் கொழுந்துபோல இலங்கும் அரியாசனத்தி

குன்றுறழ் மகுடம் அண்ட
கோளகை தொட எழுந்தான். 269

வாகையுள பல்லியமும் இடம்பத்தன்
நகர்நீங்கி மன்னர் மன்னன்
ஏகியதோர் படிநோக்கி உவரிமிசைக்
கங்கைகள் வந்தெய்து மாபோல்
சாகையுள பன்மரனும் பல்படையும்
குன்றுகளும் தடக்கை ஏந்திச்
சேகுடைய பெருஞ்சீற்றப் பூதர்படை
ஆர்த்தெதிர்ந்து சென்ற தன்றே. 270

அன்றரி விடுத்த ஆழி
ஆரமா அணிந்த தீயோன்
கொன்றனன் அனிகம் என்னும்
கொள்கையும் அவன்மேற் செல்லும்
வன்திறல் தம்பால் இல்லா
வண்ணமும் மதித்து நோக்கி
நின்றிலர் பூதர் வேந்தர்
நெஞ்சழிந்து உடைந்து போனர். 271

---

னின்றும மலைபோன்ற மகுடம் அண்டகோளத்தை முட்டும்படி எழுந்தான் தாரகன்.

270. அப்போது வெற்றி முரசம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. மன்னர் மன்னனாகிய தாரகன் சேனையொடு வரக்கண்ட பூதப் பெரும்படைகள் சீற்றம் கொண்டு ஆரவாரித்து, கடலிற் சென்று பாயும் ஆறுகள் போல, பல மரங்களையும், ஆயுதங்களையும், மலைகளையும் கையில் ஏந்தி எதிரே சென்றன.

271. திருமால் விடுத்த நேமிப் படையை ஆரமாகக் கழுத்தில் அணிந்த தாரகன் பூதப் பெரும் படையைக் கொன்று குவித்தான் என்றும், அவனை எதிர்த்துப் போர் செய்வதற்கு ஏற்ற வலிமை தம்மிடம் இல்லை என்றும் சீர்தூக்கி அறிந்த பூதகணத் தலைவர்கள் மனம் உடைந்து சிதறியோடினர்.

## தாரகனும் வீரவாகுவும் போர் செய்தல்

மேதா வியர்கள் பரவும்திறல் வீரவாகு
மாதாரு அன்ன சிலைதன்னை வளைத்து வாகைத்
தாதார் பிணையல் புனைதாரகன் தன்னை நோக்கித்
தீதாம் அழல்போல் வெகுண்டே இது செப்புகின்றான்.

பொன்றா வலிகொண்டு அமராடிய பூதர் தம்மை
வன்றாழ் சிலைகொண் டிடுவீரரை வன்மை தன்னால்
வென்றாம் எனஉன் னினைபோலும் விரைந்து நின்னைக்
கொன்றாவி உண்பன் எனலும் கொடியோன் உரைப்
பான். ] 273

மாயன் தனைவென்று அவன்நேமியை
மாசில் கண்டத்து
ஏயும் படியே புனைந்தேன்வலி
எண்ணு றாதே
நீயிங்கு அடுவாம் எனக் கூறினை
நீடு மாற்றம்
சீயம் தனையும் நரிவெல்வது
திண்ண மாமோ. 274

---

272. உயர்ந்தோர் புகழும திறம் வாய்ந்த வீரவாகு தேவர் அது கண்டு, பெரிய மரம்போன்ற வில்லை வளைத்துத் தாரணிந்து எதிரே நின்ற தாரகனைப் பார்த்து

273. "அழியாத் திறமைகொண்டு அமர்புரிந்த பூதரையும் வில்லாளரையும் வென்றுவிட்டோம் என்று எண்ணினையோ? இதோ! நின் உயிரை உண்பேன்" என்று வீரமொழி பேசினார். அது கேட்ட தாரகன்,

274. "அரியை நரி வெல்லுமாயின் நீயும் என்னை வெல்வாய்! திருமாலைப் போர்க்களத்தில் வென்றேன். அவன் நேமிப் படையைக் கழுத்தில் அணிந்தேன். என் வலிமையைச் சிறிதும் எண்ணிப் பாராமல் 'கொல்வேன்' என்று வீரம் பேசினை" என்று இகழ்ந்துரைத்தான்.

தொல்லைமாயையின் விஞ்சைதன்னை
நவின்றுளங்கொடு துண்ணென
மல்லல்மேவரு தாரகாசுரன்
வடிவம்எண்ணில தாங்கியே
எல்லைதீர்தரு படைவழங்கினன்
எங்குமாகி இருட்குழாம்
ஒல்லைவந்து பரந்தபோல்அவன்
ஒருவன்நின்றமர் புரியவே. 275

வேழ மாமுகற்கு இளவலை உன்னியே வீரன்
ஆழி மால்கடல் ஆமென ஆர்த்து வைதனுக
சூழும் மாயையின் இருக்கையாம் தொல் கிரவுஞ்சப்
பாழி ஒன்றுசென் றொளித்தனன் தாரகப் பாதகன்.

செற்றம் மிக்கவன் மாயைஇவ் வரைஎனச் சிந்தித்து
உற்ற காலையில் அவுண னாகிய கிரவுஞ்சப்
பொற்றை அன்னது கண்டு மோகத்துயில் புரிந்து
மற்ற வன்தன துணர்வினை மையல்செய் ததுவே. 277

275. அந்நிலையில் தாரகன் மாயைக்குரிய மந்திரத்தை மனத்திலே நினைத்தான். அதன் பயனாக எண்ணிறந்த வடிவங்களைக் கொண்டான். எங்கும் இருள் பரவினாற் போல எல்லையற்ற படைக்கலங்களை விடுத்து ஒருவனாக நின்று போர்புரிந்தான்.

276. (அப்பொழுது வீரவாகு தேவர் ஒரு வீரப்பெரும் படையை எடுத்து மாயையை விலக்கினார். தாரகன் புறங் காட்டி ஓடினான்.) வீரவாகு முருகப்பெருமானைச் சிந்தித்து அவனைப் பின்தொடர்ந்தார். மாயையின் இருப்பிடமாகிய கிரவுஞ்ச மலையின் ஒரு குகையிலே சென்று ஒளித்தான் தாரகாசுரன்.

277. கோபமுற்ற வீரவாகு தேவர் 'இது மாயமலை' என்றெண்ணிக்கொண்டு திகைத்து நின்றபோது, அம்மலை மயக்கம் தரும் உறக்கத்தை உண்டாக்கி அவர் அறிவை மயக்கிற்று.

வெற்றி வீரவா குப்பெயர் அண்ணலும் வீரர்
மற்று யாவரும் மயங்கலும் தாரகன் வாரா
உற்று நோக்கிநம் மாயையால் இவரெலாம் ஒருங்கே
இற்று ளாரென மகிழ்ந்துமால் வரைமிசை எழுந்
தான். 278

மலையின் மீமிசை எழுதரு
தாரகன் மற்றோர்
தலைமை யாகிய இரதமேற்
கொண்டு தானவர்கள்
பலரும் வந்துவந் தார்த்தனர்
சூழ்தரப் பைம்பொன்
சிலைய தொன்றினை வாங்கியே
செருநிலம் சென்றான். 279

## முருகவேள் போரிட வருதல்

ஆரும்இது கேண்மின்அமர் ஆடுகளன் ஏகித்
தாரகனை வேல்கொடு தடிந்தவுணர் வைகும்
ஓர்ஆரண மானகிர வுஞ்சகிரி செற்றே
வீரர்தமை ஓர்இறையின் மீட்டிடுவன் என்றான். 280

---

278. இங்ஙனம் வெற்றி வீரராகிய வீரவாகு தேவரும் மற்றைய வீரர்களும் மயக்கமுற்ற நிலைகண்டு, தாரகன் வெளிப்பட்டான். மாற்றாரை உற்று நோக்கினான். 'நம் மாயையால் இவர் எல்லோரும் ஒழிந்தார்' என்று மன மகிழ்ந்தான். அம்மலையின்மீது தோன்றினான்.

279. ஒரு பெருந்தேரின் மீது அமர்ந்து அசுரர்கள் சூழ்ந்து ஆரவாரிக்க, பொன்மயமான தன் வில்லை வளைத்துப் போர்க் களம் போந்தான்.

280. நாரதர் வாயிலாக நிகழ்ந்ததெல்லாம் அறிந்த முருகப்பெருமான் அஞ்சி நின்ற வானவரை நோக்கி "எல்லோரும் கேண்மின்: இப்பொழுதே நாம் அமர்க்களம் செல்வோம். தாரகனை வேற்படையால் தடிந்து ஒழிப்போம். அசுரர் கோட்டையாகிய கிரவுஞ்ச கிரியையும் தகர்ப்போம். கணப்பொழுதில் நமது வீரரையும் மீட்போம்" என்று அருளிச்செய்தார்.

முழுமதி யன்ன ஆறு முகங்களும்
 மூந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
 வேறுள படையின் சீரும்
அழகிய கரம் ஈராறும்
 அணிமணித் தண்டை ஆர்க்கும
செழுமலர் அடியும் கண்டான்
 அவன்தவம் செப்பற் பாற்றோ. 281

தற்பம துடைய சிந்தைத்
 தாரகன் இனைய வாற்றால்
சிற்பர மூர்த்தி கொண்ட
 திருவுரு அனைத்தும் நோக்கி
அற்புதம் எய்தி நம்மேல்
 அமர்செய வந்தான் என்றால்
கற்பனை கடந்த ஆதிக்
 கடவுளோ இவன்கொல் என்றான். 282

இந்தவா றுன்னிப் பின்னர்
 யார்க்கும் மேலாகும் ஈசன்
தந்ததோர் வரமும் வீரத்
 தன்மையும் வன்மைப் பாடும்

---

281 முழுமதி போன்ற ஆறு முகங்களும் கருணை பொழியும் பன்னிரு கண்களும், வேலும் வேறுள்ள படைகளும் தாங்கிய அழகிய பன்னிரு கரங்களும், அணிமணித் தண்டை ஒலிக்கும் திருவடியும்கொண்டு போர்க்களத்தில் நின்ற முருகவேளைக் கண்டான் தாரகன் என்றால் அவன் செய்த தவம சொல்லும் தரத்ததோ ?

282. ஆணவம் பொருந்திய மனத்தையுடைய அசுரன், இங்ஙனம் ஞான முதல்வராகிய பெருமான் கொண்ட திருக்கோலத்தைக் கண்டு வியப்படைந்து " நம்மேல் போர் செய்ய வந்த இவன் கற்பனை கடந்த முழுமுதற் கடவுள் தானோ ' என்று சிந்தித்தான்.

283. இவ்வாறு நினைத்துப் பின்னர் தனது நிலைமையை எண்ணினான். எவர்க்கும் மேலாகிய ஈசனிடம்

முந்துதாம் பெற்ற சீரும்
முழுவதும் நினைந்து சீறிக்
கந்தவேள் தன்னை நோக்கி
இனையன கழறல் உற்றான். 283

நாரணன் தனக்கும் மற்றை
நான்முகன் தனக்கும், வெள்ளை
வாரணன் தனக்கும் அல்லால்
மதிமுடி அமலனுக்கும்
தாரணி தனில் எமக்கும்
சமரினை இழைப்ப இங்கோர்
காரணம் இல்லை மைந்தா
வந்ததென் கழறு கென்றான். 284

அறவினை புரிந்தே யார்க்கும்
அருளொடு தண்டம் செய்யும்
இறையவன் ஆகும் ஈசன்
இமையவர் தம்மை நீங்கள்
சிறையிடை வைத்த தன்மை
திருவுளம் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த
விடுத்தனன் எம்மை என்றான். 285

---

தான் பெற்ற வரமும், திறமும் மற்றுமுள்ள ஏற்றமும் நினைந்து அகங்காரங்கொண்டு கந்தப்பெருமானை நோக்கி,

284. "நாராயணனாகிய திருமாலுக்கும், நான்முகனாகிய பிரமனுக்கும், வெள்ளை யானையுடைய இந்திரனுக்கும் எமக்கும் போர் நிகழக் காரணம் உண்டு. சந்திரசேகரனாகிய சிவபெருமானுக்கும் எமக்கும் அமர் நிகழக் காரணம் ஒன்றும் இல்லையே! அவ்வாறிருக்க, குமரா! நீ இங்கு எதற்காகப் போர்க்கோலம் கொண்டு வந்தாய்?" என்று வினவினான்.

285. அதற்கு மாற்றம் உரைக்கக் கருதிய முருகவேள் "நீங்கள் வானவரைச் சிறையில் அடைத்து வைத்தீர்கள்! நீதி செலுத்தும் முறையில் அருள்புரிதல் தண்டித்தல் ஆகிய இரண்டும் செய்கின்ற ஈசன், உங்கள்

## தாரகன் கூற்று

செந்திருத் திகழும்மார் புடைய செங்கணன்
சுந்தரக் கலுழன்மேல் தோன்றிப் போர்செய்தே
அந்தரக் கதிர்புரை ஆழி உய்த்ததென்
கந்தரத் தணிந்தது காண்கிலாய் கொலோ. 286

இன்றுகா றெம்முடன் இகலிப் போர்செயச்
சென்றுளார் யாவரும் சிறிது போழ்தினுள்
பொன்றுவார் இரிந்தனர் போவர் அல்லது
வென்றுளார் இலைஅது வினவ லாய்கொலோ. 287

முட்டிவெஞ் சமரினை முயல முன்னம்நீ
விட்டிடு தலைவரை வென்று வெற்பினில்
யட்டிட இயற்றினன் பல கணங்களை
அட்டனன் அவற்றினை அறிந்தி லாய்கொலோ. 288

ஆகையால் எம்முடன் அமர் இயற்றியே
சோகம தடையலை சூல பாணிபால்
ஏகுதி பாலநீ என்று கூறலும்
வாகையம் குமரவேள் மரபிற் கூறுவான். 289

---

கொடுமையை ஒழிக்கத் திருவுளம் கொண்டு எம்மை அனுப்பினார்" என்றார்.

286. அமமொழி கேட்ட தாரகன் "திருமால் கருடன் மேல் எழுந்து போர் புரிந்து என்மீது ஆழிப் படையை விட்டதும், அதனை யான் கழுத்தில் அணியாகக் கொண்டதும் அறிந்திலையோ?

287. இன்றுவரை எமமுடன் பகைத்துப் போர்செய்ய வந்தவர் யாவரும சிறிதுநேரத்தில் வீடினர்; அன்றிஓடினர். வென்றவர் யாரும இல்லை; இதை நீ கேட்டிலையோ?

288. முன்னமே நீ போர்க்களத்திற்கு அனுப்பிய படைத்தலைவரை வென்று மலையிடை மாய்த்தேன். மேலும் பல கணஙகளையும் ஒழித்தேன். இவற்றை நீ உணர்ந்திலையோ?

289. "ஆதலால் பாலனே! எம்முடன் போர்செய்து துன்பம் அடையாதே! சிவபெருமானிடம் செல" என்று கூறினான்.

ஈட்டிய மாயைகள் எவையும் தன்வழிக்
காட்டிய கிரியையுங் கள்வ நின்னையும்
தீட்டிய வேல்கொடு செற்றுச் சேனையை
மீட்டிடு கின்றனன் விரைவினால் என்றான். 290

### தாரகனை முருகவேள் தகர்த்தல்

செய்யவார்சடை ஈசன் நல்கிய
சிறுவன் இங்கொரு வன்பொரக்
கையிழந்து முகத்தின் ஊடு
கவின்கொள்கோடும் இழந்தனன்
மையல்எய்தி விழுந்தனன்பொரும்
வலியதானையும் மாண்டன
ஐய,ஈங்கொரு தமியன்நின்றனன்
அழகிதால்என தாண்மையே. 291

ஒருவினன் அகந்தையை, உள்ளம் ஓரிறை
வெருவினன், விம்மிதம் மிகவும் எய்தினான்
எரிகலுழ் விழியினன் இவனை வென்றிடல்
அரியது போலும்என்று அகத்தில் உன்னினான். 292

---

290. அப்போது முருகன் "வஞ்சகனே! மாயைக்கெல்லாம் இருப்பிடமாகிய இம்மலையையும் உன்னையும் கூரிய வேலாற்கொன்று விரைவில் எம்சேனையை மீட்போம்" என்று அருளினார்.

291. முருகவேள் விட்ட பாணங்களால் அடிபட்டு விழுந்த தாரகன் "அந்தோ! சிவபெருமான் பெற்ற சிறுவன் ஒருவனோடு போர் செய்து கையிழந்தேன்; தந்தம் இழந்தேன்: மயக்கமுற்று விழுந்தேன். வலிய சேனையும் அழிந்தது. நான் ஒருவனே எஞ்சி நின்றேன். என் வீரம் அழகி தன்றோ?" என்றான்.

292. அந்நிலையில் அகங்காரத்தை விட்டான். நொடிப்பொழுது மனம் நடுங்கினான். வியப்படைந்தான். 'இவனை வெல்லுதல் அரிதுபோலும்' என்று அகத்துள் எண்ணினான்.

பாங்கரின் மாதுடைப் பரமன் தொல்படை
ஈங்கினி விடுதும்என் றெண்ணி அப்படை
வாங்கினன் அருச்சனை மனத்தின் ஆற்றினன்
ஓங்கிரும் சினமுடன் ஒல்லை ஏவினான். 293

கந்தவேள் அனையது கண்டு தந்தையைச்
சிந்தையில் உன்னிஓர் செங்கை நீட்டியே
அந்தவெம் படையினை அருளிற் பற்றினான்
தந்தவன் வாங்கிய தன்மை என்னவே. 294

நெற்றியில் விழியுடை நிமலன் காதலன்
பற்றிய படையினைப் பாணி சேர்த்தினான்
மற்றது தாரக வலியன் கண்ணுறீஇ
இற்றது நம்திரு இனியென்று ஏங்கினான். 295

தேவர்கள் தேவனார் தெய்வத தொல்படை
ஏவினன் அதனையும் எதிர்ந்து பற்றினான்
மூவிரு முகமுடை முதல்வன் வன்மையை
நாவினில் ஒருவரால் நவிலற் பாலதோ. 296

---

293. மீண்டும் வீரம் மேலிட்டு "இனிப் பரமசிவன் அளித்த பாசுபதாஸ்திரத்தை விடுவோம்" என்று எண்ணி அதனை எடுத்து மனத்தினால் அருச்சனை புரிந்து, சீற்றத்தோடு விடுத்தான்.

294. அது கண்ட கந்தவேள் தந்தையை மனத்தில் நினைத்துச் செங்கரத்தினை நீட்டி அக்கொடிய அஸ்திரத்தைக் கொடுத்தவன் வாங்கிய தன்மைபோல் கருணையோடு பற்றிக்கொண்டார்.

295. பற்றிய படைக்கலத்தைத் தமது ஆயுதங்களோடு சேர்த்த முருகன் செயல் கண்டு "இனி நமது ஆக்கம் எல்லாம் அழிந்தது" என்று ஏக்கம் கொண்ட தாரகன்,

296. "பரமசிவனது பாசுபதப் படையைவிட்டேன். அதனையும் எதிர்ந்து பற்றினான். இவ்வறுமுக முதல்வனது ஆற்றலை ஒருவர் நாவினால் உரைக்க ஒண்ணுமோ?

ஆயினும் அரன்மகன் அறத்தின் போரலால்
தீயதோர் கைதவச் செருவ துன்னலான்
மாயைகள் ஆற்றியே மறைந்து நின்றுநான்
ஏயென இயற்றுவன் அமரென் றெண்ணினான். 297

## வேற்படையின் வெற்றி

அவ்வகை தாரகன் வரையோடும்
அளவறு மாயையின் வடிவெய்தி
எவ்விடை யும்செறி தரலோடும்
எம்பெருமான் அவன் இவைகாணாத்
தெவ்வலி கொண்டுறும் இவன்ஆவி
சிந்துவன் என்றுள மிசைகொண்டே
கைவரு வேற்படை தனைநோக்கி
இனையன சிலமொழி கழறுற்றான். 298

தாகரன் என்பதோர் பேரோனைச்
சஞ்சல முறுகிர வுஞ்சத்தை
ஓரிறை செல்லுமுன் உடல்கீறி
உள்ளுயிர் உண்டு புறத்தேகிப்
பாரிடர் தம்மை இலக்கத்தோன்
பதின்மர்க ளாக உரைக்கின்ற
வீரரை மீட்டிவண் வருகென்றே
வேற்படை தன்னை விடுத்திட்டான். 299

---

297. ஆயினும் சிவனார் திருமகன் அறப்போர் புரி வானே யன்றி மாயப்போர் புரிய நினையான். ஆதலால் மறைந்து நின்று நான் மாயம் புரிவேன்" என்று மனத்தில் எண்ணினான்.

298. அப்படியே கிரவுஞ்ச மலையுடன் கலந்து அள விறந்த மாயா வடிவங்களை அடைந்தான். எங்கும் நிறைந்து நின்றான். முருகப்பெருமான் இதனைக் கண்டு அவனுயிரை அழிக்கத் திருவுளம் கொண்டு தம் திருக் கையில் அமைந்த வேலாயுதத்தை நோக்கி,

299. "தாரகன் என்னும் பெயருடைய அசுரனையும், சஞ்சலம் விளைக்கும் கிரவுஞ்ச மலையையும், ஒரு நொடிப்

சேயவன் விட்டிடு தனிவைவேல்
செருமுயல் தாரகன் வரையோடும்
ஆயிடை செய்த புணர்ப்பெல்லாம்
அகிலமும் அழிதரு பொழுதின்கண்
மாயையின் ஆகிய உலகெங்கும்
மலிதரும் உயிர்களும் மதிசூடும்
தூயவன் விழியழல் சுடுமாபோல்
துண்ணென அட்டது சுரர்போற்ற. 300

தாரகன் மார்பம் என்னும்
தடம்பெரு வரையைக் கீண்டு
சீரிய கிரவுஞ் சத்தில்
சேர்ந்துபட்டு உருவிச் சென்று
வீரமும் புகழும் கொண்டு
விளங்கிய தென்ன அங்கண்
சோரியும் துகளும் ஆடித்
துண்ணென மீண்ட தன்றே. 301

மீண்டிடு சீற்ற வைவேல்
வெற்பினுள் துஞ்சு கின்ற
ஆண்டகை வீரர் தம்மை
ஆயிடை எழுப்பி வான்போய்

---

பொழுதின் உள்ளே, பிளந்து உயிருண்டு, புறத்தே போந்து, பூதர்களையும் நூறாயிரத்தொன்பது வீரரையும் மீட்டு இங்கு வருக" என்று கூறி விட்டார்.

300. அவ்வேல், ஊழிக்காலத்தில் ஈசன் கண்ணினின் றும் எழுந்து எல்லாவற்றையும் சுட்டெரிக்கும் கனல் போன்று, தாரகன் மலையோடு சேர்ந்து இயற்றிய மாயை களையெல்லாம் அழித்து ஒழித்தது.

301. மேலும் தாரகன் மார்பென்னும் பெரிய மலை யைப் பிளந்து, கிரவுஞ்ச கிரியைத் தாக்கி ஊடுருவிச் சென்று, வீரமும் புகழும் கொண்டாற்போலக் குருதியும் துகளும் கொண்டு மீண்டது.

302. அங்ஙனம் மீண்டவேல் மாயமலையில் மயங்கிக் கிடந்த வீரரை எழுப்பிவிட்டு, ஆகாய கங்கையிற்படிந்து,

மாண்தகு கங்கை தோய்ந்து
வாலிய வடிவாய் ஐயன்
தூண்டிய கரத்தில் வந்து
தொன்மைபோல் இருந்த தம்மா. 302

ஆங்கது காலை தன்னில்
அளப்பிலா மாயை வல்ல
ஓங்கல திறப்ப அங்கண்
உறங்கிய வீரர் எல்லாம்
தீங்குறும் மையல் நீங்கிக்
கதுமெனச் சென்று செவ்வேள்
பூங்கழல் வணங்கி நின்று
போற்றியே புடையின் நின்றார். 303

### வானவர் முருகனைப் போற்றுதல்

வன்கணே உடைய சூர்பின்
வருத்திட இந்நாள் காறும்
புன்கணே உழந்தேம் அன்னான்
பொருப்பொடு முடியச் செற்றாய்
உன்கணே வழிபா டாற்ற
உன்னினம் இன்ன வெற்பின்
தன்கணே இருத்தல் வேண்டும்
தருதி இவ்வரம தென்றார். 304

---

தூய வடிவத்துடன் முருகவேள் திருக்கரத்தில் முன்போல் அமர்ந்தது.

303. அப்பொழுது மயக்கம் தீர்ந்த வீரர் அனைவரும் விரைந்துசென்று முருகவேள் திருவடியை வணங்கித் துதித்து நின்றார்கள்.

304. "ஐயனே! கொடுமையே உடைய தாரகாசுரன் இன்றளவும் எமமை வருத்தினான். அதனால் துன்பம் உற்றோம். அன்னவனை மாயமலையோடு மாய்த்தருளினீர்! எமது துயரம் தீர்த்த உமக்கு வழிபாடு செய்ய விருமபுகின்றோம். இம்மலை யிடத்தே எழுந்தருளி யிருததல்

அந்த எல்லை அயன்முதல் தேவரும்
முந்து கின்ற முனிவரும் சண்முகத்
தெந்தை பாங்கரின் ஈண்டி அவன்பெயர்
மந்தி ரம்கொடு மஞ்சனம் ஆட்டினர். 305

வீற்றோர் சீய வியன்தவி சின்மிசை
ஏற்றி வேளை இருத்தி அவன்பெயர்
சாற்றி மாமலர் சாத்தித் தருவிடைத்
தோற்று பூவின் தொடையலும் சூட்டினர். 306

## தாரகன் மனைவி-சவுரி புலம்பல்

உந்துதனி யாழி உனக்கணியாத் தந்தோனும்
இந்திரனும் ஏனை இமையவர்கள் எல்லோரும்
அந்தகனும் தாமும் அனைவர்களும் இன்றன்றே
சிந்தைதனில் உள்ள கவலையெலாம் தீர்ந்தனரே. 307

சந்தார் தடம்புயத்துத் தானவர்கள் தற்சூழ
அந்தார் கமழும் அரியணைமேல் வைகியநீ

---

வேண்டும்" என்று வரம் வேண்டி நின்றார் திருமால் முதலிய தேவர்கள்.

305. (முருகவேள் அதற்கு இசைந்தருள) பிரமன் ஆதிய தேவரும் முனிவரும் அருகே நெருங்கி ஆறெழுத்தமைந்த அரிய மந்திரத்தை ஓதித் திருமஞ்சனம் ஆட்டினர்.

306. பின்பு பெருமானை அரியாசனத்தில் எழுந்தருளச் செய்து, நாமாவளி சொல்லி நல்ல மலர்களால் அருச்சித்து, கற்பக மாலையும் சூட்டினர்.

307. (இவ்வாறு வணங்கி ஏத்தும்பொழுது) தாரகன் மனைவியாகிய சவுரி தாரை தாரையாய்க் கண்ணீர் வடித்துப் புலமபினள். "ஐயோ! நாதா! எங்கே சென்றாய்! ஆழிப்படையை உனக்கு அணியாகத் தந்த திருமாலும், இந்திரனும், வானவரும், கூற்றுவனும பிறரும் இன்று கவலையெலாம் தீர்ந்தாரோ?

308. நறுஞ் சாந்தம் பூசிய பெருந்தோள் அசுரர் புடைசூழ, அருமணம் கமழும் அரியாசனத்தில் வீற்றிருந்த

சிந்தா குலத்தில் செருநிலத்தில் துஞ்சினையால்
எந்தாய் புகலாய் இதுவும் சிலநாளோ. 308

வென்றிமழு வேந்தும் விமலன் உனக்களித்த
துன்றும் வரத்தியலை உன்னினையால் சூழ்ச்சியினை
ஒன்றும் உணராது உயிரும் தொலைந்தனையே
என்று தமியேன் இனிஉன்னைக் காண்பதுவே. 309

## மைந்தன் புலம்பல்

தண்டா விறல்சேரும் தன்தாதை வீய்ந்ததனைக்
கண்டான் உயிர்த்தான் கலுழ்ந்தான் கரம்குலைத்தான்
அண்டாத சோகத் தழுங்கினான், வெய்யகனல்
உண்டால் எனவீழ்ந் தயர்ந்தான் உணர்ந்தனனே.

உளம்தளர் வெய்தித் தொல்லை
ஒளிமுகன் இழந்து மேனி
தளர்ந்தனன் வறியன் போன்று
தாரக முதல்வன் தந்த
இளந்தனி மைந்தன வல்லே
ஏகலும் அனைய நீர்மை

---

ஐயனே! சிந்தை வருந்திச் செருக்களத்தில் இறந்தாயே! இதுவும் ஒரு காலமோ?

309. மழுவேந்திய பெருமான் அளித்த வரத்தின் திறத்தையே நினைத்தாய்! மாற்றார் செய்த சூழ்ச்சியைச் சிறிதும் மனத்திற் கொள்ளாது மடிந்தனையே! ஏழையேன் உன்னை இனி என்று காணபேனோ?" என்று வருந்தினான்.

310. பின்பு தாரகன் மைந்தனாகிய அசுரேந்திரன் இறந்து கிடந்த தந்தையைக் கண்டான்; பெருமூச் செறிந்தான்; கலங்கி அழுதான்; கரங்களை உதறினான்; அளவிறந்த சோகத்தில் அழுங்கினான்; நெருப்பை உண்டவன் போலத் துயர் உற்று நிலத்தில் விழுந்தான்; மயங்கினான்; தெளிந்தான்.

311. தந்தை இறந்த செய்தியைச் சூரபதுமனிடம் சொல்லுமாறு மகேந்திர நகர்க்கு விரைந்து சென்றான். மனம் தளர்ந்து இயற்கையான ஒளி இழந்து, உடல்

வளந்திகழ் தொல்லை வீர
    மகேந்திரத் தவுணர் கண்டார். 311

வஞ்சமும் கொலையும் செய்யான்
    மற்றிவன் இதற்குத் தாதை
வெஞ்சினம் கொடுபோ கென்று
    விடுத்தனன் போலும் என்பார்
தஞ்ச மதாகி உள்ள
    தாரகன் கொடுமை நோக்கி
அஞ்சியே அவனை நீங்கி
    அடைந்தனன் கொல்லோ என்பார். 312

அங்கையை ஒருவன் வாளால்
    அறுத்திடப் புலம்பி நம்கோன்
தங்கை வந்து அமரர்தம்மைச்
    சயந்தனைச் சிறைசெய் வித்தாள்
இங்கிவன் தானும் துன்புற்று
    ஏகுவான் இன்றும் அற்றே
புங்கவர் தமக்கே இன்னல்
    புரிகுவன் போலும் என்பார். 313

---

நலிந்து, வறியவன்போல் விரைந்து போந்த மைந்தனை வீர மகேந்திரத்து அசுரர் கண்டார்கள்.

312. "இவன் வஞ்சமும் கொலையும் செய்யமாட்டான். அதனால் தந்தையாகிய தாரகன் வெஞ்சினம் கொண்டு இவனை வெளியேற்றினன் போலும்" என்பார் சிலர்; "தஞ்சமாகவுள்ள தாரகன் கொடுமையைக் கண்டு அஞ்சித் தானகவே அவனை நீத்து இங்கு வந்தடைந்தானே" என்பார் சிலர்.

313. "முன்பு நம்மரசன் தங்கையின் கையை ஒருவன் வாளால் அறுத்தலால், வானவரையும் சயந்தனையும் அவன் சிறையில் அடைத்தான். இன்று இவனும துன்புற்று வநதடைந்தான்; தேவர்க்கு மேலும் துயர் விளைப்பான் போலும்" என்பார் சிலர்.

வீற்றிருந்து அரசு போற்றும்
வேந்தனை எய்தி அன்னான்
காற்றுணை முன்னர் வீழ்ந்து
கரங்களால் அவற்றைப் பற்றி
ஆற்றவும் அரற்றல் செய்ய
அவுணர்கோன் அதுகண்டு ஐய
சாற்றுதி புகுந்த தன்மை
தளர்ந்தனை புலம்பல் என்றான். 314

என்றலும் மைந்தன் சொல்வான்
இந்திரன் புணர்ப்பால் ஈசன்
வன்திறல் குமரன் பூத
வயப்படை தன்னோ டேகி
உன்தன திளவல் தன்னை
ஒண்கிர வுஞ்சம் என்னும்
குன்றொடும் வேலாற் செற்றுக்
குறுகினன் புவியில் என்றான். 315

## சூரன் சீற்றம் உறுதல்

நெறித்தபுரு வத்துணைகள் நெற்றிமிசை சென்ற
கறித்தன எயிற்றின்நிரை கவ்வி அதரத்தை

---

314. அப்பொழுது அசுரேந்திரன், அரசு வீற்றிருந்த சூரபன்மனை அடைந்து அவன் அடிகளில் விழுந்து, கைகளால் பாதங்களைப் பற்றி 'ஐயகோ' என்று அழுது கதறினான். அதுகண்ட சூரன் "குழந்தாய்! வருந்தாதே! என்ன நிகழ்ந்தது சொல்" என்றான்.

315. "என் ஐயனே! இந்திரன் செய்த தந்திரத்தால் சிவ குமாரனாகிய கந்தவேள் வலிய பூதப்படைகளுடன் வந்து, உன் தம்பியையும் கிரவுஞ்ச மலையையும் வேற் படையால் அழித்து மேலும் வந்து கொண்டிருக்கின்றான்" என்று புலம்பினான் அசுரேந்திரன்.

316. அந்நிலையில் சூரன் சீற்றமுற்றான், நெறிந்த புருவங்கள் நெற்றிக்கு மேலே சென்றன; பற்கள் உதட்டை மடித்துக் கடித்தன; உதடும் வாயும் நெருங்கித்

செறித்தன துடித்தன தெழித்தஇதழ் செவ்வாய்
குறித்தது மனம்ககன கூடமும் முடிக்க. 316

மன்இளவல் ஆருயிரை மாற்றிவரு கந்தன்
தன்இகல் கடந்துசயம் எய்திவரல் வேண்டும்
என்இரதம் வெம்படை இடும்கவசம் யாவும்
உன்னுகணம் ஒன்றின்முனம்உய்த்திடுதிர் என்றான்.

### அமைச்சன் அறிவுரை கூறுதல்

ஆயசெயல் காண்டலும்
அமைச்சரில் அமோகன்
மாயைதரு சூரன்அடி
வந்தனை புரிந்தே
ஏயதொரு மாற்றமது
இசைப்பல்அது கேண்மோ
தீயசினம் எய்திடல்
எனாஇனைய செப்பும். 318

வரத்தினில் வலியினோரோ
மாயையில் வலியினோரோ
கரத்தினில் படைக் கலத்தில்
கல்வியில் வலியினோரோ

---

துடித்தன; அண்ட கூடத்தை இடிக்க நினைத்தது அவன் உள்ளம்.

317. "என் தம்பியின் உயிரைக் கவர்ந்த கந்தன் வலிமையை அடக்கி வெற்றிபெற்று வரல் வேண்டும்; நொடிப்பொழுதில் வருக தேர்; தருக படைக்கலம்" எனப் பணித்தான் சூரன்.

318. அச்செயல் கண்ட அமோகன் என்னும் அமைச்சன், அரசன் அடிபணிந்து "அடியேன் ஒன்று கூறுகின்றேன்; அதனைக் கேட்டருளல் வேண்டும்; கொடுஞ்சினம் கொள்ளலாகாது" என வேண்டிக்கொண்டு சொல்லத் தொடங்கினான்.

319. ("பகைவர்மேற் படை யெடுத்துச் செல்லும் அரசர் மாற்றார் வலிமையை முற்றும் அறிதல் வேண்டும்.)

உரத்தினில் வலியி னோரோ
உணர்ச்சிசேர் ஊக்க மான
சிரத்தினில் வலியி னோரோ
என்றிவை தேர்வர் அன்றே. 319

மாற்றலர் வன்மை ஓராய்
மற்றவர் படைஞர் தங்கள்
ஆற்றலை உணராய் நின்தன்
அரும்பெரும் தலைமை உன்னாய்
போற்றிடும் அமைச்ச ரோடும்
புரிவன சூழாய், வாளா
சீற்றமங் கதுமேற் கொண்டு
செல்லலும் திறலின் பாற்றே. 320

கலகல மிழற்றும் தண்டைக்
கழலடிச் சிறுவன், கைம்மாத்
தலையுடை இளவல் தன்னைத்
தடிந்தது அற்புதத்த தன்றால்
வலியரும் ஒரு காலத்தில்
வன்மையை இழப்பர், ஆற்ற

---

அவர் வரத்தில் வலியரோ? மாயத்திறத்தில் வலியரோ? கை வரிசையில் வலியரோ? படைக்கலத்தில் வலியரோ? கல்வியிலும் மனத்திட்பத்திலும் வலியரோ? அறிவொடு சேர்ந்த ஊக்கத்தில் வலியரோ? இவற்றை யெல்லாம் ஆராய்தல் வேண்டுமன்றோ?

320. நீ பகைவர் வன்மையை உணர்ந்தாயில்லை; அவர் சேனையின் ஆற்றலை அறிந்தா யில்லை; நின் அரும் பெருந் தலைமை நிலையையும் நினைந்தா யில்லை; நின் நலம் பேணும் அமைச்சரோடும் ஆக வேண்டியவற்றை ஆராய்ந்தா யில்லை; வெறுமையாய்ச் சீற்றங்கொண்டு செல்லுதல் வீரத்தின் பாற் படுமோ?

321. கலகல என்று ஒலிக்கும் தண்டை யணிந்த சிறுவன் வேழத்தலையுடைய தாரக வீரனைக் கொன்றது வியப்பன்று. வலியவரும் ஒரு காலத்தில் வன்மையை

மெலியரும் ஒரு காலத்தில்
வீரராய்த் திகழ்வர் அன்றே: 321

யாரும்நேர் இன்றி வைகும்
இறைவநீ சிறுவன் தன்மேல்
போரினை முன்னி ஏகல்
புகழ்மைய தன்றால் அன்னான்
சீரொடு மதுகை யாவும்
தேர்ந்துபின் அவனில் தீர்ந்த
வீரரைப் படையொ டேவி
வெற்றிகொண்டு அமர்தி என்றான். 322

## முருகன் திறம் அறியச் சூரன் ஒற்றரை ஏவுதல்

சாரணர் இனையர் போந்து
தாள்முறை பணிந்து நிற்பச்
சூரன்அங்கு அவரை நோக்கித்
துண்ணென நீவிர் ஏகிப்
பாரிடை வந்த கந்தன்
பான்மையும் படைவெம் பூதர்
சேருறு தொகையும் யாவும்
தேர்ந்திவண் வருதிர் என்றான். 323

---

இழப்பர்; மிக மெலியவரும் ஒரு காலத்தில் வீரராக விளங்குவர்.

322. ஒப்பற்ற அரசே! அச்சிறுவன்மீது நீ போர் புரியக் கருதிச் செல்லுதல் புகழன்று. அவனுடைய சிறப்பையும் திறத்தையும் பிறவற்றையும் உணர்ந்து பின்னர் அவனிலும் சிறந்த வீரரைப் படையொடு போக்கி வெற்றி பெற்றிருப்பாயாக" என்று கூறினான் அமைச்சன்.

323. அப்போது சூரன் விரும்பியவாறு ஒற்றர்கள் வந்து அடிபணிந்தார்கள். அவர்களை நோக்கி, "நீர் விரைந்து சென்று நிலவுலகத்தில் வந்துள்ள கந்தன் தன்மையும், பூதப்படையின் தொகையும் பிறவும் அறிந்து வருக" என்று ஏவினான்.

## முருகவேள் புறப்பட்டுச் சிவப்பதிகளை வணங்குதல்

மங்குல் வானமேல் வெய்யவன்
கதிரென வழங்கும்
செங்கை கூப்பியே தொழுதிடு
வான்எனச் செல்ல
அங்கவ் வேலையில் அறுமுகன்
கடவுள்வெற் பகன்று
பொங்கு தானையும் அமரரும்
சூழ்தரப் போந்தான். 324

பைய ராவின்மேல் கண்துயில்
பண்ணவன் தனக்கும்
தையல் பாதியனே பரம்
பொருள் எனும் தன்மை
மையல் மானுடர் உணர்ந்திட
மறைமுனி எடுத்த
கையதே உரைத் திட்டதோர்
காசியைக் கண்டான். 325

அம்பு ராசிகொள் பிரளயத்
தினும்அழி வின்றி

---

324. மேகங்கள் உலாவும் வானத்தில் தோன்றிய சூரியன் தன் கதிர்களாகிய கரங்குவித்து வணங்குவான் போலச் செல்ல முருகவேள் தேவகிரி என்னும் மலையை விட்டுப் பெருஞ்சேனையும் தேவரும் சூழப் போயினுர்.

325. பாம்பணையில் பள்ளிகொண்டு கண்வளரும் திருமாலுக்கும், மங்கை பங்கனுகிய சிவபெருமானே பரம் பொருள் என்னும் உண்மையை மயக்கமுடைய மானிடர் அறியும் வண்ணம் வியாசமா முனிவர் எடுத்த கையினுல் உணர்த்தியருளிய காசிப்பதியைக் கண்டார்.

326. உலகத்தைப் பெருங்கடல் மூடும் பிரளய காலத்திலும் அழிவின்றித் திருமால் பிரமன் முதலிய

உம்பர் மால்அயற்கு உறையுளாய்க்
கயிலைபோல் ஒன்றாய்
எம்பி ரான்தனி மாநிழல்
தன்னில்வீற் றிருக்கும்
கம்பை சூழ்தரு காஞ்சியம்
திருநகர் கண்டான். 326

என்நிகர் எவரும் இல்லென்று
இருவரும் இகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி
அடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட் கெல்லாம்
ஒல்லையில் முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற
தழற்பெரும் சயிலம் கண்டான். 327

மண்ணுல கிறைவன் செய்யும்
மணந்தனை விலக்கி எண்தோள்
அண்ணல்ஓர் விருத்தன் போல்வந்து
ஆவண ஓலை காட்டித்

---

தேவர்க்கு இருப்பிடமாய், திருக்கயிலாச மலையை ஒத்த தாய், எம்பெருமான் மாமரத்தடியில் வீற்றிருந்தருளும் பெருமையுடையதாய் உள்ள கம்பை நதி சூழ்ந்த காஞ்சிமா நகரைக் கண்டார்.

327. 'எனக்கு நிகாரவார் எவரும் இல்லை' என்று தனித்தனி திருமாலும் பிரமனும் எண்ணிப் பிணக்குற்ற போது அவ்விருவருக்கும் நடுவே அடியும் முடியும் காணப் படாத அனற் பிழம்பாய்த் தோன்றி, அன்பு கூர்ந்து நினைப்பவர்க்கெல்லாம் விரைவில் முத்தியளிக்கும் தன்மையில் நிகரற்றதாய் விளங்கும் திரு அண்ணுமலையைத் தரிசித்தார்.

328. நடு நாட்டு மன்னனாகிய நரசிங்க முனையர் நடத்திய திருமணத்தைத் தடுத்து, மணமகனாய சுந்தரமூர்த்தியை ஆட்கொள்ளும் வண்ணம் ஓர் விருத்த வேதியனாக

துண்ணென வழக்கில் வென்று
சுந்தரன் தனை ஆட் கொள்ளும்
பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப்
பெரும்பதி தனையும் கண்டான். 328

தண்தளிர்ச் சோலைத் தில்லைத்
தபனிய மன்றில் என்றும்
தொண்டையம் கனிவாய் மாது
தொழச்சுராட் புருடன் உள்ளத்து
அண்டரும் மதிக்கல் ஆற்று
அற்புதத் தனிக்கூத் தாடல்
கண்டனன் கசிவால் உள்ளம்
களிப்புற வணங்கிப் போனான். 329

குடமுனி கரத்தில் ஏந்தும்
குண்டிகை யிருந்து நீங்கிப்
படிதனில் வேறு வேறாய்ப்
பற்பல நாமம் தாங்கிக்
கடல்கிளர்ந் தென்னச் செல்லும்
காவிரி என்னும் ஆற்றின்
வடகரை மண்ணி யின்பால்
வந்தனன் கருணை வள்ளல். 330

---

வந்து, அடிமைச் சீட்டைக் காட்டி வழக்கில் வென்று அருளிய சிவபெருமான் அமர்ந்த பெண்ணையாறு சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரையும் கண்டார்.

329. இனிய செழுஞ்சோலை சூழ்ந்த தில்லையம் பதியிலேயுள்ள பொன்னம்பலத்தில் சிவகாமி யம்மையார் வணங்க, விராட் புருடனது இதய கமலத்தில், அண்டரும் மதித்தற்கரிய முறையில் ஈசன் ஆடும் அற்புதத் தனிக் கூத்தைக்கண்டு உள்ளம் நெகிழ்ந்து களிப்புற்று வணங்கிச் சென்றார்.

330. அகத்திய முனிவரது கமண்டலத்தினின்று நீங்கிப் பூமியிலே பாய்ந்து பல கிளைகளாய்ப் பிரிந்து, பற்பல பெயர்களைத் தாங்கி, கடல் புரண்டு வருவதுபோல்

செல்லும் மாமுகில் செறிந்திடு காப்பின்
மல்லல் மாநகர் வளந்தனை நோக்கி
எல்லை யில்அறிவன் யாம்உறை தற்கு
நல்ல மாநகர் இதென்று நவின்றான். 331

வீர வேள்இது விளம்புத லோடும்
ஆரும் வானவர்கள் அம்மொழி கேளா
ஏர் எலாம்உடைய இந்நகர் சேய்ஞல்
ஊர தென்றுபெயர் ஓதினர் அன்றே. 332

## இந்திரன் அடைந்த இன்பமும் துன்பமும்

தாங்கரும் பெருந்திறல் தரர காசூரன்
பாங்கமர் குன்றொடும் பட்ட பான்மையால்
ஆங்கனம் புரந்தரன் அவலம் யாவதும்
நீங்கினன் உவகையால் நிறைந்த நெஞ்சினான். 333

விருந்தியல் அமிர்தினை விழுமம் இல்வழி
அருந்தினன் ஆமென ஆகம் தண்ணெனப்
புரந்தரன் இருந்துழிப் புக்குத் தாழ்ந்ததால்
வரந்திகழ் சிரபுர வனத்தின் தெய்வதம். 334

---

எழுந்து வரும் காவிரியாற்றின் வடகரையில் உள்ள மண்ணி நதியின் மருங்கே வந்தார் முருகப்பெருமான்.

331. கார்மேகங்கள் திரண்டு செல்ல, ஆங்கமைந்த மதில் சூழ்ந்த மாநகரின் வளத்தினை நோக்கிய முருகவேள் 'இது நாம் இருத்தற்கேற்ற நல்ல இடம்' என்றார்.

332. அம்மொழி கேட்ட வானவர் அழகெலாம் ஒருங்கே வாய்ந்த அந்நகர்க்குச் சேய்ஞலூர் என்று பெயர் இட்டார்கள்.

333. கொடிய திறம் படைத்த தாரகன் மாயமா மலையொடு மாய்ந்து ஒழிந்தமையால் இந்திரன் துன்பம் நீங்கி இன்பம் நிறைந்த மனத்தினனாய் இருந்தான்.

334. மேனி வருந்தாமல் அமிர்தத்தைப் பெற்று அருந்தியவன்போல் இந்திரன் அங்கமெல்லாம குளிர்ந் திருந்தபோது சீகாழியிலுள்ள வனத்தைக் காக்கும் தெய் வம் அவனிடம் போந்து வணங்கிற்று.

முகில்பொழி விண்ணக முதல்வன் பூண்களும்
நகில்பொதி சாந்துடை நங்கை பூண்களும்
துகில்பொதி கிழியொடு தொல்லை வைத்தவை
அகில்பொதி காட்டகத்து அடிகள் உய்த்ததே. 335

முந்துற உய்த்தபின் முதல்வ கேட்டிநீ
பைந்தொடி அணங்கொடு பரமன் காழியில்
வந்தனை நோற்றநாள் வைத்த பூண்இது
தந்தனன் கொள்கெனச் சாற்றி நின்றதே. 336

நெய்ம்மலி தழலென நீடிக் காமநோய்
இம்மென மிசைக்கொள இரங்கி ஏங்கினன்
விம்மினன் வெதும்பினன் வெய்துயிர்த்தனன்
மைம்மலி சிந்தையன் மருட்கை எய்தினன். 337

தீமை யுள்ளன யாவையும் தந்திடும் சிறப்பும்
தோயில் செல்வமும் கெடுக்கும்நல் லுணர்வினைத்
[தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திருள் உய்த்திடும் இதனால்
காம மன்றியே ஒருபகை உண்டுகொல் கருதில். 338

---

335. சூரன் கொடுமைக்கு அஞ்சி விண்ணுலகம் விட்டு வந்த நாளில், சீர்காழி வனத்தில் தன்னிடம் ஒப்புவித்த இந்திரன் நகைகளையும், இந்திராணியின் நகைகளையும் முடிப்பாகக் கொண்டுவந்து முன்னே வைத்து,

336. "ஐயனே! சிவபெருமான் வீற்றிருந்தருளும் சீகாழிப் பதியில் இந்திராணியுடன் போந்து நீர் தவம் செய்த நாளில் என்னிடம் கொடுத்து வைத்த நகைகள் இவை; பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறிற்று.

337. (இந்திராணியின் நகைகளைக் கண்டபோது) நெய்யிட்ட நெருப்புப்போல இந்திரன் மனத்தில் காமநோய் மேலிட்டது; அந் நகையினைப் பார்த்து இரங்கினன்; ஏங்கினன்; விம்மினன், வெதும்பினன்; பெருமூச்சு விட்டான்; மயக்கமுற்றான்.

338. "காமமே தீமை யெல்லாம் தரும்; சிறப்பையும் செல்வத்தையும் கெடுக்கும். நல்லறிவைத் தொலைக்

## முருகவேள் சிவபூசை செய்தல்

கரிய வந்தனைச் செய்யவன் கருணைசெய் தருளி
வருதி என்றுகூய், மறைகளும் வரம்புகாண் கில்லா
அரனதாள்களை அருச்சனை புரிதும்நாம் அதனுக்கு
உரிய வாய்பல் கரணமும் தருதிஎன் றுரைத்தான்.

இருவரும் உணர்கிலா திருந்த தாள்களைச்
சரவண மிசைவரு தனயன் பூசனை
புரிதலும் உமையொரு புடையிற் சேர்தர
அருள்விடை மீமிசை அண்ணல் தோன்றினான்.

ஆயது காலை தன்னில்
அருவுரு ஆகும் அண்ணல்
சேயினை நோக்கி உன்தன்
வழிபடற் குவகை செய்தேம்
நீஇது கோடி என்று
நிரந்த பல்புவனம் முற்றும்
ஏயென முடிவு செய்யும்
படைக்கலத் திறையை ஈந்தான். 341

---

கும்; நன்னெறியை விலக்கி நரகத்திற் சேர்க்கும்; ஆத லால் அதனினும் பெரும்பகை வேறுண்டோ?''

339. (என்று எண்ணிக் காமத்தைத் தவிர்த்தற்காக முருகவேள் முன்னே சென்றான் இந்திரன்.) அங்ஙனம் சென்ற வானவர் தலைவனைப் பெருமான், வருக என்று அழைத்து "இங்கு நாம் சிவபிரான் திருவடிகளை அருச்சனை செய்து வணங்க விரும்புகின்றோம். அதற்கு வேண்டிய உபகரணங்களைச் சேகரித்துத் தருக" என்றுரைத் தார்.

340. அவ்வாறே இந்திரன் சேகரித்துத் தந்த பொருள்களால் இருவரும் அறியாத் திருவடிகளை முருக வேள் பூசனை செய்ய, ஈசன் உமையம்மையோடு இடப வாகனத்தின்மேல் எழுந்தருளினார்.

341. (அக்காட்சியைக் கண்டு உச்சிமேற் கரங் குவித்துத் தொழுது போற்றினார் முருகப்பெருமான்.) மைந்

மற்றிது நம்பால் தோன்றும் வான்படை
    மாயன் வேதா
பெற்றுள தன்று யார்இப் பெரும் படை
    பரிக்கும் நீரார்
முற்றுயிர் உண்ணும் வெஞ்சூர்
    முரண்பகை தொலைப்பான் ஈது
பற்றுதி மைந்த என்னுப்
    பராபரன் அருளிப் போனுன். 342

## நாடும் காடும் கடந்து முருகன் திருச்செந்தூர் சேர்தல்

மண்ணியம் கரையின் தென்பால்
    வகுத்தசேய் ஞல்லூர் நீங்கி
எண்ணிய உதவும் பொன்னி
    இகந்து இடை மருதி னேடு
தண்ணியல் மஞ்ஞை ஆடும்
    தண்டுறை பறிய லூரும்
கண்ணுதல் இறைவன் தானம்
    ஏனவும் கண்டு போனுன். 343

தனது வழிபாட்டின் தன்மையை அறிந்து மகிழ்ந்த ஈசன் நொடிப்பொழுதில் உலகமெல்லாம் அழிக்க வல்ல பாசுபதம் என்னும் அஸ்திரத்தை அளித்தருளி,

342. "இது நம்மிடம் தோன்றிய சிறந்த படை; மாயனும் பிரமனும் இதனைப் பெற்றவரல்லர். இப்பெரும் படையை யாரால் தாங்க இயலும்? உயிர்களை எல்லாம் இது நாசம் செய்யும. கொடிய சூரனது வலிய படைகளைத் தொலைத்தற்காக இதனைத் தருகின்ழேம்; பெற்றுக்கொள் குமார" என்று கூறி மறைந்தருளினுர்.

343. பின்பு மண்ணி நதியின் தென்கரையில் அமைந்த திருச்சேய்ஞலூரை விட்டு, காவிரி யாற்றைக் கடந்து, திருவிடை மருதூர் என்னும் திருப்பதியையும், திருமயிலாடு துறையையும், திருப் பறியலூரையும் மற்றும் சிவபெருமான் அமர்ந்தருளும் பழம் பதிகளையும் கண்டு சென்ழுர் குமரவேள்.

எழில்வளம் சுரக்கும் தொல்லை
இலஞ்சியம் கானம் நோக்கி
மழவிடை இறைவன் பொற்றாள்
வணங்கியே மலர்மென் பாவை
முழுதுள திருவும் என்றும்
முடிவில்மங் கலமும் எய்த
விழுமிதின் நோற்றுப் பெற்ற
வியன்திரு ஆரூர் கண்டான். 344

கள்ளி பட்டன பாலையும் தீந்தன கரிந்து
முள்ளி பட்டன எரிந்தன குராமரம் முளிந்து
கொள்ளி பட்டன காரகில் அன்னதால், கொடுந்தீப்
புள்ளி பட்டது போன்றது பாலையம் புவியே. 345

இன்ன தாகிய பாலையம் சுரத்திடை இறைவன்
தன்ன தாகிய தானைக ளொடும்தலைப் படலும்
மின்னு மாமுகில் பொழிந்தபின் தண்ணளி மிக்கு
மன்னு கின்றபூங் குறிஞ்சிபோல் ஆயதவ் வனமே.

சுரமது கடந்து நீங்கிச்
சோதிவேல் உடைய வள்ளல்

---

344. அழகிய வளம்பெருகும் இலஞ்சியங் கானம் என்னும் பழம் பதியில் கோயில்கொண்ட ஈசன் திருவடிகளை வணங்கிப் பின்னர் திருமகள் பெருந்தவம் புரிந்து முற்றிய செல்வமும் முடிவற்ற மங்கலப்பேறும் பெற்ற திருவாரூரைக் கண்டார்.

345. (இவ்வாறு தெற்கு நோக்கிச் செல்லும் பொழுது பாலைவனம் ஒன்று குறுக்கிட்டது.) அங்கே கள்ளி மரங்கள் கரிந்தன. பாலைமரங்கள் பட்டன. முள்ளிச்செடிகள் எரிந்தன. குரவ மரமும், காரகிலும கொள்ளிக் கட்டையாயின. இங்ஙனம் எங்கும் தீப்புள்ளி பட்டாற் போன்றிருந்தது அப்பாலை.

346. அங்கு முருகவேள் சேனையோடு எழுந்தருளிய போது, அக்கொடிய காடு பெருமழையாற் குளிர்ந்த அழகிய குறிஞ்சி நிலம் போலாயிற்று.

347. இத்தகைய பாலைவனத்தைக் கடந்து வேற் படை தாங்கிய குமரவேள் செங்குன்றூர் என்னும் சிவப்

விரிபுனல் சடிலத் தண்ணல்
மேவுசெங் குன்றூர் நோக்கிப்
பருமணி வயிரம் முத்தம்
பலவளம் பிறவும் ஆழித்
திரையெறி அலைவாய் ஆகும்
செந்திமா நகரம் புக்கான். 347

## முருகன் அசுரர் திறம் கேட்டல்

துறந்து நீதிஅமர் சூர்முதல் ஆனோர்
பிறந்த வாறும்அவர் பேணிய நோன்பும்
இறந்த செய்யவரம் எய்திய வாறும்
சிறந்து பின்அரசு செய்திடு மாறும். 348

மற்ற வெய்யவர்தம் மாயமும் முற்கொள்
வெற்றி யும்வலியும் மேன்மையும் நும்பால்
இற்றை நாள்வரை இயற்றிய துன்பும்
முற்றும் ஒன்றற மொழிந்திடு கென்றான். 349

## வியாழன் மறுமொழி கூறல்

அறிதி எப்பொருளும் ஆவிகள் தோறும்
செறிதி எங்கள் துயர் சிந்துதல் முன்னிக்

---

பதியை வணங்கி, மணிகளையும் வயிரங்களையும் முத்துக்களையும் மற்றப் பொருள்களையும் அலைகளால் அள்ளி எறியும் திருச்சீர் அலைவாய் என்னும் செந்திமா நகரைச் சேர்ந்தார்.

348. அங்கே அமர்ந்து இந்திரனை நோக்கி "கொடுங்கோல் செலுத்தும் சூரன் முதலிய அசுரர்கள் பிறந்த வாறும், அவர் தவம் புரிந்தவாறும், வரம்பெற்ற வாறும், அரசு செய்த வாறும்,

349, இன்னும் அவர் இயற்றிய மாயமும், அடைந்த வெற்றியும், அவர் தம் வலிமையும மேன்மையும், உனக்கு அவர் இழைத்த துன்பமும் ஒன்று விடாமற் சொல்லுக" எனப் பணித்தார் முருகவேள்.

350. (அந்நிலையில் இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி வாக்கில் வல்லவராகிய வியாழன் எழுந்து)

குறிய சேய்உருவு கொண்டனை யார்க்கும்
இறைவ நின்செயலை யார்உணர் கிற்பார். 350

வெய்யர் தன்மையை வினவிய தன்மை
ஐய அன்னதை அறிந்திட அன்றே
கைய ரேம்துயர் களைந்துள மீதில்
செய்ய இன்புதவு சீர்அருள் ஆமால். 351

ஆகையால் அவுணர் தன்மைகள் எல்லாம்
போகும் எல்லைபுகல் கின்றனன் என்று
வாகை சேர்குமர வள்ளலை நோக்கி
ஓகையோ டரசன் ஓதிடு கின்றான். 352

"எவர்க்கும் முதல்வராகிய எம்பெருமானே! நீர் எல்லாப் பொருளும் அறிவீர்! எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கின்றீர்! எங்கள் துன்பத்தைத் துடைக்கத் திருவுளங்கொண்டு குழந்தை வடிவம் கொண்டீர்! உமது செய்கையை யாவரே உணரவல்லார்?

351. ஐயனே! நீர் அசுரரது தன்மையை வினவியது அதனை அறிந்து கொள்ளும் பொருட்டன்று. அடிமைகளாகிய எமது துன்பத்தைக் களைந்து சிறந்த இன்பம் தரும் திருவருளாலே யாகும்.

352. ஆதலால் அசுரர் தன்மைகளையெல்லாம் அடியேன் அறிந்த வரை சொல்கின்றேன்" என்று குமாரவேளை நோக்கிக் கூறலுற்றார்.

ராஜன் எலெக்ட்ரிக் பிரஸ், சென்னை.—19441022—1—10